


VIRAKESARI

# வீரகேசரி

THE PREMIER NATIONAL TAMIL DAILY IN SRI LANKA

Registered as a Newspaper at the G.P.O No. QD/133/News/2021 www.virakesari.lk

பிராந்திய,நகரப்பதிப்பு




மலர் : 92 இதழ்: 106 கொழும்பு பிலவ வருடம் கார்த்திகை மாதம் 23 ஆம் திகதி வியாழக்கிழமை (09.12.2021) ஹிஜ்ரி 1443 ஜ.அவ்வல் 04 விலை :ரூ.30 பக்கங்கள் : 20

## உடன்படிக்கையை வெளிப்படுத்துங்கள்

**பஷில் நினைத்த அனைத்தையும் முன்னெடுக்க உரிமை இல்லையென ரணில், அநுர சபையில் தெரிவிப்பு**

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

நியூ போர்ட்ரஸ் நிறுவனத்துக்கும் அரசாங்க திறைசேரி செயலாளருக்கும் இடையிலான இணக்கப்பாட்டு ஒப்பந்தம் என்ன என்பதையும், இந்த உடன்படிக்கையில் பொதுமக்களின் பார்வையில் இருந்து மறைக்கப்படும் சரத்துக்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும் சபைக்கு அறிவிக்க வேண்டும் என்பதை ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் 9

# எரிவாயு விடயத்தில் பெரும் நெருக்கடி

**நுகர்வோரை பாதுகாப்பதற்கு முடியாத நிலை; சபையில் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண**

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசீம்)

நாட்டில் நானூறுக்கும் அதிகமான எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், இன்றும் வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டே உள்ளன. இதற்கு முடிவு காண முடியாத நிலையிலும், நுகர்வோரை பாதுகாக்க முடியாத நெருக்கடி நிலையிலுமே நாம் உள்ளோம் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம் என சபையில் தெரிவித்த நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்க 9

**துறைமுகம்,பெற்றோலியம்,மின்சாரத்துறை ஊழியர்கள்**

## கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டப் பேரணி



(இராஜதுரை ஹஷான்)

யுகதனவி மின்நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்க அரசாங்கம் முன்னெடுத்துள்ள தீர்மானத்துக்கு எதிர்ப்புதெரிவித்து துறைமுகம்,பெற்றோலியம், மின்சாரத்துறை ஆகிய துறைகளின் 9

**220 இலட்சம் மக்களை பட்டினி, பஞ்சத்தில் இருந்து பாதுகாக்க என்ன வழி?**

## நாணய நிதியத்தை நாடுங்கள்

**ஹர்ஷ டி சில்வா சபையில் அறிவுரை**

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசீம்)

அடுத்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் மொத்தமாக 4843 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக செலுத்த வேண்டியுள்ள நிலையில் எமது கையிருப்பில் வெறும் 140 மில்லியன் டொலர்களே உள்ளன. கடன்களில் இருந்து மீளவும், மக்களை பாதுகாக்கவும் 9



இலங்கை வந்துள்ள இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் காதர் மொஹிதீன் உள்ளிட்ட குழுவினரை கௌரவிக்கும் முகமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஏற்பாடு செய்திருந்த இராப்போசன நிகழ்வு நேற்று முன்தினம் வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நடைபெற்றது. இதில் இந்திய துணை உயர்ஸ்தானிகர் வினோத் கே.ஜேகப், அமைச்சர்கள், மு.கா.விலிருந்து இடைநிறுத்தப்பட்ட எம்.பி.க்கள் உட்பட பலரும் கலந்துகொண்டபோது...

## பாடசாலைகளில் கொத்தணிகள்

**எச்சரிக்கிறது இலங்கை பொது சுகாதார பரிசோதகர் சங்கம்**

(எம்.மனோசித்ரா)

பாடசாலைகளுக்குள்ளும் கொவிட் கொத்தணிகள் உருவாக ஆரம்பித்துள்ளன. இந்த நிலைமையை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறில்லை எனில் மீண்டும் 10

## ரயில் மோதி ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று பேர் உயிரிழப்பு

**தற்கொலையா? விசாரணைகள் தீவிரம்**



(அட்டன் நிருபர்)

பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி நேற்று பயணித்த உடரட்ட மெனிக்கே ரயில் மோதி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் 10

## புதிய பிறழ்வுகள் தோற்றம் பெறும் வாய்ப்புகள் அதிகம்

**விசேட வைத்திய நிபுணர் அன்வர் ஹம்தானி**

(எம்.மனோசித்ரா)

கொவிட் தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சினால் தொடர்ந்தும் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 9

## யாசகம் செய்யும் நிலையில் முன்னாள் போராளிகள்

**அரசு வாக்குறுதியை நிறைவேற்றவில்லை செல்வம் எம்.பி.சபையில் குற்றச்சாட்டு**

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசீம்)

அரசாங்கம் வாக்குறுதியளித்ததுபோல் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க தவறியுள்ளதாகவும், பலர் தற்கொலையும் செய்துகொள்ளும் நிலையில், மேலும் பல முன்னாள் போராளிகள் வீதிகளில் 10

## இந்திய முப்படைத் தளபதி ஹெலி விபத்தில் பலி



இந்திய முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத் உள்ளிட்ட 13 பேர் ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்துள்ள சம்பவம் அதிர்ச்சியை 9

**காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள்**

## நாளை போராட்டம்

(நா.தனுஜா)

வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தி வடக்கு, கிழக்கு 9

## ஆளும் கூட்டணியில் நிலைத்திருப்பதா?

**ஜனாதிபதி, பிரதமருடன் தனித்து பேச தீர்மானம்; சுதந்திர கட்சி**

(இராஜதுரை ஹஷான்)

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் சுதந்திர கட்சி பிரதான கட்சியாக உள்ளது. கூட்டணி அமைக்கும் போது கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பல விடயங்கள் முறையாக செயற்படுத்தப்படவில்லை. கூட்டணியின் எதிர்காலம் குறித்து ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் சுதந்திர கட்சி தனித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட தீர்மானித்துள்ளது 9

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுனின் கரட் எதுவாயினும்
முற்பணம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.
ரூ.87,000/=
• அதிகபட்ச இரகசியதன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
செலான் தங்கக் கடன்
Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka) கம்பனி பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி
செலான் வங்கி

## சமையல் எரிவாயு சிலிண்டர்களை உடனடியாக மீளப்பெறுங்கள்

**நுகர்வோர் அதிகார சபை அறிவுறுத்தல்**

(இராஜதுரை ஹஷான்)

எரிவாயு சிலிண்டர் விற்பனை நிலையங்களுக்கு கடந்த 4ஆம் திகதிக்கு முன்னர் விநியோகித்த பயன்படுத்தாத நிலையில் உள்ள சமையல் எரிவாயு சிலிண்டர்களையும், 9

**சபையில் அசம்பாவிதங்கள்**

## ஆராய்வதற்கு 11 பேர் கொண்ட குழு நியமனம்

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசீம்)

பாராளுமன்றத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கவும் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்கு 10



உங்கள் வியாபாரம் அல்லது அதன் சொத்துக்களை டயலொக் ஃபைபர் உடன் இணைத்து, இதுவரை அனுபவித்திராத அதியுயர் செயற்திறன், தடையற்ற இணைப்பு மற்றும் க்லௌட் சேவைகளைப் பெற்று உங்கள் வியாபாரத்தை முன்னேற்றிடுங்கள்.
ஷானக 0773 334 804
நிலூஷி 0777 330 327
www.business.dialog.lk
• தடையற்ற சேவை
• கட்டமைக்கக்கூடிய வேகங்கள்
• புரோட்பாண்ட், IPTV, வீடியோ ஸ்ட்ரீமிங் ஆகியவற்றுக்கு ஒற்றை தீர்வு
• தனிப்பயனாக்கப்பட்ட ஃபைபர் தீர்வுகள்
உங்கள் வியாபாரத்தை இன்றே எதிர்காலத்துக்கு இட்டுச் செல்லும்
Dialog ENTERPRISE

# சபையில் இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பாக உத்தரவு விடுக்கவேண்டும்

## இல்லாவிட்டால் நீதிமன்றம் செல்லவேண்டிவரும்; லக்ஷ்மன் கிரியெல்ல சபாநாயகருக்கு எடுத்துரைப்பு

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை தினங்களில் இடம்பெற்ற அசம்பாவிதங்களில் கண்ணால் கண்ட விடயங்கள் தொடர்பில் சபாநாயகர் உத்தரவு ஒன்றை பிறப்பிக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்த விடயத்தை உயர் நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்ல வேண்டிவரும் என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக் ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று புதன்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கையாக சபாநாயகரின் அறிவிப்பு இடம்பெற்றது. அதில் பாராளுமன்றத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க குழு பெயரிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒழுங்கு பிரச்சினை ஒன்றை எழுப்பி குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், பாராளுமன்றத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக ஆராய குழு பெயரிடப்பட்டதை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் அந்த குழுவின் மூலம் எதிர்ப்பார்ப்பது என்ன என்பது தொடர்பில் ஒன்றும் தெளிவில்லாமல் இருக்கின்றது. அத்துடன் சபையில் இடம்பெற்றதை கண்களால் கண்ட சாட்சியாக சபாநாயகராகிய நீங்கள் மாத்திரமே இருக்கின்றீர்கள். அக்கிராசனத்தில் இருந்து நீங்கள் அனைத்தையும் அவதானித்துக்கொண்டுதான் இருந்தீர்கள். அதனால் நீங்கள் கண்டவிடயம் தொடர்பில் உத்தரவொன்றை பிறப்பிக்கவேண்டும். அதனை செய்யவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர்களின் வரப்பிரசாத சட்டத்துக்கமைய, உயர் நீதிமன்றத்தால் மாத்திரம் தண்டனை வழங்கக்கூடிய குற்றங்களாக, பாராளுமன்றத்துக்கு வரும் உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்துக்கு வெளியிலும் அவர்கள் தெரிவித்த கருத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களை தாக்குதவது, அல்லது அச்சுறுத்துவது அல்லது தடைகளை ஏற்படுத்துவது உயர் நீதிமன்றத்தினால் தண்டனைக்குரிய குற்றமாகும்.

சபையில் இடம்பெற்ற விடயங்களில் நீங்கள் கண்ட விடயம் தொடர்பாக உத்தரவிடவேண்டும். இந்த விடயத்தை பாராளுமன்றத்துக்கு வெளியில் கொண்டு செல்ல எமக்கு விருப்பமில்லை. அதனால் இது தொடர்பாக உத்தரவிட வேண்டும். இல்லாவிட்டால் எமக்கு உயர்நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்ல வேண்டிவரும் என்றார்.

# எங்காவது முறையிடுங்கள்

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சபையில் தெரிவிப்பு

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசீம்)

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு சபாநாயகர் குழு அமைத்துள்ளார். அதனைவிடுத்து இதுதொடர்பாக உயர் நீதிமன்றம், சர்வதேச பாராளுமன்றத்துக்கு கொண்டுசெல்வதாக இருந்தால் அதனை முறையிடுங்கள். அதனை நாங்கள் எதிர்க்க மாட்டோம் என சபைமுதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த வாரம் நடைபெற்ற குழப்ப நிலை தொடர்பாக சபாநாயகர் நேற்று குழுவொன்றை நியமித்தார். இது தொடர்பில் சபையில் ஆளும் தரப்பும் எதிர்த்தரப்பும் கருத்துத் தெரிவித்தன. இதன் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

சபாநாயகர் நியமித்த குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் பலரும் கருத்து முன்வைத்தார்கள். சபாநாயகருக்கு உள்ள அதிகாரத்திற்கு அமைய இந்தக் குழுவை நியமித்துள்ளார். அதன் பொறுப்புகளையும் தெரிவித்தார். அததேபோன்று சபையில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைப் பிரயோகம் தொடர்பில் கட்சித் தலைவர் கூட்டத்தில் சபாநாயகர் தெரிவித்தார். அந்த வசனங்கள் உகந்ததல்ல என்பதால் சபையில் கூற முடியாது.

நிலையியற் கட்டளைப்பிரகாரம் சபாநாயகரின் அறிவிப்பு உயர்வானது. அநுர பண்டாரநாயக்கவின் தீர்ப்புடன் அனைவரும் அன்று உடன்பட்டார்கள். சமல் ராஜபக்ஷவும் பாராளுமன்றத்திற்கே உச்ச அதிகாரம் இருப்பதை உறுதி செய்தார். நடந்த சம்பவங்களுக்கு காரணமான வார்த்தைப் பிரயோகங்கள் மற்றும் சபாநாயகர் தொடர்பில் பயன்படுத்திய வார்த்தைகள் தொடர்பில் வெட்கப்படுகிறோம் என்றார்.

# பிரியந்த படுகொலை தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை அவசியம்

## பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானுக்கு சட்டத்தரணிகள் சங்கம் கடிதம்

(நா.தனுஜா)

பாகிஸ்தானின் சியல்கோட் நகரில் இலங்கைப்பிரஜையான பிரியந்த குமார தியவதன மிகமோசமாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் எவ்வித பக்கச்சார்பு மற்ற முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதுடன் குற்றவாளிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்திருக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இவ்விசாரணைகள் குறித்து தாம் உன்னிப்பாகக் கண்காணிக்கவுள்ளதாகவும் தெரிவித்திருக்கின்றது.


இதுகுறித்து இலங்கையிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஊடாக அந்நாட்டுப் பிரதமர் இம்ரான்கானுக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

சட்டத்தரணிகள் சங்கம் இலங்கையிலுள்ள 21 ஆயிரத்திற்கும் அதிகமான சட்டத்தரணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மீயுயர் கட்டமைப்பாகும்.

பாகிஸ்தானின் சியல்கோட் நகரில் கடந்த 3 ஆம் திகதி இலங்கைப் பிரஜையான பிரியந்த குமார தியவதன மிகமோசமாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மிகுந்த கவலையடைந்துள்ளோம். இந்த மிலேச்சத்தனமான படுகொலையை உடனடியாகக் கண்டனம் செய்த உங்களுடைய நடவடிக்கையைப் பாராட்டுகின்றோம்.

அதேவேளை பிரியந்த குமார தியவதனவின் படுகொலை தொடர்பில் எவ்வித பக்கச்சார்புமற்ற முழுமையான விசாரணைகளை முன்னெடுக்குமாறும் குற்றவாளிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுப்பதன் ஊடாக பாதிக்கப்பட்ட தரப்பினரின் உரிமைகளைப் பாதுகாக்குமாறும் பாகிஸ்தான் அரசாங்கத்தையும் அதன் சட்ட அமுலாக்கக்கட்டமைப்புக்களையும் வலியுறுத்துகின்றோம்.

மேலும் இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளைஇலங்கைசட்டத்தரணிகள்சங்கம் உன்னிப்பாகக் கண்காணிக்கவேண்டியதன் அவசியத்தை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை என்பதுடன் அதற்காக நாம் பாகிஸ்தான் சட்டத்தரணிகள் சங்கத்தின் உதவியையும் நாடியிருக்கின்றோம்.




## வீடுகளில் பயன்படுத்திக்கொண்டிருந்த

# எரிவாயு சிலிண்டர்களை மீளப்பெற வேண்டும்

## அநுரகுமார திஸாநாயக்க சபையில் கோரிக்கை

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசீம்)

எரிவாயு சிலிண்டர்களில் இடம்பெற்ற இரசாயன கலவையின் அளவில் இடம்பெற்ற மாற்றமே சிலிண்டர்கள் தீப்பற்ற காரணம் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதனால் பூதாகரமாகியுள்ள சமையல் எரிவாயு சம்பந்தமான பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கைத்தொழில் அமைச்சு, வர்த்தக அமைச்சு மற்றும் 4 இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

கடந்த 6 ஆம் திகதி முதல் நாட்டில் 430 எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதுடன் அதனால் இரண்டு பேர் மரணம் அடைந்துள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. எரிவாயு சிலிண்டர்களில் இடம்பெற்ற இரசாயன கலவையின் அளவில் இடம்பெற்ற மாற்றமே சிலிண்டர்கள் தீப்பற்ற காரணம் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதனால் பூதாகரமாகியுள்ள சமையல் எரிவாயு சம்பந்தமான பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் எரிவாயு சிலிண்டர் பிரச்சினைக்கு தீர்வாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையானது நிறுவனங்கள் மற்றும் வீட்டுப் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ள எரிவாயு சிலிண்டர்களை மீள பெற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளது. ஆயினும் அந்த எரிவாயு சிலிண்டர் திறக்கப்படாமல் இருப்பது அவசியம் என கேட்டுக் கொண்டுள்ளது. அது எந்த வகையிலும் சாத்தியமாகாது.

ஏனெனில் எரிவாயு சிலிண்டர்கள் வீட்டுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ உபயோகத்திற்காக எடுத்துச் செல்பவர்கள் அதனை உடனடியாகவே பாவனைக்கு எடுத்திருப்பார்கள் என்பதை நுகர்வோர் அதிகார சபை புரிந்து கொள்ள வேண்டும். அதனால் திறக்கப்பட்டிருக்கும் சிலிண்டர்களையும் மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு சிலிண்டர்கள் பாவிக்கப்பட்டிருந்தால், அந்த சிலிண்டர்களின் பாரத்தை நிறுத்துப்பார்த்து, அதற்கான செலவை கழித்து, சிலிண்டர்களை மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

# யுகதனவி மின்நிலைய ஒப்பந்தம் குறித்து அடுத்த அமைச்சரவையில் முக்கிய தீர்மானம்

## அமைச்சர் காமினி லொக்குகே தகவல்

(இராஜதுரை ஹஷான்)

நாட்டில் இனிவரும் காலங்களில் மின் விநியோக தடை ஏற்படாது. மின்சார சபை தொழிற்சங்கத்தினர் முன்வைத்துள்ள கோரிக்கைகளை மீள்பரிசீலனை செய்ய ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். யுகதனவி மின்நிலைய ஒப்பந்தம் குறித்து அடுத்த வாரம் இடம்பெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் அதிக கவனம் செலுத்தப்படும் என மின்சாரத்துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டின் தேசிய மின்கட்டமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை நாடு தழுவிய ரீதியில் மின் துண்டிப்பு ஏற்பட்டது.திடீர் மின்துண்டிப்பு தொடர்பிலான விசாரணை மின்சாரத்துறை அமைச்சு மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஒரு தரப்பினர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

6 பிரதான கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கத்தினர் கடந்த மாதம் 25ஆம் திகதி முதல் சட்டப்படி வேலை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.பொறியியலாளர் சங்கத்தினர் சட்டப்படி வேலை தொழிற்சங்க போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டுள்ளனர்.

மின்சாரத்துறை அமைச்சு,இலங்கை மின்சார சபை ஆகியவற்றின் தொழிற்சங்கத்தின் தலைவர்களுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை சாதகமாகவுள்ளது.தொழிற்சங்கத்தினர் முன்வைத்த கோரிக்கைகளை மீள்பரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாட்டில் இனிவரும் காலங்களில் மின் விநியோக தடை ஏற்படாது.மின்சார சபை பொறியியலாளர் சங்கத்தினர் முன்வைத்துள்ள 6 பிரதான கோரிக்கைகள் தொடர்பிலும்,யுகதனவி மின்நிலையத்தின் 40சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்திற்கு வழங்கும் தீர்மானத்திற்கு மின்சார சபை பொறியியலாளர் சங்கத்தினர் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள்.

யுகதனவி மின்நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்திற்கு வழங்கும் தீர்மானம் தொடர்பில் எதிர்வரும் வாரம் இடம்பெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் அதிக கவனம் செலுத்தப்படும். அரசாங்கம் தான்தோன்றித்தனமான முறையில் செயற்படவில்லை. தொழிற்சங்கத்தினர் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு அதிக கவனம் செலுத்தப்படும் என்றார்.

## இளம் கவிஞர் அஹ்னாப் ஜஸீம் விவகாரம்

# பிணைக்கு எதிர்ப்பில்லை சட்ட மா அதிபர் அறிவிப்பு

(எம்.எப்.எம்.பஸீர்)

''நவரசம்'' என்ற கவிதைத் தொகுப்பு புத்தகத்தை எழுதியமைக்காக கைதுசெய்யப்பட்டுள்ள அஹ்னாப் ஜஸீம் எனும் இளம் கவிஞர் கொழும்பு விளக்கமறியல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கு பிணையளிக்க எதிர்ப்புக்களை முன் வைக்கப்போவதில்லை என உயர் நீதிமன்றுக்கு சட்ட மா அதிபர் நேற்று அறிவித்தார்.

அஹ்னாபின் கைதும் தடுப்புக் காவலும் சட்டவிரோதமானது எனக் கூறி உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எஸ்.சி.எப்.ஆர். ஏ 114/21 எனும் அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று பரிசீலனைக்கு வந்தபோது, சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நரின் புள்ளே இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றைய தினம் குறித்த மனு மீதான பரிசீலனைகள் உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ். துரைராஜா தலைமையிலான குமுதினி விக்ரமசிங்க மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரரான அஹ்னாப் ஜஸீம் சார்பில் மன்றில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.எம். இல்லியாஸ், சட்டத்தரணிகளான சஞ்சய வில்சன் ஜயசேகர, லக் ஷ்மனன் ஜயகுமார், ஸ்வஸ்திகா அருலிங்கன் தரிந்து ரத்நாயக்க ஆகியோருடன் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி கனக ஈஸ்வரன் ஆஜரானார். இதன்போது மனுவின் பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நரின் புள்ளே, அஹ்னாப் ஜஸீமுக்கு புத்தளம் மேல் நீதிமன்றில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அங்கு முன்வைக்கப்பட்டுள்ள பிணை கோரிக்கைக்கு சட்ட மா அதிபர் எதிர்ப்புகளை முன்வைக்க போவதில்லை என தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டார். அந்த வழக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி அங்கு விசாரணைக்கு வருவதாகவும் அவர் கூறினார்.

அஹ்னாப் ஜஸீமுக்காக மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரன், சட்ட மா அதிபரின் குறித்த நிலைப்பாட்டை வரவேற்றார். அத்துடன் வழக்கை முன்னெடுத்து செல்ல தயாராக இருப்பதாகவும் அதற்காக மேல் நீதிமன்றின் பிணை உத்தரவு பரிசீலிக்கப்படும் நாளுக்கு பின்னரான திகதியொன்றினை தெரிவு செய்வது சிறந்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந் நிலையில், சட்ட மா அதிபர் எதிர்வரும் 15 ஆம் திகதி புத்தளம் மேல் நீதிமன்றில், அஹ்னாப் ஜஸீம் தொடர்பிலான வழக்கில் பிணை கோரிக்கையை எதிர்ப்பதில்லை என உயர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளதாக நீதியரசர்கள் பதிவு செய்தனர்.

அது தொடர்பில் ஏதும் சிக்கல் இருப்பின், உடனடியாக உயர் நீதிமன்றுக்கு நகர்த்தல் பத்திரம் ஊடாக அறிவிக்க முடியும் எனவும் நீதியரசர்கள் மனுதாரர்களுக்கு அறிவித்தனர். இந் நிலையில் மனுதாரர்கள் கோரியுள்ள வழக்கை விசாரணைக்கு ஏற்பது மற்றும் இடைக்கால நிவாரணம் தொடர்பிலான விடயங்களை தீர்மானிக்க வழக்கானது எதிர்வரும் 2022 மார்ச் 8 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அஹ்னாப் ஜஸீமுக்கு மேல் நீதிமன்றில் பிணை வழங்கப்படுமாக இருந்தால், அவசர விடயமாக அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலிக்க வேண்டி வராது என்பதால் உயர் நீதிமன்றம் இவ்வாறு தீர்மானித்தது.

# பண்டிகை காலங்களில் மிகவும் அவதானத்துடன் செயற்படவும்

## மக்களை கோரும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(எம்.மனோசித்ரா)

நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர் எண்ணிக்கையில் பாரதூரமான அதிகரிப்பு ஏற்படாவிட்டாலும், தொற்றாளர் எண்ணிக்கை குறைவடையாமல் காணப்படுகின்றமை அவதானத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். எனவே பண்டிகை காலங்களில் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு மக்களை கேட்டுக் கொள்வதான பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் 500 ஆகக் காணப்பட்ட நாளாந்த தொற்றாளர் எண்ணிக்கை தற்போது 700 வரை அதிகரித்துள்ளமை விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும். தொற்றாளர் எண்ணிக்கையை இதனை விட குறைவடையச் செய்வதே எமது எதிர்பார்ப்பாகும். அதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நாடு திறக்கப்பட்டுள்ள நிலையில் வெவ்வேறு சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கமைய தொற்றாளர் எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. தற்போது பாரியளவில் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிக்காவிட்டாலும், நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படாமை அவதானம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

மகிழ்ச்சிக்காக ஏற்பாடு செய்யப்படுகின்ற நிகழ்வுகளில் விருந்துபசாரங்களின் போது கொவிட் தொற்று அதிகமானோருக்கு பரவக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகும். இதற்கு முன்னர் சிறிய கொத்தணிகள் ஏற்பட்ட அனைத்து சந்தர்ப்பங்களிலும், அலுவலகங்களில் ஒன்றாக உணவு உண்பவர்கள் மத்தியில் வைரஸ் பரவல் அதிகமாகக் காணப்பட்டமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

எனவே பண்டிகை காலங்களில் இவ்வாறான செயற்பாடுகளின் போது மிகவும் அவதானமாக செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார விதிமுறைகளை முறையாக பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

# சுபயோகம்

**09.12.2021 பிலவ வருடம் கார்த்திகை மாதம் 23 ஆம் நாள் வியாழக்கிழமை**

சுக்கில பட்ச சஷ்டி திதி பின்னிரவு 1.58 வரை. அதன்மேல் ஸப்தமி திதி. அவிட்டம் நட்சத்திரம் பின்னிரவு 3.51 வரை. அதன்மேல் சதயம் நட்சத்திரம். சிராத்த திதி வளர்பிறை சஷ்டி. சித்த யோகம். மேல்நோக்கு நாள். சந்திராஷ்டம நட்சத்திரம் புனர்பூசம், பூசம். சுபநேரங்கள் பகல் 10.30 – 11.30, மாலை 4.30 – 5.30, ராகுகாலம் 1.30 – 3.00, எமகண்டம் 6.00 – 9.30, குளிகை காலம் 9.00 – 10.30, வாரசூலம் தெற்கு, பரிகாரம் பால்.

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | |
| குரு | தினசரி கிரகநிலை<br>கார்த்திகை 23 வியாழன் மாலை 4.11 கும்ப சந்திரன் | | |
| சந், சுக் சனி | | | |
| புத | சூரி, செவ் கேது | | |

மேடம் – நட்பு, ஆதாயம்
இடபம் – கவலை, வேதனை
மிதுனம் – ஜெயம், புகழ்
கடகம் – சிக்கல், சங்கடம்
சிம்மம் – மகிழ்ச்சி, அனுகூலம்
கன்னி – பெரியோர் ஆசி
துலாம் – புகழ், பாராட்டு
விருச்சிகம் – தோல்வி, கவலை
தனுசு – புகழ், செல்வாக்கு
மகரம் – நோய், சோர்வு
கும்பம் – பணியில் மேம்பாடு
மீனம் – சுபம், மங்களம்

விநாயகர் சஷ்டி விரதம். கால சர்ப்ப தோஷம்.

அதிர்ஷ்ட எண்கள் – 5, 6
பொருந்தா எண்கள் – 8, 2
அதிர்ஷ்ட வர்ணங்கள் – மஞ்சள், நீலம்

**இராமரத்தினம் ஜோதி**
**(தெஹிவளை ஸ்ரீ விஷ்ணு கோயில்)**

# மதம், மொழி என்பவற்றால் மக்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தக்கூடாது

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் காதர் மொஹிதீன்



எந்தவொரு விடயத்தையும் மனிதாபிமானத்தோடு நோக்க வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்துகின்றோம். அனைத்து மக்களும் அந்நியோன்யமாக விட்டுக் கொடுப்புடன் நடந்துகொள்ள வேண்டுமே தவிர மதத்தையோ மொழியையோ வைத்து மக்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தக் கூடாது என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவரும் முன்னாள் இந்திய லோக் சபா உறுப்பினருமான கே.எம்.காதர் மொஹிதீன் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் ஏற்பாட்டில், "வோட்டர்ஸ் எட்ஜ்" ஹோட்டலில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சிறுபான்மைச் சமூகங்களின் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கைத்தீவின் முக்கியமான அரசியல் பிரமுகர்கள் இங்கு வருகை தந்திருக்கின்றனர். இதனை நான் எதிர்பார்த்திருக்கவில்லை. கற்பனைக்கு அப்பாற்பட்ட விடயமாக உள்ளது. அமெரிக்க பல்கலைக்கழகமொன்றின் சார்பில் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காகவே இங்கு வந்தோம். வந்த இடத்தில் முக்கிய தலைவர்கள் பலரைச் சந்திக்கின்ற வாய்ப்பு கிடைத்தது. ரவூப் ஹக்கீம் ஏற்பாடு செய்த இந்தச் சந்திப்பில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரை

இலங்கை அழகான தீவு. எல்லா வகையிலும் முன்மாதிரியாக திகழக் கூடிய ஒரு நாடு. ஒரு சிறிய நாடாக இருந்தபோதிலும் இங்கு வாழக்கூடிய எல்லா மக்களும் அண்ணன் தம்பிகளாக இருக்க வேண்டும். அந்த உணர்வை அதிகமாக மக்களுக்கு பரப்ப வேண்டும். அதில் எங்களுக்கு நிறைய நம்பிக்கையுள்ளது. இஸ்லாமிய மார்க்கத்தைச் சேர்ந்த எங்களாலும் ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்களாலும் இந்த இலங்கைப் பூமிக்கு தனி அந்தஸ்து கொடுக்கப்படுகின்றது. இந்த பூமியில் இருந்து தான் முதல் மனிதன் தோன்றினான் எனவும் கூறப்படுகின்றது. அது எல்லா மதங்களிலும் சொல்லப்பட்ட அடிப்படையான கருத்துமாகும். இத்தகைய சிறப்புமிக்க இந்த பூமியில் இருந்து வரக்கூடிய ஒவ்வொரு விடயமும் மக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

தமிழகத்தில் இப்பொழுது சாதி, மதம் மற்றும் ஏழை, பணக்காரன் பேதமின்றி, முதல்வர் மு.க.ஸ்டாலினின் நல்லாட்சியில் வாழ்கின்றோம். எல்லோருக்கும் எல்லா நேரத்திலும் சகல விதமான நன்மைகளையும் தேவைகளையும் செய்வதற்கு உறுதிபூண்டிருக்கின்ற ஒரு முதலமைச்சரை நாங்கள் பெற்றிருக்கின்றோம். அது நாங்கள் பெற்ற பாக்கியமாகும்.

இந்தியாவுடைய சக்தியை மேம்படுத்துவதிலும் வளர்ப்பதிலும் அபிவிருத்தியிலும் அதனுடைய ஆற்றலை உலகத்துக்கு தெரிவிப்பதிலும் எங்கள் நாட்டின் நிர்வாகிகள் மிகவும் சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எங்களது மத்திய அரசு செய்யக்கூடிய பல்வேறு திட்டங்கள் வரவேற்கத்தக்கவை.

குறிப்பாக, இப்போதுள்ள கொவிட் 19 சூழலில் 132 கோடி மக்கள் வாழ்கின்ற இந்தியாவில் 120கோடி மக்களுக்கு மேல் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்று கொரோனாவை எதிர்கொண்டு வருகின்றார்கள். நான்கு மாதங்களுக்கு முன்னால் இருந்த தொற்றாளர்களின் எண்ணிக்கை இப்போது வெகுவாக குறைந்துள்ளது.

எந்தவொரு விடயத்தையும் மனிதாபிமானத்தோடு நோக்க வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம். மனிதர்களிடயே சர்ச்சைகளை ஏற்படுத்தாது மனிதாபிமானத்தோடு இந்தியா முழுவதிலும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். எமது கட்சி சற்று பலமான கட்சியாகும். அனைத்து மக்களும் அந்நியோன்யமாக விட்டுக் கொடுப்புடன் நடந்துகொள்ள வேண்டுமே தவிர, மதத்தையோ மொழியையோ வைத்து மக்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தக்கூடாது என்றார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் வினோத் கே.ஜேகப்பும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

# மனைவி தாக்கி கணவன் பலி

## நவகமுவ பகுதியில் சம்பவம்

(எம்.மனோசித்ரா)

நவகமுவ, ரணால பிரதேசத்தில் மனைவியின் கத்தி குத்துக்கு இலக்காகி கணவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு மதுபோதையில் வீட்டுக்கு வந்த கணவன் மனைவியுடன் ஏற்பட்ட முரண்பாட்டின் போது தேங்காயொன்றினால் அவரின் தலையில் பலமாக தாக்கியுள்ளார். இதனால் சினமடைந்த மனைவி கையிலிருந்த கத்தியால் கணவனின் கழுத்துப் பகுதியை தாக்கியுள்ளார்.

இதன்போது படுகாயமடைந்த இருவரும் அயலவர்களால் நவகமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

எனினும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் 50 வயதுடைய மொரகெட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

இந்த தம்பதியினர் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் வாடகைக்கு அப்பகுதியிலுள்ள வீடொன்றில் குடியேறியுள்ளனர். அவர்கள் தாம் கணவன், மனைவி என்று கூறியுள்ள போதிலும் இதுவரையில் சட்ட ரீதியாக திருமணம் செய்து கொள்ளவில்லை என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நவகமுவ பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# காட்டு யானை தாக்கி இருவர் பலி

(எம்.மனோசித்ரா)

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இருவர் காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர். சூரியவெவ பொலிஸ் பிரிவில் நாசெவன வீதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.இவ்வாறு உயிரிழந்தவர்கள் 36 மற்றும் 49 வயதுகளையுடைய சூரியவெவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## அறிவித்தல்

### விசேட அற்றோர்ணி அதிகாரம் இரத்து செய்தல்

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசில், மல்லவி யோகாபுரம், இலக்கம் 6D/A இல் வசிக்கும் நமசிவாயம் வசந்தகுமார் (தேசிய அடையாள அட்டை இலக்கம் 740063855V) ஆகிய நான் வவுனியா பிரசித்த நொத்தாரிசு ஏ.அருன்னியா அவர்களால் 2018.10.13ஆம் திகதி எழுதி உறுதிப்படுத்திய பதிவாளர் அலுவலகம் - வடக்கு வலய அலுவலகம் யாழ்ப்பாணத்தில் 2019.01.30ஆம் திகதி வொலுயும் 118 நிரல் 49 நாட்புத்தக இலக்கம் 283இன் கீழ் பதிவு செய்யப்பட்ட இலக்கம் 127 உடைய விசேட அற்றோர்ணி அதிகாரப்பத்திரம் மூலம் வவுனியா முல்லைத்தீவு, துணுக்காய், குலசிங்கம் வீதி, இலக்கம் 8D முகவரியல் வசிக்கும் விமலாதேவி விஜயரஞ்ஜித் (தேசிய அடையாள அட்டை இலக்கம் 636672610V) ஆகியவரை எனது அற்றோர்ணி அதிகாரம் உடையவராக நியமித்தேன். கூறப்பட்ட இலக்கம் 127 உடைய விசேட அற்றோர்ணி அதிகாரப் பத்திரத்தை 2021.12.10ஆம் திகதியிலிருந்து இரத்து செய்து செல்லுபடியற்றதாக்கியது பற்றியும் இனிமேலும் கூறப்பட்ட அற்றோர்ணி அதிகாரப்பத்திரம் மூலம் விமலாதேவி விஜயரஞ்ஜித் ஆகியவர் சார்பில் மற்றும் அவருடைய பெயரில் செய்யப்பட்ட எந்தவொரு செயலும் இரத்து செய்யப்பட்ட தினத்தின் பின்னர் செல்லுபடியோ அல்லது சட்டபூர்வ அதிகாரமோ அற்றதெனவும் இலங்கை அரசாங்கமும் அனைத்து பொது மக்களும் ஏனைய அனைவரும் இத்தால் அறிந்துகொள்ளவும்.

நமசிவாயம் வந்த குமார்
(தேசிய அடையாள அடடை இலக்கம் 740063855V)





இலங்கை மகளிர்களின் வாழ்வில் ஒளியேற்றிடும்

DFCC ஆலோக்கா என்பது, இலங்கையில் வசிக்கும் பெண்களின் வாழ்விற்கு வலுசேர்த்து, அவர்களின் சொந்த கனவுகள், தொழில் இலக்குகள் மற்றும் வியாபார எதிர்பார்ப்புகளை அடைவதற்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட நிதித் தீர்வாகும்.

DFCC ஆலோக்கா அளித்திடும் நன்மைகள்

- சேமிப்பு கணக்கிற்கு அதிகூடிய வட்டி வீதத்துடன் அதிகளவிலான நன்மைகள்
- வாழ்வில் முக்கிய தருணங்களில் பெறுமதிமிக்க பரிசுகள்
- முன்னுரிமை வட்டி வீதங்களுடன் கூடிய கடன் திட்டங்கள்
- இலவச டிஜிட்டல் சுகாதார சேவைகள் மற்றும் ஆயுட்காப்பீடு
- வியாபாரத்துக்கான கடன்
- DFCC ஆலோக்கா, 24 x 7 வாடிக்கையாளர் அழைப்பு சேவை மையம் 0112 350055

இனறே அருகிலுள்ள DFCC வங்கிக் கிளைக்கு விரைந்து DFCC ஆலோக்கா சேமிப்புக் கணக்கினை ஆரம்பித்திடுங்கள் அல்லது மேலதிக தகவல்களுக்கு 0112 350055 க்கு அழைத்திடுங்கள்




*விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

0112 350000 www.dfcc.lk

ICRA லங்கா ரேட்டிங் [SL] AA- (ஸ்திரம்), ஃபிச் ரேட்டிங் A+ (lka) ஸ்திரமான தரப்படுத்தலைப் பெற்ற, CBSL உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

## இன்றைய சிந்தனை

**மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய**
**பிறத்தல் அதனான் வரும்**

(திருக்குறள்)

**யாரிடத்திலும் சினம் கொள்ளாமல் அதை மறந்து விட வேண்டும், தீமையான விளைவுகள் அச் சினத்தாலேயே ஏற்படும். உடையவர்களுக்கு இல்லை.**

VIRAKESARI
வீரகேசரி
2021 டிசம்பர் 09ஆம் திகதி வியாழக்கிழமை
எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிட்டெட்,
267, ரஜ மாவத்தை, ஏக்கல, ஜா–எல. Tel. : 011 7322750, 011 7322751, 011 7322754, 011 7322755, 0117322736
Fax : 011 7322752 Web Site : www.virakesari.lk
E-mail : editordaily@virakesari.lk, kesari25@virakesari.lk
News On-line : onlinenews@virakesari.lk Advertisment : advertising@virakesari.lk
Circulation : circulation@virakesari.lk

# தீவகப்பகுதிகளின் மின்திட்டமும் இந்தியாவின் வகிபாகமும்

யாழ்ப்பாணத்திலுள்ள நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு, ஆகியவற்றில் மின்சார உற்பத்தி திட்டங்களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கமானது நடவடிக்கை எடுத்திருந்தது. இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பினை சீனாவின் சினோசோர் ஹைபிரிட் டெக்னாலஜி நிறுவனத்திடம் வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படவிருந்த இந்த திட்டத்துக்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டிருந்த போது சீன நிறுவனத்துக்கு இதனை வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த தீர்மானத்திற்கு அயல் நாடான இந்தியா கடும் எதிர்ப்பினை தெரிவித்திருந்தது. தமது நாட்டின் பாதுகாப்புக்கு இந்த திட்டம் அச்சறுத்தலை விளைவிக்கும் என்று இந்தியா தெரிவித்திருந்ததுடன் இந்த மின்சாரத் திட்டங்களை சீன நிறுவனத்திடம் வழங்குவதற்கும் எதிர்ப்பு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் இந்த மறுவிளைவு இல்லாத சுத்தமான சூரியசக்தி மின் நிலையங்களை அமைப்பதற்கான திட்டத்தை தம்மிடம் வழங்குமாறும் அதனை மேற்கொள்வதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் இந்தியத் தரப்பிலிருந்து அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த திட்டத்துக்கான அனுமதி பொதுஜன முன்னணி அரசாங்கத்திலேயே வழங்கப்பட்டிருந்தது. மின்சக்தி அமைச்சராக டலஸ் அழகப்பெரும பதவியேற்றிருந்த நிலையில் இந்த விவகாரம் கையாளப்பட்டிருந்தது. சீன நிறுவனம் யாழ்ப்பாணத்திலுள்ள மூன்று தீவுகளிலும் மின் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு இந்தியா எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து தமது முடிவினை மாற்றிக்கொள்வதற்கு அரசாங்கம் தலைப்பட்டிருந்தது.

இந்த விவகாரம் தொடர்பில் அப்போதைய மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும கேசரிக்கு கருத்து தெரிவிக்கையில், யாழ். தீவகத்தில் மின் உற்பத்தி திட்டங்களை ஆரம்பிப்பதற்கு சீன நிறுவனத்திடம் வழங்கப்பட்டிருந்த உரிமத்தை ரத்து செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளதாகவும் அதனை இந்தியாவசம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இதற்கான நடவடிக்கைகள் இந்த வருட ஆரம்பத்தில் இடம்பெற்றிருந்தன. அமைச்சரவையில் இந்தவிவகாரம் குறித்து ஆராயப்பட்டிருந்தது. முன்னாள் மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதற்கான அமைச்சரவைப் பத்திரங்களையும் சமர்ப்பித்திருந்தார். ஆனால் இந்த விவகாரத்தில் பின்னர் சீனாவும் சில எதிர்ப்புக்களை தெரிவித்ததை அடுத்து இவ்விடயத்தில் முடிவு ஒன்றினை எடுக்க முடியாத இக்கட்டான நிலைமை அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருந்தது.

இந்த திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த இந்தியா தம்மிடம் இந்த மின்சார திட்டத்தினை வழங்குமாறும் அதனை இலவசமாக செய்து தருவதற்கு தாம் தயாராக உள்ளதாகவும் உறுதி அளித்திருந்தது. இதனை அமைச்சர் டலஸ் அழகபெரும கேசரிக்கு தெளிவுபடுத்தியுமிருந்தார்.

இவ்வாறான நிலையில் தற்போது நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகியவற்றில் முன்னெடுக்கப்படவிருந்த மின்திட்டங்களை கைவிடுவதற்கு சீனா தீர்மானித்துள்ளதாக அறிவித்திருக்கின்றது. மூன்றாந்தரப்பினரால் பாதுகாப்பு தொடர்பில் கருத்து வெளியிடப்பட்டமையை கருத்தில் கொண்டு சினோசோர் ஹைபிரிட் டெக்னாலஜி வேலைத்திட்டத்தை கைவிட்டுள்ளதாக இலங்கையிலுள்ள சீனத்தூதரகம் அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளது.

இலங்கையில் இவ்வாறு மூன்று வேலைத்திட்டங்களையும் கைவிட்டுள்ள சீன நிறுவனம் மாலைதீவில் 12 தீவுகளில் சூரிய மின் உற்பத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக கடந்த நவம்பர் 29 ஆம் திகதி அந்நாட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் மூன்று தீவுகளில் மேற்கொள்ளப்படவிருந்த மின்சார திட்டங்களை தமது நிறுவனம் கைவிட்டுள்ளமையை சீனா உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கின்றது.

இந்த நிலையில் அந்த திட்டங்களை இந்தியா மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் தற்போது வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. இந்த விடயம் தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் சில தினங்களுக்கு முன்னர் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்.

இந்த அறிக்கையில் வடக்கு தீவுகளில் மறுவிளைவு இல்லாத சுத்தமான சூரியசக்தி மின் நிலையங்களை அமைக்கவிருந்த சீன திட்டம் இந்தியாவின் பாதுகாப்பு ஆட்சேபனை காரணமாக இடைநிறுத்தப்பட்டுவிட்டது. இந்நிலையில் அதேபோல் அதற்குப் பதிலாக அதே தீவுகளில் மறுவிளைவுகள் இல்லாத சுத்தமான சூரிய சக்தி மின்நிலையங்களை அமைக்க இந்தியா முன்வரவேண்டும். அதற்கு இலங்கை அரசாங்கம் இடம்தரவேண்டும். இந்திய அரசும் தனது வழமையான பாணியை மாற்றி இதற்கு முன்னுரிமை அளித்து இலங்கை அரசுடன் பேசவேண்டும். ஏனெனில் இந்தியா, இலங்கை, சீனா ஆகியவற்றின் கயிறு இழுப்புகளுக்கு மத்தியில் நம் நாட்டுக்கு சுத்தமான மின்சாரம் தேவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில்தமது திட்டம் இடைநிறுத்தப்பட்டாலும் அதற்குப் பதிலாக அதேமாதிரி மின் உற்பத்தி கட்டமைப்பை மாலைதீவின் 12 ஆளில்லாத தீவுகளில் முன்னெடுக்க அந்த நாட்டு அரசுடன் சீனா உடன்பாடு கண்டுவிட்டது. இந்த மின்சாரத் திட்டம் இந்தியாவின் ஆட்சேபனை காரணமாக பல மாதங்களுக்கு முன்னரே இலங்கை அரசால் இடைநிறுத்தம் செய்யப்பட்டது. எனவே இந்தியா விசேட முன்னுரிமை கொடுத்து இந்த ஆசிய அபிவிருத்தி வங்கி சிபார்சு செய்யும் வடக்குத் தீவுகளில் சூரிய சக்தி மின் நிலையங்களை அமைக்க முன்வர வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியிருந்தார்.

யாழ்ப்பாணம் தீவுகளில் மின்சாரத் திட்டங்களை சீன நிறுவனம் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து இந்தியா அதற்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தது. அதேபோன்றே வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் தேசியக் கட்சிகளும் சீன நிறுவனம் இந்த மின்சாரத் திட்டங்களை முன்னெடுப்பதை விரும்பவில்லை. இதனை எதிர்த்து சகல தரப்பினரும் கருத்துக்களை தெரிவித்திருந்தனர். போராட்டங்கள் கூட இடம்பெற்றிருந்தன. வடக்கில் சீனாவின் ஆதிக்கம் நிலைபெறுவதனை தமிழ் தேசியகட்சிகள் விரும்பவில்லை. அதுவும் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான நிலை ஏற்படுத்தப்படுவதை தமிழ் தரப்புக்கள் விரும்பியிருக்கவில்லை.

இந்த திட்டங்களை இந்தியா மேற்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாடே மேலோங்கியிருந்தது. இதனைத் தான் தற்போது தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் சுட்டிக்காட்டியிருக்கின்றார். வடக்கு, கிழக்கில் மின்சார திட்டங்கள் உட்பட பல்வேறு முதலீட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாக உள்ளது. மூன்று தசாப்தகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் முதலீடுகள் என்பது அவசரமானதும் அவசியமானதுமாக உள்ளதை எவரும் மறுக்க முடியாது.

இவ்வாறான நிலையில் யாழ்ப்பாணம் தீவுகளில் மின் திட்டங்களை மேற்கொள்வதற்கு இந்தியா முன்வரவேண்டும். ஏனெனில் மின்சாரத்திட்டங்களில் சீனாவின் தலையீட்டினை கடுமையாக எதிர்த்த இந்தியா அத்திட்டங்களை தமது நாடு நிறைவேற்றும் என்று தெரிவித்ததாக முன்னாள் மின் சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவும் கூறியிருந்தார்.

இந்த விவகாரத்தில் இந்தியாவானது வடக்கில் முதலீட்டு வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையில் திட்டங்களுக்கு அனுசரணை வழங்கவேண்டும். அத்தகைய அனுசரணையின் மூலம்தான் அந்நிய சக்திகளின் ஊடுருவலை வடக்கில் தடுப்பதுடன் பாதுகாப்பு அச்சுறுத்தலையும் தடுத்து நிறுத்த முடியும். பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளதை போன்று இலங்கை, இந்திய அரசாங்கங்கள் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்தி மின் சாரத்திட்டங்களை மேற்கொள்வதற்கு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்..

# தேசிய பாதுகாப்பு கொள்கைகள் மீதான தவறுகளை திருத்துங்கள்

*இந்த உயரிய சபை எத்தனையோ ஆளுமைகள் கொண்ட நிதி அமைச்சர்களின் வரவு ,செலவுத் திட்ட உரைகளைச் செவிமடுத்துள்ளது.*

*சுதந்திரமடைந்த காலத்திலிருந்து சிம்மாசனப் பிரசங்கள் மூலம் அரச கொள்கைகள் வெளிக்கொணர்ந்த முறைமை குடியரசு அரசியலமைப்புக்குப் பின்னர் வரவு, செலவுத்திட்டம் ஊடாகவே வெளிப்படுத்தும் முறை ஆரம்பமாகியது.*

*ஒரு நாட்டின் வரவு, செலவுத்திட்டம் வெறுமனே இலக்கங்களும் எழுத்துக்களும் கொண்ட அறிக்கையல்ல. அடுத்த வருடத்துக்கான நாட்டின் வருமான மூலங்கள், அதன் செலவின மதிப்பீடுகள், வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகள், அதனைக் குறைநிரப்பும் வழிமுறைகளை தெளிவான முறையில் வெளிப்படுத்தும் கூற்றாக அமைய வேண்டும்.*

*எனக்கு இன்னும் ஞாபகமிருக்கிறது. அந்த நாட்களில் வரவு, செலவுத்திட்ட உரைகளைச் செவிமடுப்பதற்காக கிராமங்கள் தோறும் மக்கள், வானொலிப்பெட்டியருகில் காதை வைத்துக் கொண்டு செவிமடுத்துக் கொண்டிருப்பார்கள்.பாராளுமன்றக் கலரிகள் கூட பொருளாதார வல்லுனர்கள், முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள், தனியார் துறையினர், அரச அலுவலர்கள், ஆர்வமுள்ள நாட்டின் பொது மக்கள் ஏன் வெளிநாட்டு இராஜதந்திரிகள் கூட சபாநாயகரின் கலரியினை நிறைத்திருந்து அதனை அவதானிக்கும் நிலை இருந்தது. ஆனால், இந்த வரவு, செலவுத்திட்டத்தில் முற்றிலும் நிலைமை தலைகீழாகவே இருந்ததை நோக்க முடிகின்றது.*

*குறிப்பாக உப்புச்சப்பற்ற ஒரு சம்பிரதாயபூர்வ நிகழ்வாக இது நிகழ்ந்தேறியுள்ளது. இதுவே இந்த வரவு, செலவுத்திட்ட உரைமீதான எனது ஒரு வரி விமர்சனம். இந்த அரசாங்கம் மூன்று விம்பங்களைக் கொண்ட பெரும் தூண்களின் மேல்தான் கட்டியெழுப்பப்பட்டது. அது மஹிந்த ராஜபக்ச எனும் பிம்பம், கோட்டபாய ராஜபக்ச என்னும் பிம்பம், பௌத்த சிங்கள பேரினவாதம் எனும் பிம்பம்.*

*ஆனால் கடந்த இரு வருட காலத்தில் மஹிந்த ராஜபக்ச, கோட்டபாய ராஜபக்ச எனும் இரு பிம்பங்கள் கொண்ட தூண்களும் ஆட்டம் காணத் தொடங்க நான்காவது தூணின் அவசியம் உணரப்பட்டு அது எண்ணெய் விலை உணர்வு என்ற நாடகம் மூலம் பஷில் ராஜபக்சவினை பாராளுமன்ற உறுப்பினராக்கி நிதி அமைச்சர் என உயர்த்தி அரசைத்தாங்கும் நான்காவது தூணாக இருத்த முனைந்தது.*

*அலாவுதீனின் அற்புத விளக்கோடு பொருளாதார அற்புதங்களையும் நிகழ்த்துவார் என்ற பெரும் எதிர்பார்ப்புக்களுடன் பாராளுமன்றம் வந்து நிதியமைச்சராகி இன்று இந்த வரவு, செலவுத்திட்டத்தினை வெற்றுப் பானையாக வெறும் எழுத்துக்களுடனும் இலக்கங்களுடனும் சமர்ப்பித்துள்ளார்.*

*இந்த வரவு, செலவுத்திட்டத்தினை எதிர்க்கட்சியினர் மாத்திரமல்ல நடுநிலை நின்று ஆய்வு மேற்கொள்ளும் பொருளாதார நிபுணர்கள், வர்த்தகர்கள், பொது மக்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் என அனைத்துத் தரப்பினருமே தத்தமது துறைகளில் உப்புச்சப்பற்ற வரவு, செலவுத்திட்டம் என்றே உரைக்கின்றனர். விமர்சிக்கின்றனர். அரச அமைச்சர்கள், அரசின் பங்காளிக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது வரவு, செலவுத்திட்ட உரை மீது தமது விமர்சனத்தினை முன்வைத்து வருகின்றனர்.*

*இந்த வரவு, செலவுத்திட்டத்தின் குழுநிலை விவாதத்தின் மீதான எனது உரை, பாதுகாப்பு அமைச்சு, அரச பாதுகாப்பு அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு என்பவற்றின் மீதானதாகும். இந்த அமைச்சுக்களுக்கான மொத்த ஒதுக்கீடு வரவு செலவுத்திட்டத்தின் மொத்தச் செலவினத்தில் 19.56 வீதமாகும். இது ஏறக்குறைய வரவு, செலவுத்திட்டத்தின் ஐந்தில் ஒருபங்காகும். உலக வல்லரசாகவும் உலக யுத்த வலுச்சமநிலையை தக்க வைப்பதும் உலக பொருளாதார நிலைமையினை தீர்மானிக்கும் சக்திவாய்ந்த வல்லரசு நாடான ஐக்கிய அமெரிக்காவின் பாதுகாப்புச் செலவினம் அதன் மொத்த வரவு, செலவுத்திட்டத்தின் 39 சதவீதமாகும். இது உலக அரங்கில் அந்நாட்டின் நிலை பொறுத்து ஏற்கத்தக்கதேயொழிய, வியக்கத்தக்கதல்ல.*

*தென்னாசியப் பிராந்தியத்தின் வல்லரசு எனவும் தென்னாசியாவின் அரசியல் பொருளாதார வெளிவிவகாரங்களைத் தீர்மானிக்கும் இந்தியாவின் 2020, 21ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்டத்தில் பாதுகாப்புச் செலவினங்களுக்கான ஒதுக்கீடு மொத்த வரவு செலவுத்திட்டத்தின் 14.5 வீதமாகும். இத்தனைக்கும் இந்தியா தனது இருபுற எல்லைகளிலும் யுத்த நிலைமையினை நித்தமும் எதிர்கொள்ளும் ஒரு நாடாகும்.*

*பிராந்திய வல்லரசான இந்தியாவோடு நித்தமும் முட்டிமோதுவது மாத்திரமன்றி நாடு உருவான காலம் முதல் இந்தியாவோடு பகைமையினை வெளிக்காட்டும் பாகிஸ்தான் நாட்டின் பாதுகாப்புச் செலவினமோ 2021ஆம் ஆண்டில் அதன் மொத்த வரவு, செலவுத்திட்டத்தில் 18.4 வீதமாகும்.*

*இவை உலக நாடுகள் பாதுகாப்புச் செலவினங்கள் தொடர்பான ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் போன்று சிறிய உதாரணமேயாகும்.*

*எமது நாட்டின் தற்போதைய நிலைமையில் அதாவது, உலகளாவிய கொவிட் 19 பெருந்தொற்று அவலம் அது ஏற்படுத்திய பொருளாதார வீழ்ச்சி அதிலிருந்து மீள முடியாத எமது அரசின் தவறான கொள்கைகள், அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையினால் வீழ்ச்சியடைந்த உற்பத்தித் துறை, திட்டமிடாத முறையில் எழுந்தமானமாக ஒரே மூச்சில் மேற்கொள்ளப்பட்ட சேதன உரக் கொள்கையினால் பெருந்தோட்ட விவசாயம், நெல் உற்பத்தி, உப உணவு உற்பத்தி என்பன வீழ்ச்சியடைந்து சோமாலியா போல் மாறுவது தவிர்க்க முடியாத ஒரு நிலை.*

*சென்மதி நிலுவை பற்றாக்குறை, டொலர் நெருக்கடி, வானைத் தொடும் அளவுக்கு விலைவாசி உயர்வு, இவற்றை திட்டமிட்ட முறையில் தீர்ப்பதற்கான எந்தவிதமான தீர்க்கதரிசனம் கொண்ட முன்மொழிவுகள் இல்லாத இந்த வரவு, செலவுத்திட்டத்தில், ஒட்டு மொத்த பாதுகாப்புத் துறைகளுக்கு நாட்டின் மொத்த வரவு, செலவுத்திட்டத்தில் ஐந்தில் ஒரு பங்கினை ஒதுக்கீடு செய்வது அவசியமா?. அல்லது இதை ஏற்றுக் கொள்ளத்தான் முடியுமா?*

*இன்று எமது நாட்டின் பாதுகாப்புக்கு ஏதாவது வெளிநாட்டு அச்சுறுத்தல் உள்ளதா?. அல்லது உள்நாட்டுக் கிளர்ச்சி ஏற்படலாம் என்ற ஆதாரபூர்வ புலனாய்வுத் தகவல் உள்ளதா?. தாக்குதல் நடக்கும் என்ற புலனாய்வுத் தகவல்கள் வெளிநாடுகளிலிருந்து வந்தும் கூட அந்தத் தாக்குதல்களைத் தடுக்க முடியாத ஒரு நாட்டுக்கு இந்தளவு பாதுகாப்புச் செலவினம் தேவைதானா?*

*உள்நாட்டு யுத்தம் நிகழ்ந்த காலத்தில் அந்த யுத்தத்திற்கான காரண காரியம் உணராது அதன் தாற்பரியம் புரியாது, போராடியவர்கள் நம்நாட்டவர்கள் என்பதையும் உணராது பேரினவாத முனைப்பில் யுத்தத்தை நடத்தினீர்கள். அதற்காகப் பாதுகாப்புச் செலவினத்தை உயர்த்தினீர்கள். பாதுகாப்புத்துறையின் மூலதனச் செலவீடு அதிகரித்துச் சென்றது. அதனையொட்டி அதற்கான நடைமுறைச் செலவுகளும் அதிகரித்துச் சென்றன.*



**பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் வரவு, செலவுத்திட்ட குழுநிலை விவாத்தின் போது ஆற்றிய உரை**

*எம்மால் இதனை ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் உங்கள் பார்வையில், நீங்கள் அதனை நியாயப்படுத்தினீர்கள். ஆனால் இன்று இந்த அளவு பாதுகாப்புச் செலவினம் அதிகரிப்பதற்கு நீங்கள் எந்த நியாயத்தைக் கற்பிக்கப் போகின்றீர்கள்.*

*அரசாங்கத்தின் தேவை ஆட்சியைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளுதல். பெரும்பான்மை இனத்தின் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிகொண்டோம் என்று பெருமை பேசிய நீங்கள் இன்று பெரும்பான்மை இனத்தின் பெரும்பான்மையினரால் படுமோசமாக விமர்சிக்கப்படுகின்றீர்கள்.*

*இன்று உங்களுக்குத் தேவை இந்த நாட்டில் மீண்டும் பேரினவாதிகளின் ஆதரவுத் தளத்தைத் தக்கவைத்துக் கொள்வது ஒன்றேயாகும். அதற்காக இல்லாத பயங்கரவாதத்தை இல்லாத இனத்துவ வாதத்தை இல்லாத மொழிப்பிரச்சினையினை இருப்பதாகக் காட்டி அமைதியாக வாழும் பௌத்த சிங்கள, பௌத்த கத்தோலிக்க, இந்து, இஸ்லாமிய மக்களிடையே பகைமையினையும் பிணக்கினையும் ஏற்படுத்த முயல்கின்றீர்கள். மத முரண்பாடு, இன முரண்பாடு, மொழி முரண்பாடு என்பவற்றை ஏற்படுத்தி அதன் நெருப்பில் குளிர் காய்ந்து ஆட்சி அதிகாரத்தைத் தொடர்ந்து சுவைப்பதற்கு முயற்சிக்கின்றீர்கள். இதற்கு எதிராக ஜனநாயக ரீதியாக கிளர்ந்தெழும் மக்களை பாதுகாப்புத் துறை கொண்டு நசுக்க முயல்கின்றீர்கள். இதற்காகவா பாதுகாப்புத் துறைக்கு இந்தளவு நிதியினை ஒதுக்கியுள்ளீர்கள்.*

*சொந்த நாட்டு மக்கள் மீதா உங்கள் பாதுகாப்பு பலத்தினைப் பிரயோகிக்க முயல்கின்றீர்கள். இதற்காகவா, இத்தனை பாதுகாப்புச் செலவினை ஒதுக்கியுள்ளீர்கள்.*

*நாட்டில் அமைதியான சூழல் நிலவுவதை ஆட்சியாளர்களான நீங்கள் விரும்பவில்லை. யுத்தம் நடைபெறும் நாடொன்றில் இரு தரப்புக்களிலும் உயிரிழப்புக்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாது என நீங்கள் கூறுகின்றீர்கள். அவ்வாறு ஏற்பட்ட உயிரிழப்புக்களை நினைவுகூருவதற்கு ஒரு தரப்புக்கு மாத்திரம் மறுக்கப்படுகின்றது. மீண்டும் ஒரு இருண்ட யுகம் போல வெள்ளை வான் மாத்திரம் இல்லாது ஊடக அடக்கு முறையும் ஆரம்பமாகி விட்டது. இதையெல்லாம் இருப்பதாகக் காட்டிக் கொண்டால்தான் பேரினவாதிகளின் பேராதரவு உங்களுக்கு இருக்கும் என்ற எண்ணத்தில் இவற்றை மேற்கொள்கின்றீர்கள்.*

*கொவிட் 19 பெருந்தொற்றினை உங்களது தவறான கொள்கைகளால் கட்டுப்படுத்த முடியாது தமது உயிரினைக் கூட துச்சமென மதித்து கடமையாற்றிக் கொண்டிருக்கும் அலுவலர்களைக் கொண்ட சுகாதாரத்துறைக்கு ஒதுக்கீடு 6.13 வீதம்.*

*உற்பத்தித் துறைக்கு முக்கிய பங்களிக்கும் விவசாயத்துறைக்கு 0.97 வீதம்.*

*ஒட்டு மொத்த பாதீட்டு ஒதுக்கீட்டை நோக்கும் போது இது மக்கள் நலன் சார்ந்த, நாட்டு நலன் சார்ந்த பாதீடாக நோக்க முடியவில்லை. சில ஒதுக்கீடுகளின் அதிகரிப்பினை நோக்கும் பொழுது அது பேசன்ரேஜ் பெறுவதற்கான ஒதுக்கீடாகவே நோக்க முடிகிறது.*

*ஒரு வகையில் இது மக்கள் நலன் சார்ந்த பாதீடு என்பதை விட, நாட்டின் பொருளாதார நலன் சார்ந்த பாதீடு என்பதை விட, ஆட்சியாளர்களுக்கான பேர்சன்ரேஜ் பாதீடு என்பதே பொருத்தம் என்பது எனது கருத்தாகும்.*

*பாதுகாப்புத் தொடர்பாக நான் கூற விரும்புவது இந்து சமுத்திரத்தில் நமது நாட்டின் கேந்திர மையம், பிராந்திய ஒத்துழைப்பு, பிராந்திய அபிவிருத்தி, மற்றும் பிராந்தியப் பாதுகாப்பு என்பன தொடர்பாக நம் நாட்டுக்குத் தேவையான தெளிவான கொள்கை ஒன்று இன்னும் இல்லை. அதை உருவாக்கவும் நீங்கள் முனையவில்லை. தவறான வெளிநாட்டுக் கொள்கைகளை மேற்கொண்டு நமது நாட்டிற்கே பெருமையுடன் இருந்த அணிசேராக் கொள்கையினை அழித்துவிட்டு தென்னாசியப் பிராந்திய வல்லரசான இந்தியாவுக்கு சவால் விடும் அளவுக்கு கொள்கைகளை வகுப்பதிலேயே நீங்கள் கவனம் செலுத்துகின்றீர்கள். உங்களது அமைச்சரவையின் சில அமைச்சர்களது அறிவீனமான உரைகள் புத்திஜீவித்துவமற்ற உரைகள் இவற்றையே தெளிவாகக் காட்டுகின்றன.*

*அண்டை நாடான இந்தியாவுடனான வரலாற்று, கலாசார, பாரம்பரிய, மதத் துறைகளில் இரு நாடுகளுக்குமிடையே பிரிக்க முடியாத பிணக்குகள் ஏற்பட முடியாத இணைப்பு வரலாற்றுக் காலம் முதல் உள்ளது என்பதை நீங்கள் இலகுவாக மறந்து விடுகிறீர்கள். சீனாவை நண்பனாக்கி இந்தியாவைச் சீண்டிக் காரியமாற்ற விளைகின்றீர்கள். ஆபத்தில் காப்பாற்றுவான் என நம்பிய சீனா சேதனப் பசளை விவகாரத்தில் உங்களுக்கு நல்லதொரு பாடத்தைக் கற்றுத் தந்துள்ளது. அதிலிருந்தாவது உங்கள் வெளிநாட்டுக் கொள்கை, தேசிய பாதுகாப்புக் கொள்கைகளின் மீதான தவறுகளைத் திருத்த விளையுங்கள்.*

*சீனாவை நண்பனாக்குவதற்காக இந்தியாவை எதிரியாக்கும் கொள்கையினை மறந்து இந்தியாவும் சீனாவும் எமது நண்பர்கள் என்ற நிலைமைக்கு உங்களது கொள்கையினை மாற்றுங்கள்.*

*எமது நாட்டின் பாதுகாப்பு முக்கியம். எமது நாட்டில் மக்கள் இன, மத, மொழி, பால் வேறுபாடு கடந்து சரிநிகர் சமானமாக ஏற்றத்தாழ்வின்றி இணக்கப்பாட்டுடன் வாழவேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய உண்மை. இப்போது நான் உங்களது ஒரு நாடு ஒரு சட்டம் தொடர்பாக ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகின்றேன்.*

*ஒரு நாடு ஒரு சட்டம் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதே. அது ஒரு நாடு இலங்கை என்பதாகவும், ஒரு சட்டம் என்பது இலங்கை மக்களுக்கான சட்டமாகவும் இருக்க வேண்டும். ஆனால் உங்கள் ஒரு நாடு ஒரு சட்டத்தின் கீழ் நடப்பது என்ன?. உங்களது பார்வையில் நீங்கள் கூறும் ஒரு நாடு ஒரு சட்டம் சொல்வதென்ன.? இது சிங்களப் பௌத்த நாடு. இங்கு சட்டமும் சிங்கள பௌத்த சட்டமே.*

*இந்த இடத்திலே நாம் எமது நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி ,அலி சப்ரியை நினைத்து கவலைப்படுகின்றேன். ஒரு திறமையான இளமையான புத்திகூர்மை கொண்ட அமைச்சர். அவருடைய திறமைக்கு களங்கத்தை ஏற்படுத்தி அவருக்கு சட்டவாக்கம் பற்றி ஆலோசனை வழங்குவதற்கு ஜனாதிபதி நியமித்த ஆலோசனைக் குழுவினை நோக்கும் பொழுது நான் உண்மையில் எமது நீதியமைச்சர் குறித்துக் கவலைப்படுகிறேன்.*

*அன்று ஆட்சிக் கட்டிலில் ஏறும் நோக்கம் ஒன்றையே இலக்காகக் கொண்டு எஸ்.டப்ளியூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா ஆட்சியமைத்து 24 மணி நேரத்தில் சிங்களம் மட்டும் சட்டத்தினைக் கொண்டு வருவேன் எனக் கூறி பௌத்த சிங்கள மக்களினை உணர்ச்சி வசப்படுத்தி அவர்களது உணர்ச்சியினை தான் ஆட்சியமைப்பதற்கான அத்திவாரமாக்கினார்.*


**(தொடர்ச்சி 10 ஆம் பக்கம் )**

### பொன்மொழிகள்

**பிறரிடமிருந்து நல்லனவற்றைக் கற்றுக் கொள்ள மறுப்பவன் இறந்தவனுக்கு இணையானவன்.**

— சுவாமி விவேகானந்தர்

### திருவருகை காலம்



*இயேசு தன் பணி வாழ்வைத் தொடங்கிய செய்தியை இன்றைய நற்செய்தி வாசகம் எடுத்துக் கூறுகிறது. மத்தேயு நற்செய்தியாளர் இயேசுவின் பணி வாழ்வின் தொடக்கத்தை இறைவாக்கினர் எசாயாவின் அறைகூவலின் நிறைவேறுதலாகப் பார்க்கிறார். "காரிருளில் வாழ்ந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மேல் சுடரொளி உதித்துள்ளது" கிறிஸ்து பிறந்ததால் ஒளியும், வாழ்வின் நம்பிக்கையும் இந்தப் புவிப் பரப்பில் உருவானது என்ற நற்செய்தியை புனித மத்தேயு பறைசாற்றுகின்றார்.*

*என்னுடைய பணியும், வாழ்வும் இயேசுவின் பணியும், வாழ்வும் போல அமைந்திருக்கின்றனவா என்று ஆய்ந்து பார்க்க அழைப்பு விடுக்கிறது இன்றைய வாசகம். எனது பணி இருளில் வாழ்வோர்க்கு ஒளியாக, நம்பிக்கை அற்றோருக்கு நம்பிக்கையாக இருக்கிறதா என்று என்னையே கேட்டுக்கொள்கிறேன். எனது வாழ்வும் இயேசுவின் வாழ்வு போல அமைய அருள்வேண்டுகிறேன்.*

**ஏ.அபி**

# பிராந்திய ஒத்துழைப்புக்கு பிம்ஸ்டெக் பயனுள்ளதாக இருக்க வேண்டும்

## - ஜனாதிபதி



(எம்.மனோசித்ரா)

பிம்ஸ்டெக் அமைப்பின் மூலம் உருவாக்கப்படும் பிராந்திய ஒத்துழைப்பு மிகவும் பயனுள்ளதாக இருக்க வேண்டும். பிராந்திய மக்களுக்கு நன்மைகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கு உறுப்பு நாடுகளுடனும் செயலகத்துடனும் இணைந்து அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிம்ஸ்டெக் அமைப்பின் பொதுச் செயலாளர் டென்சின் லெக்பெல் நேற்று புதன்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் 6ஆம் திகதி பிம்ஸ்டெக் அமைப்பின் செயலாளராக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் டென்சின் லெக்பெல் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

2018–2020 காலப்பகுதியில் பிம்ஸ்டெக் தலைமைத்தும் இலங்கைக்கு கிடைக்கப் பெற்றது. குறித்த காலப்பகுதியிலும் அதற்கு முன்னரும் பிம்ஸ்டெக் அமைப்பின் அங்கத்தவராக இலங்கை வழங்கிய பங்களிப்புக்களை செயலாளர் இதன் போது பாராட்டினார்.

பிம்ஸ்டெக் அமைப்பின் மூலம் உருவாக்கப்படும் பிராந்திய ஒத்துழைப்பு மிகவும் பயனுள்ளதாக இருக்க வேண்டும். உறுப்பு நாடுகளுடனும் செயலகத்துடனும் இணைந்து பிராந்திய மக்களுக்கு நன்மைகள் நேரடியாக கிடைப்பதை உறுதி செய்வதற்கு தான் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செயலாளரிடம் தெரிவித்தார். பிம்ஸ்டெக் சாசனத்தை பூர்த்தி செய்வதன் ஊடாக நிறுவன ரீதியிலான சீர்திருத்தத்தின் தேவை குறித்து இலங்கை கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பிம்ஸ்டெக்கின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக உறுப்பு நாடுகளுக்கிடையில் விடயதானங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். தொழில்நுட்பம், விஞ்ஞானம், புதிய கண்டுபிடிப்பு பிரிவுகள் என்பன இலங்கைக்கு பொருத்தமான விடயங்கள் ஆகும். இதற்கான செயற்றிட்டத்தை அடுத்த சில மாதங்களில் முன்வைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.



வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இங்நிகழ்வில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி அக் ஷராட்மநந்தா மஹராஜ் மற்றும் ராஜேஸ்வரானந்தஜி மஹராஜ், சாரதா மிஷன் மாதாஜி, இந்திய உயர்ஸ்தானிகராலய கலாசார பணிப்பாளர் டாக்டர் ரேவங் விக்ரம் சிங், பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், எதிர்க்கட்சித் தலைவரின் இணைப்புச் செயலாளர் உமாச்சந்திரா பிரகாஷ், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் உமா மகேஸ்வரன், பிரதமர் அலுவலக உதவிச் செயலாளர் கீத்நாத் காசிநாதன், திருமதி. சாந்தி நாவுக்கரசு, கொழும்பு மாநகர சபை உறுப்பினர்கள் சின்னதம்பி பாஸ்கரா மற்றும் கோபாலகிருஷ்ணர் விஷ்ணுகாந்த் உட்பட பலர் கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் காணலாம்.

# ஆவேச, அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும்

## -சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சபாநாயகர் தெரிவிப்பு

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

சபையில் ஆவேசமான முறையில் நடந்துகொள்ளுதல் மற்றும் ஏனைய உறுப்பினர்களை அபகீர்த்திக்கு உள்ளாக்கும் வகையில் கருத்துக்களை முன்வைப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை சபாநாயகர் அறிவிப்பு நேரத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் என்னை சந்தித்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதன்படி அனைத்து எம்.பி.க்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முழுமையான பொறுப்பை சபாநாயகர் என்ற ரீதியில் நான் கொண்டுள்ளேன். இதன்படி அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளேன்.

எவ்வாறாயினும் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாத வகையில் பார்த்துக் கொள்ளுமாறு அனைத்து எம்.பி.க்களையும் கேட்டுக் கொள்கின்றேன். குறிப்பாக சபையில் உரையாற்றும் போது ஆவேசமாக கருத்து வெளியிடுதல் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் மீது தனிப்பட்ட ரீதியில் அபகீர்த்திகளை ஏற்படுத்தும் வகையில் குற்றச்சாட்டுகளை முன்வைப்பதிலிருந்து தவிர்த்துக்கொள்ளுமாறும் மிகவும் விநயமாக கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

# ஓய்வூதியம் பெற்றுத்தருவதாக கூறி நகை கொள்ளை

## 4 பேருக்கு விளக்கமறியல்

(எம்.மனோசித்ரா)

ஓய்வூதியத்தைப் பெற்றுத்தருவதாகக் கூறி தங்க ஆபரணங்களை கொள்ளையிட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட நால்வர் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மாத்தளை பிரதேச செயலகத்தில் ஓய்வூதிய பிரிவில் பணிபுரிபவர்களாக தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட இருவரே அப்பகுதியில் வசிக்கும் பெண்ணொருவரின் வீட்டிற்குச் சென்று இவ்வாறு கொள்ளையடித்துள்ளனர்.

குறித்த நபர்களால் 4 தங்க வளையல்கள் கொள்ளையடிக்கப்பட்டதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கமைய மாத்தளை குற்ற விசாரணைப் பிரிவினரால் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அதற்கமைய இவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடைய 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து கொள்ளையிடப்பட்ட 30 பவுண் தங்க ஆபரணங்கள், 362 500 ரூபா பணம், கொள்ளையடிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள், போலியான தங்க ஆபரணங்கள் உள்ளிட்ட பல பொருட்கள் கைப்பற்றப்பட்டு மாத்தளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளில் அவிசாவளை, மாவத்தகம, பண்ணல, நாரம்மல, மல்வத்துஹிரிபிட்டி, தங்கொட்டுவ, ஹோகந்தர, கொஸ்கம மற்றும் கிரிஉல்ல உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறு பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 35, 38, 40 மற்றும் 48 வயதுகளையுடைய மினுவாங்கொடை, நீர்கொழும்பு மற்றும் திவுலப்பிட்டி பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை மாத்தளை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.





**சுற்றாடல் அமைச்சு**

**தேசிய குளிர்மைப்படுத்தல் கொள்கை – 2021 தொடர்பிலான பொதுமக்களின் கருத்துக்கள்**

ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம் (UNEP) மற்றும் கொள்கை ஆய்வுகள் நிறுவகம் (IPS) என்பவற்றுடன் இணைந்து சுற்றாடல் அமைச்சானது இலங்கை சார்பில் தேசிய குளிர்மைப்படுத்தல் கொள்கையொன்றை வகுப்பதற்கான முன்னெடுப்பொன்றை மேற்கொண்டுள்ளது. ஓசோன் படையைக் குறைக்கும் பதார்த்தங்கள் தொடர்பான மொன்றியல் உடன்படிக்கைக்கான தரப்பொன்றாக, இலங்கை அரசாங்கமானது ஐதரோகுளோரோபுளோரோ காபன்களை (HCFCs) கட்டங்கட்டமாக இல்லாமற் செய்வதுடன், ஐதரோபுளோரோ காபன்களை (HFCs) கட்டங்கட்டமாக குறைக்கும் திட்டங்களை அமுல்படுத்துவதற்கான கடப்பாட்டைக் கொண்டுள்ளது. நாட்டினது துரிதமாக அதிகரிக்கும் குளிர்மைப்படுத்தல் தேவைகளை காலநிலை – நட்புறவான விதத்தில் தீர்ப்பதற்கு துணைபுரிந்து இலங்கையில் குளிர்மைப்படுத்தலுடன் தொடர்புற்ற பிரச்சினைகள் தொடர்பான கொள்கை நடவடிக்கைகளை வழிப்படுத்துகின்ற பிரதான கொள்கை ஆவணமாக தேசிய குளிர்மைப்படுத்தல் கொள்கை அமையும். உணவு விரயத்தைக் குறைத்தல், ஆரோக்கியத்தை மேம்படுத்தல், மற்றும் குளிர்மைப்படுத்தலுக்கான மேம்படுத்தப்பட்ட அணுக்கத்திற்கூடாக உற்பத்தித்திறனை அதிகரித்தல், அக்கறைதாரர்கள் சார்பில் அதிகரித்த வலுசக்தி வினைத்திறனுக்கூடாக செலவினை மிச்சப்படுத்தி வழங்குதல், மற்றும் பச்சைஇல்ல வாயு உமிழ்வுகளைக் குறைத்தல், அதேவேளை உறுதிமிக்க மற்றும் கூடுதல் நிலைபேறான வலுசக்தி முறைமையொன்றையும் தூய்மைமிக்க வளியையும் உண்டாக்குதல் என்பவற்றுக்கான வழிகாட்டல்களை வழங்குவதே இக்கொள்கையின் உத்தேசமாகும்.

தேசிய குளிர்மைப்படுத்தல் கொள்கை வரைவானது (2021) அமைச்சின் www.env.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பொதுமக்களின் கருத்துக்களுக்காகப் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் தங்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் 2021.12.23 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ பின்வரும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சலிற்கு பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு எதிர்பார்க்கின்றது.

தபால் முகவரி: பணிப்பாளர்
வளி வள முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் அலகு
சுற்றாடல் அமைச்சு
"சொபாதம் பியச"
இல. 416/சீ/1, றொபேர்ட் குணவர்தன மாவத்தை,பத்தரமுல்லை.

மின்னஞ்சல் : noulanka@gmail.com
தொலைபேசி : 0112034218

வைத்தியர். அனில் ஜாசிங்க
செயலாளர்
சுற்றாடல் அமைச்சு
2021.12.08

# காணாமலாக்கப்பட்டோர் விடயம் சமரசம் செய்யக்கூடியதொன்றல்ல

## அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார் மனித உரிமைகள் சட்டத்தரணி ரட்ணவேல்



ஓமந்தை, காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் ஒரு சில சலுகைகளைக் கொடுத்து சமரசம் செய்யக்கூடியதொன்றல்ல என்பதனை அரசாங்கத்தரப்பினர் புரிந்து கொள்ள வேண்டும் என மனித உரிமைகள் சட்டத்தரணி ரட்ணவேல் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோர் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரில் காணாமல் ஆக்கப்பட்டோர், அரசாங்கத்திடம் சரணடைந்தோர் விடயம் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி கொண்டிருக்கின்றது. இவை யாவற்றிலும் அரசாங்கம் பொறுப்பு கூறவேண்டிய நிலையிலிருக்கின்றது.

ஏனென்றால் அவர்கள் சரணடைந்தது மற்றும் காணாமலாக்கப்பட்டது எல்லாமே அரசாங்கத்தின் பிரிவினராகிய பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் என பல்துறை சம்பந்தப்பட்டவர்கள் மூலமே. எனவே இதற்கு முற்றுமுழுதாக அரசாங்கம் தான் பதில் கூற வேண்டும். ஆனால் அந்த பொறுப்பிலிருந்து அரசாங்கம் தட்டிக்கழித்து கொண்டிருக்கின்றது.

மேலும் அந்த குற்றங்களை புரிந்தவர்கள் அந்த நேரத்திலும் சரி, இப்போதும் சரி அரசாங்கத்தின் பெரும் பொறுப்புக்களிலிருப்பவர்கள் அல்லது பொறுப்புக்களிலிருப்பவர்களுக்கு மிக நெருங்கிய சம்பந்தப்பட்டவர்கள்.

எனவே இவர்களை காட்டிக்கொடுக்காமல் இருப்பதற்கும், இவர்களை பாதுகாப்பதற்கும் தான் அரசாங்கம் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய எந்தவிதமான ஒரு நடவடிக்கையையும் எடுக்காமலிருக்கின்றது. அதே சமயத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான நிலையத்துக்கும் அதாவது ஓ.எம்.பி.அலுவலகத்துக்கும் அவர்கள் தகுதிவாய்ந்த அதிகாரிகளை நியமிக்காமல் தங்களுடைய அடிவருடிகளை நியமித்து அந்த அலுவலகத்தை சரியான முறையில் இயங்காமல் இருப்பதற்கான நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்கிறது.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து அதன் ஆணையாளர்களாக தொடக்கத்தில் பணியாற்றியவர்கள் மக்களிடம் அந்த விடயத்தை கொண்டுசென்று ஓரளவேனும் தங்களது கடமைகளை உணர்ந்ததாக இருந்தார்கள்.

ஆனால் அவர்கள் தற்போது பதவிக்கான காலம் முடிந்த பின்னர் இந்த அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டிருக்கும் ஆணையாளர்கள் முற்றுமுழுதாக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருப்பவர்கள். அதன் தலைவர் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி. அவர் அரசாங்கத்தின் ஒரு சார்பாளராக பதவிக்காலத்தில் பதவியிலிருந்தபோது கருதப்பட்டவர். எனவே அவரின் நடவடிக்கை எப்படியிருக்குமென நாங்கள் கூறத்தேவையில்லை .

எனவே எந்த அரசாங்கம் வந்தபோதிலும் இந்த காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் பொலிஸாரையும் இராணுவத்தினரையும் காப்பாற்றுவதற்காகவே செயற்படுகின்றது.

அத்துடன் எதற்காக காணாமல் போனார்கள்?, எப்படி காணாமலாக்கப்பட்டார்கள்? அவர்களுடைய கதி என்ன என்ற உண்மையை அறிந்துகொள்ள வேண்டும். அதன்பின்னர் தான் வேறு ஏதாவது கோரிக்கைகள் என அந்த உறவினர்கள் கூறுகின்றனர்.

ஆனால் எங்களுக்கு அவர்கள் காணாமலாக்கப்பட்டமுறை, அதற்கு யார் பொறுப்பாளர்கள். பொறுப்புகூறல் விடயத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மிகமிக ஆக்ரோஷமாக கடுமையாக இருக்கிறார்கள். எனவே இந்த விடயத்தை பூசிமெழுகுவதென்பது அரசாங்கத்தினால் இயலாத காரியம். எனவே இந்த போராட்டம் தொடரும். அந்த நடவடிக்கைகள் அரசாங்கம் நினைப்பதுபோல் அல்லது அரசாங்கத்தை சார்ந்தவர்கள் நினைப்பதுபோல் ஒரு சில விடயங்களை கொடுத்து சமரசம் செய்யக்கூடிய ஒரு விடயமல்ல என்பதனை அரசாங்கத்தரப்பினர் புரிந்துகொள்ள வேண்டும் என்றார்.




# மன்னாரில் சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த மாணவர்கள் 29 பேருக்கு கொரோனா தொற்று

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன்

(தலைமன்னார் நிருபர்)

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்தில் தங்கி பாடசாலைகளுக்கு சென்றுவரும் மாணவர்கள் 29 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமையால் அவர்கள் தங்கியிருக்கும் இல்லத்தின் ஒரு பகுதியில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று நடத்திய ஊடகச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் மேலும் 46 பேர் கொவிட் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 29 பேர் திருக்கேதீஸ்வரத்தில் உள்ள சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்து அயலிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களாகவும் பல்கலைக்கழக மாணவர்களுமாகவும் உள்ளனர்.

இவர்களுக்கு அவர்கள் தங்கியிருந்த விடுதியிலேயே தொடர்ந்தும் ஒரு பகுதியில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

இவர்களோடு சேர்ந்து இதுவரை 118 பேர் கொவிட் தொற்றோடு இனம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் தற்பொழுது டெங்கு தீவிரமாக பரவி வருகின்றது. குறிப்பாக தற்பொழுது மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் பனங்கட்டுகொட்டு, பெரியகடை, சின்னக்கடை, மூர்வீதி, தோட்டவெளி மற்றும் பேசாலை பகுதிகளில் டெங்கு நோயாளர்கள் அதிகமாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதுவரை இந்த வருடம் மொத்தமாக 83 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை நவம்பர் மாதம் 26 பேரும் டிசம்பரில் முதல் ஏழு நாட்களில் 27 பேரும் டெங்கு நோய்க்கு ஆளாகியுள்ளார்கள்.நுளம்பு பெருகக்கூடிய இடங்களை கண்டுபிடித்து அவற்றை அழிப்பது அல்லது சுத்திகரிப்பது போன்ற செயல்பாட்டினால் நுளம்பின் தாக்கத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்றார்.

# சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில் ஆசிரியர்கள் முன்மாதிரியாகச் செயற்படவேண்டும்

## வடக்கு மாகாண கல்வி அமைச்சு வலியுறுத்து

( எம்.நியூட்டன்)

கொவிட்19 நோய்த்தொற்று பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில் ஆசிரியர்கள் முன்மாதிரியாகச் செயற்பட வேண்டும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாண பாடசாலைகளில் ஆசிரியர்கள் சிலர் முகக்கவசம் அணிவது உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில்லை என்று முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், கைகளை சவர்க்காரம் இட்டுக் கழுவுதல் அல்லது தொற்று நீக்கியைப் பயன்படுத்தல் போன்ற சுகாதார நடைமுறைகளை உரியவகையில் பேணியவாறு பாடசாலைகளை மீள ஆரம்பிக்க சுகாதார அமைச்சினால் கண்டிப்பான அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

எனவே ஆசிரியர்கள் சுகாதார வழிகாட்டுதல்களை உரியவாறு கடைப்பிடிக்கும் போதுதான் மாணவர்களும் அவற்றைப் பின்பற்றுவார்கள். அதற்கான அறிவுறுத்தல்கள் அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கொவிட்19 நோய்த்தொற்றின் பரவல் தீவிரமடைந்துள்ளது என்று சுகாதார அமைச்சு அதிகாரிகள் தகவல் வழங்கியுள்ளனர். எனவே சுகாதார நடைமுறைகளை உரிய வகையில் பின்பற்றுவதன் ஊடாகவே மாணவர்களின் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளை தொடர்ந்து கொண்டு செல்ல முடியும்.

அதேவேளை பொதுப் போக்குவரத்து சேவைகளில் பயணிக்கும் மாணவர்கள் முகக்கவசம் அணிவதனை நடத்துனர்கள் கண்காணிக்கவேண்டும். அவை தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

பாடசாலைகளில் சுகாதார நடைமுறைகள் பின்பற்றுவதனை உறுதி செய்ய கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

# வல்வெட்டித்துறை நகரசபைக்கு புதிய தலைவர் தெரிவு

(வடமராட்சி நிருபர்)

வல்வெட்டித்துறை நகரசபைக்கு புதிய தலைவர் ஒருவர் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை தெரிவு செய்யப்படுவார் என வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் ரஞ்சன் அறிவித்துள்ளார்.

இச்சபையின் வரவு செலவு திட்டம் கடந்த மாதம் இரு முறை சமர்ப்பிக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டது.

இதனையடுத்தே சபைக்கான புதிய தலைவர் தெரிவு செய்யப்படவுள்ளார்.

வல்வெட்டித்துறை நகரசபைக்கான தேர்தல் கடந்த 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற பின்னர் இதுவரை முறையே இரு தலைவர்கள் பணியாற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையில் ஆரம்பத்தில் இருந்து வந்த இச் சபை சில மாதங்களுக்கு முன்னர் சுயேட்சைக்குழுவின் ஆளுகைக்குள் மாறியிருந்தது.

# அதிகாரப் பகிர்வு என்பது அனைத்து சமூகத்தினருக்கும் ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலகராஜ்



அதிகாரப் பகிர்வு என்பது அனைத்து சமூகத்தினருக்கும் ஏற்புடையதாக இருத்தல் வேண்டும் என்று நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்துள்ளார்.

சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கடந்த 7ஆம் திகதி இடம்பெற்ற புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கான முன்மொழிவுகள் குறித்து அரசியல் அமைப்பு நிபுணரான சட்டத்தரணி கலாநிதி ஜயம்பத்தி விக்கிரமரத்ன, பேராசிரியர் ரொஹான் சமரஜீவ, சட்டத்தரணி ஜாவிட் யூசுப், கலாநிதி சுஜாதா கமகே ஆகியோருடன் உத்தேச அரசியல் அதிகாரப் பகிர்வு மொழி ஆகிய விடயதானங்கள் எவ்வாறு அமைதல் வேண்டும் எனும் தலைப்பில் உரையாற்றும் போதே திலகராஜ் மேற்படி கருத்தினைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,தெரிவித்துள்ளதாவது,

1987 ஆம் ஆண்டு அதிகார பகிர்வு முறைமை ஒன்றாக மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டபோது அதற்கு வலுசேர்க்கும் விதமாக, அதுவரை நடைமுறையில் இருந்த 'கம்சபா' முறைமை பிரதேச சபை முறையாக மாற்றப்பட்டபோது, கம்சபா முறைமையில் உள்வாங்கப்பட்டிருக்காத மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு சேவையாற்ற பிரதேச சபைச் சட்டத்திலும் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

எனவே புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது எத்தகைய அதிகாரப்பகிர்வு முறைமையாயினும் அது நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் ஏற்புடையதாகவும் அமைதல் வேண்டும் .

பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் புதிய அரசியலமைப்பு உருவாக்கும் நோக்கிலான அரசியலமைப்பு பேரவை உறுப்பினராகவும், 'மத்தி சுற்றயல் அதிகார பகிர்வு' குறித்த உப குழுவின் உறுப்பினராகவும் செயற்பட்டவன் என்ற வகையில் இலங்கையில் அமையப் பெறவுள்ள உத்தேச அரசியல் அமைப்பில் அதிகார பகிர்வு எவ்வாறு அமைதல் வேண்டும் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்துடன் இணைந்து அதன் தயாரிப்புப் பணிகளிலும் அதனை அறிக்கை செய்வதிலும் பங்களிப்பு செய்யக் கிடைப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

துணைத்தத்துவ கோட்பாட்டின் (Principle of Subsidiarity ) அடிப்படையில் அதிகபட்சம் சாத்தியமான எல்லா வழிவகைகளினாலும் அதிகாரப் பகிர்வானது அமைதல் வேண்டும்.

அதாவது, அதிகார அலகுகளின் எல்லாப் படிநிலையிலும் (Tiers) வினைத்திறனாகக் கையாளக்கூடிய விடயதானங்கள் அத்தகைய படிநிலைக்கு வழங்கப்படல் வேண்டும்.

உள்ளூராட்சி மன்ற படிநிலையானது அரசாங்கத்தின் அடுக்கு ஒன்றாக அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், மாகாண சபை அதிகாரங்களை முதன்மை அதிகார பகிர்வு அலகாக அரசியலமைப்பு உறுதி செய்ய வேண்டும் என்பது எமது முன்மொழிவாகும்.மேலதிகமாக அரசாங்கத்தின் பல்வேறு அடுக்கு நிலைகளிலும், வேறுபட்ட புவியியல்சார் பகுதிகளிலும், அத்தகைய பகுதிகளுக்குள் சிறுபான்மையினராக உள்ள சமூகங்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் சமுதாயப் பேரவைகள் ( community Councils ) உருவாக்கப்படுவதை அரசியலமைப்பு ஏற்பாடுகள் மூலம் உறுதி செய்யப்படல் வேண்டும்.

எவ்வாறாயினும் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டபோது அதற்கு வலுசேர்க்கும் விதமாக, அதுவரை நடைமுறையில் இருந்த 'கம்சபா' முறைமை பிரதேச சபை முறையாக மாற்றப்பட்டபோது, கம்சபா முறைமையில் உள்வாங்கப்பட்டிருக்காத மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு சேவையாற்ற பிரதேச சபைச் சட்டத்திலும் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

எனவே புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது எத்தகைய அதிகாரப்பகிர்வு முறைமையாயினும் அது நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் ஏற்புடையதாகவும் அமைதல் வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்தார்.




# நுவரெலியா – நானுஓயா பகுதியில் வாகன விபத்து ; ஒருவர் படுகாயம்

(அட்டன் நிருபர்)





நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அட்டன் – நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா பங்களாஅத்த பகுதியில் நேற்று காலை 9 மணியளவில் கனரக டிப்பர் லொறி ஒன்றும் கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹங்குராங்கெத்த ஹேவாஹெட்ட பகுதியிலிருந்து அட்டன் பகுதியை நோக்கி சென்ற கார் ஒன்றும் தலவாக்கலை பகுதியில் இருந்து நுவரெலியா பகுதிக்கு சென்ற கனரக டிப்பர் லொறி ஒன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன. இந்த விபத்தில் காரில் பயணித்த 5 பேரில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த கனரக டிப்பர் லொறியின் சாரதி வேகத்தைகட்டுப்படுத்தாது செலுத்தியதால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது. லொறியின் சாரதி நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் ஆஜராகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இரத்தினபுரி மாவட்டத்தில் இதுவரை 43981 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம்

(இறக்குவானை நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் இதுவரை 43,981 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் கடந்த நவம்பர் மாதம் மட்டும் 3989 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரத்தினபுரி மாவட்ட கொரோனா தொற்று தடுப்பு பிரிவு குழு கூட்டம் நேற்று முன்தினம் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது மேற்படி மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவுவதை கட்டுபடுத்தவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, முதியோருக்கு கொவிட் பூஸ்டர் தடுப்பூசி வழங்குவது முக்கியமானதாகும் என்று இரத்தினபுரி மாவட்ட சுகாதார பிரிவினர்கள் தெரிவித்ததுடன், இது சம்பந்தமாக மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊடாக மக்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த மாகாண ஆளுநர், இரத்தினபுரி மாவட்ட மக்களுக்கு தேவையான தடுப்பூசிகளை எவ்வித குறைபாடுகளுமின்றி பெற்று கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்வரும் சிவனொளிபாதமலை யாத்திரை சுகாதார பிரிவினர்களின் ஆலோசனைக்கமைய ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத், இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபோத்தாகம உட்பட அரச, சுகாதார, பாதுகாப்பு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# அட்டனிலும் எரிவாயு அடுப்பால் தீ விபத்து



(பொகவந்தலாவை நிருபர்)

அட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா வனராஜா தேயிலை தொழிற்சாலைக்கு அருகாமையில் உள்ள குடியிருப்பில் எரிவாயு அடுப்பு வெடித்தமையால் நேற்று தீ விபத்து ஒன்று ஏற்பட்டதாக அட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று புதன்கிழமை காலை 06.30மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறித்த குடியிருப்பில் உள்ள பெண் விடியற்காலையில் அடுப்பை பற்றவைக்க முயன்ற போதே குறித்த எரிவாயு அடுப்பு தீ பற்றி வெடித்துள்ளது. உடனடியாக அயலவர்களின் உதவியோடு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் எவருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லையென அட்டன் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# நுவரெலியா ஆற்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

(அட்டன் நிருபர்)



நுவரெலியா, ருவான் எலியா, பிளாக்பூல் ஆற்றில் விழுந்து உயிரிழந்த பெண்ணொருவரின் சடலம் நேற்று காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா, ருவான் எலியா, பன்சல வீதியைச் சேர்ந்த 78 வயதுடைய புஞ்சிபண்டாரகே மெனிகாமி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தனது மகள் மற்றும் மருமகன்களுடன் வீட்டில் தங்கியிருந்த நிலையில் இரவு உறங்கிக் கொண்டிருந்த தாய் காலையில் பார்க்கும் பொழுது வீட்டில் இல்லை என உயிரிழந்த பெண்ணின் மகள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

குறித்த பெண்ணின் சடலம் சட்ட வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. நுவரெலியா பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### தமிழ் ஊடகவியலாளர் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவம்

# உடனடி விசாரணைகள் அவசியம்

### -ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச அமைப்பு வலியுறுத்தல்

(நா.தனுஜா)

ஊடகவியலாளர் விஷ்வலிங்கம் விஷ்வசந்திரனை, தமது சிப்பாய்கள் மிகமோசமாகத் தாக்கியதை மறுக்கும் இலங்கை இராணுவத்தின் செயற்பாடு ஊடக சுதந்திரத்தின் மீது நிகழ்த்தப்படும் மிகமோசமான அவமதிப்பாகும். இச்சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதுடன் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு பொறுப்புக்கூறச்செயப்பட வேண்டும் என்று அமெரிக்காவின் நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டியங்கும் ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

மாவீரர் நாளான கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதியன்று முல்லைத்தீவின் முள்ளிவாய்க்கால் பகுதியில் செய்தி அறிக்கையிடலில் ஈடுபட்டிருந்த பிராந்திய ஊடகவியலாளரொருவர் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதில் படுகாயமடைந்த அவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

அதுமாத்திரமன்றி குறித்த ஊடகவியலாளர் தனக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய காயங்களைக் காண்பித்து, இராணுவ சிப்பாய் ஒருவர் முட்கம்பி சுற்றப்பட்ட பனை மட்டையால் தாக்கியமையினாலேயே அந்தக் காயங்கள் ஏற்பட்டதாகக் கூறுகின்ற காணொளியொன்று சமூகவலைத்தளங்களில் பகிரப்பட்டதுடன் அதற்குப் பல்வேறு தரப்பினரும் தமது கண்டனங்களை வெளிப்படுத்தியிருந்தனர்.

அதேவேளை ஊடக அறிக்கையொன்றின் ஊடாக மேற்படி சம்பவத்தை முழுமையாக மறுத்த இலங்கை இராணுவம், வடகிழக்கிலுள்ள இராணுவத்தினரின் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் சில தரப்பினரால் திட்டமிட்டு அச்சம்பவம் அரங்கேற்றப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருந்தது.

இதுகுறித்து ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

ஊடக சுதந்திரத்தை முன்னிறுத்திச் செயற்பட்டுவரும் அமைப்பான இலங்கையின் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள், ஊடகப்பணியாளர்கள் தொழிற்சங்கப் பேரவை, முல்லைத்தீவு பத்திரிகை பேரவை ஆகிய அமைப்புக்களினால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் மற்றும் தகவல்களின் பிரகாரம் கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் செய்தியறிக்கையிடலில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர் விஷ்வசந்திரன் முட்கம்பி சுற்றப்பட்ட பனை மட்டையைப் பயன்படுத்தி இராணுவ சிப்பாய்கள் சிலரால் தாக்கப்பட்டிருக்கின்றார்.

இச்சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி முல்லைத்தீவு பத்திரிகை பேரவையினால் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டதையடுத்து கடந்த 28ஆம் திகதி இராணுவப்பொலிஸாரினால் 3 இராணுவ சிப்பாய்கள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். சட்டத்தின் பிரகாரம் மேற்படி 3 இராணுவ சிப்பாய்களும் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவில்லை என்று இவ்விவகாரம் தொடர்பில் நன்கறிந்த ஒருவர் தெரிவித்தார். அதேவேளை இச்சம்பவத்தை மறுத்து, அது குறித்து பிறிதொரு விளக்கத்தை வழங்கும் வகையிலான அறிக்கையொன்றைக் கடந்த 30 ஆம் திகதி இலங்கை இராணுவம் வெளியிட்டிருந்தது.

தமிழ் ஊடகவியலாளர்கள் அவர்களது பணியில் ஈடுபட்டமைக்காக அச்சுறுத்தல்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் உள்ளாக்கப்படுவது தொடர்கின்ற சூழ்நிலையில், ஊடகவியலாளர் விஷ்வலிங்கம் விஷ்வசந்திரனை தமது சிப்பாய்கள் மிக மோசமாகத்தாக்கியதை மறுக்கும் இலங்கை இராணுவத்தின் செயற்பாடு ஊடக சுதந்திரத்தின்மீது நிகழ்த்தப்படும் மிக மோசமான அவமதிப்பாகும். உரிய அதிகாரிகளால் இச்சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதுடன் குற்றவாளிகள் சட்டத்தின் முன்நிறுத்தப்பட்டு பொறுப்புக்கூறச்செய்யப்பட வேண்டும் என்று அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

### கொடூரமாக கொல்லப்பட்ட பிரியந்த குமாரவின் குடும்பத்துக்கு

# ஒரு இலட்சம் டொலர் நட்ட ஈடு வழங்க பாகிஸ்தான் தீர்மானம்

### மாதச் சம்பளம் தொடர்ந்தும் வழங்கப்படுமாம்; சியல்கோட் கொடூரத்தை ஒத்த சம்பவங்கள் இடம்பெறுவதற்கு இனி ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என இம்ரான் கான் அறிவிப்பு





(எம்.எப்.எம்.பஸீர்)

பாகிஸ்தான் பஞ்சாப் மாநிலம், சியல்கோட்டில் கொலை செய்யப்பட்ட இலங்கையரான பிரியந்த குமாரவின் குடும்பத்தாருக்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் இழப்பீடு வழங்க பாகிஸ்தான் தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் சியல்கோர்ட் வணிக சமூகம் தனக்கு அறிவித்துள்ளதாக தெரிவித்துள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், பிரியந்த குமாரவின் சம்பளத்தை மாதாந்தம் அவரது குடும்பத்துக்கு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். சர்வதேச ஊடகங்கள் இது குறித்து செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்லாமாபாத்திலுள்ள பிரதமர் அலுவலகத்தில், நேற்று முன்தினம் பிரியந்த குமாரவுக்கு இரங்கல் தெரிவிக்கும் விஷேட நிகழ்வின் போதே இம்ரான் கான் இதனை தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் தனது உரையின் முடிவில், பாக். பிரதமர் இம்ரான் கான் "நான் உயிருடன் இருக்கும் வரை, சியல்கோட் படுகொலை போன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்க அனுமதிக்கமாட்டேன்" என குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, பிரியந்த குமார மீது தாக்குதல் மேற்கொண்ட போது, அவரின் உயிரைக் காக்க முயன்ற மலிக் அத்னானுக்கு, பாகிஸ்தான் பிரதமரால் துணிச்சலுக்கான விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தான் சியல் கோட்டில் கொடூரமான முறையில் தாக்கி கொலை செய்யப்பட்ட இலங்கையரான பிரியந்த குமாரவின் குடும்பத்திற்கு 2.5 மில்லியன் ரூபா பணத்தை வழங்க இலங்கை அரசாங்கமும் தீர்மானித்துள்ளது.

புலம்பெயர் பணியாளராக 11 வருடங்களுக்கு மேல் இலங்கை பொருளாதாரத்திற்கு பிரியந்த குமார வழங்கிய ஒத்துழைப்பை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் பாதுகாப்பு தரப்பினரை உடனடியாக விலக்க வேண்டும்

(எம்.எம்.சில்வெஸ்டர்)

அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரை உடனடியாக வேலையிலிருந்து விலக்க வேண்டும். அதைவிடுத்து, வேலையிலிருந்து இடை நீக்கம் செய்துவிட்டு மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வதை அரசாங்கம் தவிர்க்க வேண்டும் என புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான நடராஜா ரவிக்குமார் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் தாக்குதல் சம்பவத்துக்கு பின்னணியில் எதிர்க்கட்சியினர் சூழ்ச்சி செய்துள்ளனரா என்ற சந்தேகம் எழுகிறது. அத்துடன், இது எதிரணியில் இருக்கும் தமிழ் கட்சிகளின் சூழ்ச்சியாக இருந்திருக்குமோ என்ற சந்தேகம் நிலவுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் கூறுகையில், "மாவீரர் தினத்தன்று முள்ளிவாய்க்காலில் ஊடகவியலாளரொருவர் மீது இராணுவ வீரர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர். வேலிக்கம்பியை பனை மட்டையில் சுற்றி தாக்குதல் நடத்தியிருந்தனர். அதுபோல், தற்போது பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் வைத்து ஊடகவியலாளர் ஒருவரை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தியுள்ளனர். இந்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை விசாரித்து சேவையிலிருந்து இடை நீக்கம் செய்வதை தவிர்த்துவிட்டு, அவ்வாறு அதிகார துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்களை, அரசாங்கம் உடனடியாக வேலையிலிருந்து நிறுத்த வேண்டும்.

அவ்வாறு சேவையிலிருந்து நிறுத்தினால் மாத்திரமே, இனிவரும் காலங்களில் அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் என சகலரும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதற்கு அஞ்சுவார்கள். அதை விடுத்து அவர்களை விசாரணை செய்து, அவர்களை இடைநீக்கம் செய்துவிட்டு, பின்னர் மீண்டும் அவர்களை சேவையில் இணைத்துக்கொள்வதில் எந்தப் பிரயோசனமும் இல்லை.

**புதிய ஜனநாயக மக்கள் முன்னணி**

உண்மையில், முள்ளிவாய்க்கால் ஊடகவியலாளர் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியமைக்கு அதிகாரம் அளித்தது யார்? இதன் பின்னணியில் இருப்பது யார்? இதனை மேற்கொண்ட இராணுவ வீரர்களை அரசாங்கம் சட்டத்துக்கு முன் நிறுத்தியுள்ளது. இதற்காக நான் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும், அரசாங்கத்துக்கும் நன்றி தெரிவிக்கிறேன். அரச அதிகாரிகள், பொலிஸார் என பலரும் இலஞ்சம் பெற்றுக்கொண்டு, அவர்களை விடுதலை செய்வதை நான் வன்மையாக கண்டிக்கிறேன்.

நாட்டில் ஊடக சுதந்திரத்தையும், ஊடகவியலாளர்களையும் பாதுகாப்பதற்கு எமது அரசாங்கம் முன்னின்று செயற்பட்டு வருகின்றது" என்றார்.

# கிணற்றுத் தவளை போன்ற பொருளாதாரத்தில் இலங்கை

### ஒருபோதும் முன்னேற முடியாது -ஐ.தே.க ஆலோசனை

(எம்.மனோசித்ரா)

இலங்கை மீது உலக நாடுகள் பலவும் சினம் கொண்டுள்ளன. தற்போது சீனா பகையாகி வருவதுடன் இந்தியாவும் ஆழமான நட்பில் இல்லை என்றே வெளிப்படுகின்றது. கிணற்றுத் தவளை போன்ற பொருளாதாரத்தில் ஒருபோதும் முன்னேற முடியாது என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.

கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் கட்சி செயற்பாட்டாளர்களுடன் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கத்தினால் நாட்டு மக்கள் பாரிய கடன் சுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அடுத்த ஆண்டில் இந்த கடன் சுமையால் நாட்டினதும், மக்களினதும் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடையும். ஐ.தே.க. ஆட்சியில் மூன்று வேளையும் உணவு உண்ட மக்கள் தற்போதைய ஆட்சியில் ஒருவேளை உணவை உண்பதற்கும் சிரமப்படுகின்றனர். நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உண்பதற்கு உணவு இல்லை என்று மக்கள் எதிர்க்கட்சிகளிடம் குற்றம் சுமத்தியதில்லை. எனினும் தற்போது நாளாந்தம் மக்கள் இந்த குற்றச்சாட்டினை முன்வைக்கின்றனர்.

மக்கள் தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தும் வாய்ப்பை வழங்கியதால் நல்லாட்சி அரசாங்கத்தை அவர்கள் கோழைகள் என்று வரையறுத்தனர். எனினும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் அரசாகவே நாம் செயற்பட்டோம். பலருக்கு அது கோழைத்தனமாகத் தோன்றியது. அவ்வாறு எம்மை கோழைகள் என்று நினைத்தவர்களும் இப்போது இந்த அரசின் கொடுமையை பார்த்துக்கொண்டிருக்கின்றனர். எமது ஆட்சிக் காலத்தில் அரசாங்கத்தை சமூக வலைத்தளங்களில் விமர்சிக்க வாய்ப்பளிக்கப்பட்டது. இன்று அந்த வாய்ப்பும் இல்லை.

அரசாங்கத்திற்கு எதிராக சமூக வலைத்தளங்களில் கருத்துக்களை வெளியிடும் இளைஞர்கள் குற்ற விசாரணைப் பிரிவிற்கு அழைக்கப்படுகின்றனர். அவ்வாறில்லை என்றால் குறித்த சமூக வலைத்தள கணக்குகள் முடக்கப்படுகின்றன. பொலிஸார் ஊடாக மக்களின் கருத்து சுதந்திரம் முடக்கப்படுகிறது. குரல் கொடுக்கக் கூடியவர்களை பாராளுமன்றம் செல்ல மக்கள் அனுமதிக்கவில்லை. அவர்கள் செய்த செயலின் தீவிரத்தை மக்கள் இப்போது புரிந்து கொண்டுள்ளனர்.

இந்த அரசாங்கம் முன்னோக்கிச் செல்லப் போவதில்லை. அரசாங்கத்தின் முட்டாள்தனமான செயற்பாடுகளால் பொதுமக்களே பாதிக்கப்பட்டுள்ளனர். பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்வதற்கு பெருமளவில் நிதியை ஒதுக்கும் இந்த அரசாங்கம் தேவையான இடங்களில் பாலங்களை நிர்மாணித்துக் கொடுப்பதில்லை. இதன் காரணமாகவே கிண்ணியாவில் அந்த அசம்பாவிதம் ஏற்பட்டது.

நிதி அமைச்சர் இந்தியாவிற்கு விஜயம் செய்த போதிலும், அந்நாட்டிலிருந்து எவ்வித உதவியும் கிடைக்கப் பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்திடம் போதியளவு நிதி கையிருப்பில் இல்லை என்பதால் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது. சமையல் எரிவாயு சிலிண்டர்களை வீடுகளில் வைத்திருப்பவர்கள் வெடிகுண்டை வீட்டில் வைத்திருப்பதைப் போல அச்சத்துடனேயே இருக்கின்றனர்.

இலங்கையில் மேற்கொண்டிருந்த முதலீட்டினை சீனா தற்போது மாலைதீவிற்கு வழங்கியுள்ளது. மறுபுறம் இந்தியாவும் எவ்வித ஒத்துழைப்புக்களையும் வழங்கவில்லை. இதன் காரணமாகவே ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நிதி அமைச்சரின் இந்திய விஜயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பினார். எனினும் அதற்கு அரசாங்கத்திடமிருந்து எந்தப் பதிலும் இல்லை.

நாட்டில் பாரிய டொலர் தட்டுப்பாடு நிலவுகிறது. சர்வதேச ஒத்துழைப்புகள் பூச்சிய நிலையில் உள்ளன. இலங்கையின் நிலையற்ற செயற்பாடுகளினால் சீனாவும் சினம் கொண்டுள்ளது. மறுபுறம் இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கை மீது சினம் கொண்டுள்ளன. இவ்வாறான நாட்டை எவ்வாறு ஆட்சி செய்ய முடியும்? கிணற்றுத் தவளை போன்ற பொருளாதாரத்தில் ஒருபோதும் முன்னேற முடியாது. உலகில் எந்தவொரு நாடும் தனது நாட்டிற்குள் சிறைப்பட்டிருப்பதில்லை. நவீன தொழில்நுட்பத்துடன் பொருளாதார அபிவிருத்திகளை கையாள்கின்றன.

கொவிட் தொற்றின் காரணமாக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாகக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம் பாதிக்கப்பட்ட ஏனைய பல நாடுகளும் பொருளாதார நெருக்கடியை சரியாக முகாமைத்துவம் செய்துள்ளன. இலங்கையில் அவ்வாறான பொருளாதார முகாமைத்துவம் இல்லை. ஏனைய நாடுகள் முன்னோக்கிச் சென்று கொண்டிருக் கின்றன. ஆனால் இலங்கை பின்னோக்கி சென்று கொண்டிருக்கிறது. ஐக்கிய தேசிய கட்சி மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரால் மாத்திரமே நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் என்றார்.

### கெசல்வத்த பவாஸின் கொலை

# கைதான தனுகவின் சகாக்கள் நால்வருக்கும் விளக்கமறியல்

(எம்.எப்.எம்.பஸீர்)

வாழைத்தோட்டம் – பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பீர் சாஹிபு வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது 'கெசல்வத்த பவாஸ்' என அறியப்படும் மொஹம்மட் காமில் மொஹம்மட் பவாஸ் எனும் 33 வயதான நபர் காரில் வந்தோரால் கொடூரமாக வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நால்வரையும் எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதிவான் புத்திக சி ராகல உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போதே அவர் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

கொழும்பு 12, சென் செபஸ்தியன் வீதியைச் சேர்ந்த ஹெட்டி ஆரச்சிலாகே காவிந்த திஸ்மித்த, மிஹிந்து மாவத்தையைச் சேர்ந்த தொன் தெனுவன் சத்துரங்க, பழைய யோன் வீதியைச் சேர்ந்த மொஹம்மட் பலீல் மொஹம்மட் ரிஷாத், சென் செபஸ்தியன் வீதியைச் சேர்ந்த மொஹம்மட் அன்வர் மொஹம்மட் உமர் ஆகிய நான்கு சந்தேக நபர்களுமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

கடந்த 4ஆம் திகதி காரொன்றில் சென்றுள்ள சந்தேக நபர்கள் பவாஸைத் துரத்திச்சென்று, கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றுக்கு தெரிவித்தனர்.

'கெசல்வத்த பவாஸ்' 7 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் கைக்குண்டு ஒன்றுடன் இவ்வருடத்தின் ஆரம்ப பகுதியில் கைது செய்யப்பட்டு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் அவர் கடந்த நவம்பர் 11ஆம் திகதியே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இவ்வாறான பின்னணியிலேயே இக்கொலை நடந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மார்ச் மாதம் டுபாயில் உயிரிழந்த ' 'கெசல்வத்த தினுக' எனும் பாதாள உலக தலைவனின் சகோதரரான கெசல்வத்த தனுகவின் சகாக்களே கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் எனவும், இரு குழுக்களுக்கு இடையிலான ஹெரோயின் போதைப் பொருள் வர்த்தகம் கொலைக்கான காரணம் என தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் நீதிமன்றுக்கு அறிவித்தனர்.



# மட்டு. மண் வளம் சூறையாடப்படுவதை தடுக்கக்கோரி விவசாயிகள் போராட்டம்





(பட்டிருப்பு, செங்கலடி நிருபர்கள்)

மட்டக்களப்பு மண் வளம் சூறையாடப்படுவதை தடுத்து நிறுத்தக் கோரியும் பாதை சேதமடைந்துள்ளதைக் கண்டித்தும் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஈரளக்குளம் விவசாயிகள் நேற்று வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் ஆகியோர் மட்டக்களப்பு மண் வளம் சூறையாடப்படுவதைக் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர். ஆத்திரமுற்ற போராட்டக்காரர்கள் வெளி மாவட்டங்களிலிருந்து வந்த கனரக வாகனங்களை திருப்பி அனுப்பியதுடன் மண்ணை ஏற்றிச் சென்ற கனரக வாகனங்களை மறித்து அனைத்து மண்ணையும் ஏற்றிய இடத்தில் இறக்கச் செய்தனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த அப்பகுதிக்கான மணல் அகழ்வு அனுமதிப்பத்திரத்தை பெற்றுள்ளவர் வீதி சேதமடைந்தது வேதனைக்குரிய விடயம் எனவும் குறித்த வீதியை தனது செலவில் செப்பனிட்டுத் தருவதாகவும் இன்று முதல் வெளிமாவட்டங்களுக்கு மணல் அனுப்புவதற்கு அனுமதி அளிக்கப்படாது என உறுதியளித்ததை அடுத்து போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

# கல்முனைப் பிராந்தியத்தில் டெங்கு தீவிரம்; பொதுமக்கள் அவதானம்

## கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுகுணன்

(அம்பாறை நிருபர்)

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் மிக அவதானமாக செயற்படுமாறு கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ. சுகுணன் தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், கல்முனைப் பிராந்தியத்தில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளது. கடந்த ஜனவரி தொடக்கம் இதுவரை 242 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் தற்போது பருவகால மழை ஆரம்பித்துள்ளதால் டெங்கு நுளம்பு பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் அண்மைக்காலமாக டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர்.

கொரோனா தொற்று தாக்கத்துக்கு மத்தியிலும் கல்முனைப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார், சிவில் பாதுகாப்பு குழுவினர், டெங்கு ஒழிப்பு செயலணி மற்றும் சமூக மட்டத் தலைவர்கள் ஆகியோர் வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டல் நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளனர்.

எனவே வீடுகளுக்கு வரும் டெங்கு ஒழிப்பு குழுவினருக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பொத்துவில், அட்டாளைச்சேனை, நிந்தவூர் மற்றும் காரைதீவு ஆகிய சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகள் டெங்கு நோய் பரவக்கூடிய இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

எனவே டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான வெற்றுக்காணிகளை வைத்திருப்பவர்கள் இரண்டு வார காலத்துக்குள் துப்புரவு செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது ஒரு வகையான காய்ச்சல் பரவியுள்ளது. எனவே 03 நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமானால் உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலைக்குச் சென்று பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்றார்.

# ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை வன்மையாகக் கண்டிக்கின்றேன்

## பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன்

(பட்டிருப்பு நிருபர்)

இலங்கை ஆசிரியர் சங்கம் தன்மீதும் தனது கட்சியின் மீதும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளமைக்கு வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்வதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தில் பணிபுரியும் ஆசிரியர் ஒருவரை இடமாற்றக்கோரி திங்கட்கிழமை(06) குறித்த பாடசாலை முன்றலில் ஓர் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளதாக எனக்கு அறியக்கிடைத்தது.

மேற்படி ஆசிரியர் தனது பணி சார்ந்து இதுவரை 41 குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளவர் எனவும் தெரியவருகின்றது. அவர்மீது மாவட்டத்திலுள்ள கல்வித் திணைக்கள மேலதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைதொடருகின்றது. இந்நிலையில்தான் குறித்த ஆசிரியரை இடமாற்றக்கோரி மேற்படி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது என நான் கருதுகின்றேன்.

அதன்காரணமாகவே பெற்றோரும் பழைய மாணவர்களும் பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறைகொண்டு செயற்படும் நலன்விரும்பிகளும் சம்பந்தப்பட்ட ஆசிரியரை இடமாற்றக்கோரி பாடசாலை முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தியுள்ளனர் என புரிந்துகொள்ள முடிகின்றது.

ஜனநாயக ரீதியான அந்த ஆர்ப்பாட்டத்தை எதிர்கொள்ள முடியாத குறித்த ஆசிரியர் இவ்விடயம் தொடர்பாக எவ்வித சம்பந்தமும் அற்ற என்னுடைய பெயரையும் எனது கட்சியின் பெயரையும் பயன்படுத்தி, விடயங்களை திசை திருப்பி தன்மீதான குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிக்க முயல்வதாக நான் கருதுகின்றேன்.

என்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நான் முற்றாக மறுக்கின்ற அதே வேளை, உள்ளூர் உண்மை நிலைமைகளை அறிந்துகொள்ளாமல் பொய்யான தகவல்களைக் கொண்டு ஒரு தேசிய ரீதியான ஆசிரியர் சங்கமானது அறிக்கைகளை விடுவதென்பது பொறுப்பற்ற செயலாகும்.

அத்தோடு பல முறை மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு மக்கள் பிரதிநிதியை அவமரியாதைக்குள்ளாக்கும் வண்ணம் தெருச்சண்டை பாணியில் ஒரு தேசிய ஆசிரியர் சங்கம் தகாத வார்த்தைப்பிரயோகங்களை பயன்படுத்தி அறிக்கை விடுவதென்பது ஒரு மோசமான முன்னுதாரணமுமாகும்.

ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை என்மீதும் எனது கட்சியின் மீதும் சுமத்தியுள்ளமைக்கு "இலங்கை ஆசிரியர் சங்கத்துக்கும்" எனது வன்மையான கண்டனங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் என்னையும் நான் தலைமை தாங்கும் கட்சியின் நற்பெயரையும் களங்கப்படுத்தியமைக்காக உரிய சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தீர்மானித்துள்ளேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டம்

(திருமலை மேலதிக நிருபர்)

ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிண்ணியாவில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கிண்ணியா பிரதேச செயலகம், கிண்ணியா நகர சபை ஆகியவற்றில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களே இவ்வாறு சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பள உயர்வு, ஓய்வூதிய வயதெல்லை 65 வயதை அனுமதிக்காமை, போட்டிப் பரீட்சை மூலம் பதவி உயர்வு வழங்கல் முதலான கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# ஒலுவிலில் பாராட்டு விழா



(தீகவாபி நிருபர்)

அரச வானொலி விருது விழாவில் விருதைப் பெற்றுக் கொண்ட இலங்கை வானொலி பிராந்திய சேவையான பிறை எப்.எம்.வானொலி அறிவிப்பாளர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அம்பாறை மாவட்ட தமிழ்ப் பட்டறை இலக்கியப் பேரவையின் தலைவர் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஹனீபா இஸ்மாயில் தலைமையில் ஒலுவில் கிறீன் விலா அரங்கில் இடம்பெற்றது. இதன்போது இலங்கை வானொலி பிறை எம்.எம்.சேவை நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பசீர் அப்துல் கையூம், பட்டயக் கணக்காளர் ஏ.எல்.அமீன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின்போது தேசிய வானொலி விருது பெற்ற பிறை எப்.எம். சேவை நிலையத்தில் சேவையாற்றும் அறிவிப்பாளர்களான எம்.ஏ.றமீஸ் மற்றும் ஜே.வஹாப்தீன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# மூதூரில் எரிவாயு அடுப்பு வெடிப்பு





(சேனையூர் நிருபர்)

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியபாலம் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் (07) மாலை வேளையில் சமையல் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது. இதன்போது அடுப்பு சேதமடைந்துள்ளபோதிலும் எவருக்கும் காயமேற்படவில்லை. அதேவேளை சிலிண்டரிலிருந்து எரிவாயு வெளியாகிக் கொண்டிருந்ததையும் காணமுடிந்தது.

இதனையடுத்து குறித்த வீட்டுக்கு மூதூர் பொலிஸார் வருகை தந்து நிலைமையை பார்வையிட்டனர்.

# கிழக்கு செய்திகள்

# அம்பாறை சுகாதாரப்பிரிவில் கொரோனா தொற்று தீவிரம்

## கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தௌபீக் எச்சரிக்கை

(காரைதீவு நிருபர்)

அம்பாறைப் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொவிட் தொற்று தீவிரமடைந்துள்ளது. எனவே மக்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்ற வேண்டும். கிழக்கு மாகாணத்தில் நாளுக்கு நாள் கொவிட் தொற்று அதிகரித்து வருகிறது என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

சமகாலத்தில் "ஒமிக்ரோன்" பற்றி அதிகமாக பேசப்படுகிறது. சர்வதேச நாடுகள் உட்பட எமது நாட்டிலும் ஒமிக்ரோன் தொற்று இனங்காணப்படுகிறது. இது வேகமாக பரவக்கூடிய போதிலும் இதனுடைய தாக்கம் தொடர்பில் சரியான கணிப்புகள் இதுவரை கூறப்படவில்லை.

மாதாந்தம் செய்யப்படும் அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கிணங்க செப்டெம்பரில் 31 வீதமாகவும் ஒக்டோபரில் 21 வீதமாகவும் குறைவடைந்திருந்த தொற்று நவம்பர் மாதத்தில் மீண்டும் 31வீதமாக அதிகரித்துள்ளது. இது டிசம்பர் மாதம் இறுதிக்குள் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

அதனடிப்படையில் கடந்த ஒக்டோபர் மாதத்தில் குறைவடைந்திருந்த நோயாளர்களின் எண்ணிக்கை நவம்பர் மாதத்தில் சிறிது அதிகரித்துள்ளது. அதாவது ஒக்டோபர் மாதத்தில் சராசரியாக கிழமைக்கு 600 தொடக்கம் 650 பேர் இனங்காணப்பட்டு வந்த நிலையில் நவம்பர் இறுதிப் பகுதியில் 1000 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் காலம் பண்டிகை காலம் என்பதனால் பொதுமக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். முகக் கவசத்தை சரியாக அணிந்து கொள்வதுடன் சமூக இடைவெளிகளையும் பேணி நடக்க வேண்டும். அத்தோடு அநாவசியமான பாதுகாப்பற்ற நெருக்கடியான ஒன்றுகூடல்களை தவிர்த்துக்கொள்வது அவசியமாகும் என்றார்.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்; கைதானவர்கள் விடுதலை



(வாழைச்சேனை நிருபர்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை அனுஷ்டித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 10 பேரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கும்புறுமூலை கடற்கரையில் கடந்த 2021 மே 18 இல் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 2 பெண்கள் உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டு பிணை மறுக்கப்பட்டு 7 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் இதுதொடர்பான வழக்கு விசாரணை வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே அவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். கைதானவர்கள் சார்பில் சட்டத்தரணிகளான க.சுகாஸ்,ஜெயசிங்கம்,ரம்சீன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

# அம்பாறையில் உரம், நாசினிகள் அதிக விலையில் விற்பனை

## விவசாயிகள் கவலை

(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் நெற்செய்கைக்கு பயன்படுத்தப்படும் உரவகைகள், களை, கிருமிநாசினிகள் உள்ளிட்ட இரசாயனப் பொருட்கள் அதிக விலையில் விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

நெற்செய்கைக்கு அவசியமான களை, கிருமி நாசினிகள், உர வகைகள் என்பன பட்டியல் விலையை விடவும் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இம்முறை யூரியா உரத் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து, உரவகைகள் மற்றும் ஊட்டச்சத்து உரவகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் விலையும் கணிசமானளவு அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.

விவசாய இரசாயனங்களை பட்டியல் விலையை விடவும் அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதாகவும் இதனால் நெற் செய்கைக்கான உற்பத்திச் செலவு கணிசமானளவு அதிகரித்துள்ளதாகவும் விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

விவசாய இரசாயனங்களின் உற்பத்தியாளர்கள் அல்லது உற்பத்தி நிறுவனங்கள் விலையை அதிகரிக்காத போதிலும் உள்ளூர் வர்த்தகர்கள், வியாபாரிகள் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, அதிகரித்த விலையில் விற்பனை செய்து வருவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் அவசர நடவடிக்கை மேற்கொண்டு கறுப்புச் சந்தை வியாபாரிகளிடமிருந்து விவசாயிகளைப் பாதுகாக்க முன்வரவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அரசின் சேதனப் பசளை திட்டத்தால் பெரும்போக நெற்செய்கை பாதிப்பு

## நட்டஈடு வழங்க வேண்டுமென்கிறார் முன்னாள் எம்.பி.அரியநேத்திரன்

(மண்டூர் நிருபர்)

அரசாங்கத்தின் சேதனப் பசளை திட்டத்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கை பாதிப்படைந்துள்ளது. அதாவது விளைச்சல் அறுபது வீதத்தால் குறையும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதற்கான நட்டத்தை அரசாங்கம் ஏற்று விவசாயிகளுக்கு நட்ட ஈடு வழங்க இப்போதே ஏற்பாடு செய்யவேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

சேதன உரப்பாவனை சம்பந்தமாக அவர் மேலும் கூறுகையில்,

நஞ்சற்ற நெல் உற்பத்தி உண்மையில் தேவையான ஒன்று. அதில் மாற்றுக்கருத்து கிடையாது. ஆனால் விவசாயிகளை படிப்படியாக இரசாயன உரப்பாவனையில் இருந்து சேதன உரப்பாவனைத் திட்டத்துக்கு மாற்ற வேண்டும்.

அப்படிச்செய்யாமல் திடீரென சேதன உரத்தைப் பாவிக்குமாறு கூறி இரசாயன உரத்தை தடைசெய்தமையால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

இந்நிலையில் சேதனப்பசளை தரமற்றதாக உள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

யூரியா உரம் பயன்படுத்திய நெற்செய்கை வளர்ச்சியடைந்தும் சேதன உரம் பயன்படுத்திய நெற்பயிர்கள் வளர்ச்சியின்றியும் காட்சியளிக்கிறது. சேதன உரம் பாவித்த வயல்களில் நெல்லைவிட களைகள் செழித்து வளர்ந்து காணப்படுகின்றன.

அரசாங்கத்தின் திட்டமில்லாத கொள்கையினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமல்ல முழுநாட்டிலும் இம்முறை பெரும்போக நெற்செய்கை வீழ்ச்சியடையும் நிலைமையே ஏற்பட்டுள்ளது. இந்த நட்டத்துக்கான இழப்பீடுகளை அரசாங்கம் விவசாயிகளுக்கு கட்டாயம் வழங்க வேண்டும்.

கடன்பட்டு நகைகளை அடகு வைத்தே மட்டக்களப்பில் பலர் நெற்செய்கையில் ஈடுபடுகின்றனர். அவர்கள் இவ்வருட பெரும்போக நெற்செய்கையால் அதிகம் பாதிக்கப்படுவது உறுதி எனவும் கூறினார்.

## புதிய... (தொடர்ச்சி)

எதிர்காலத்தில் புதிய பிறழ்வுகள் தோற்றம் பெறக் கூடிய வாய்ப்புகள் அதிகமுள்ளன. அவை அனைத்துக்கும் சுகாதார அமைச்சு தயாராகவுள்ளதாக விசேட வைத்திய நிபுணர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

தற்போது நாட்டில் நாளாந்தம் 700 முதல் 750 தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். எனினும் 350 முதல் 400 பேர் மாத்திரமே குணமடைகின்றனர். அது மாத்திரமன்றி 20 முதல் 25 மரணங்களும் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. தற்போது நாடளாவிய ரீதியில் 159 சிகிச்சை நிலையங்கள் காணப்படுகின்றன. அவற்றில் 17155 சிகிச்சை படுக்கைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள போதிலும் 7669 தொற்றாளர்கள் மாத்திரமே சிகிச்சை பெற்று வருகின்றனர். அதேபோன்று 77 பேர் அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். குறித்த 159 சிகிச்சை நிலையங்களிலும் 110 முதல் 120 ஒட்சிசன் தேவையுடைய தொற்றாளர்கள் உள்ளனர்.

இவ்வாறான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும் எதிர்காலத்தில் புதிய பிறழ்வுகள் தோற்றம் பெறக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. அவை அனைத்துக்கும் சுகாதார அமைச்சு தயாராகவுள்ளது. எனினும் எந்த பிறழ்வு தோற்றம் பெற்றாலும் அதிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான ஒரே வழிமுறை சுகாதார விதிமுறைகளை இறுக்கமாக பின்பற்றுவதாகும். பல சந்தர்ப்பங்களிலும் சுகாதார வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் மக்கள் அதனைப் பின்பற்றுவதில்லை. எனவே அபாயத்தை உணர்ந்து மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றார்.

## இந்திய.. (தொடர்ச்சி)

ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு, நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே காட்டேரி எனும் பகுதியில் இந்திய இராணுவ ஹெலிகொப்டர் நேற்று விபத்துக்குள்ளானதில் இந்திய முப்படைகளின் தளபதி பிபின் ராவத், அவரது மனைவி மதுலிகா ராவத் உள்ளிட்ட 13 பேர் பலியானதாக இந்திய விமானப் படை அறிவித்துள்ளது.

## ஆளும்.... (தொடர்ச்சி)

என சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணி அரசாங்கத்தில் சுதந்திரக் கட்சி பிரதான பங்காளிக் கட்சியாக உள்ளது. ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தலில் சுதந்திர கட்சி அரசியல் ரீதியில் மாற்று தீர்மானத்தை முன்னெடுத்திருந்தால் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெற்றிருக்காது.

அரசாங்கத்தின் நிர்வாகத்தின் மீது நாட்டு மக்கள் வெறுப்படைந்துள்ளார்கள்.அரசாங்கத்தின் தீர்மானங்கள் மக்களுக்கு சாதகமாக அமைவதில்லை. மாறாக பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.அரசாங்கத்தின் மீதான மக்களின் வெறுப்பு நாளுக்கு நாள் தீவிரமடைந்துள்ளதே தவிர குறைவடையவில்லை.

அரசாங்கத்தில் இருந்து சுதந்திரக் கட்சி வெளியேறுவது சிறந்தது என சுதந்திரக் கட்சியின் அடிமட்ட உறுப்பினர்களும் சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளார்கள்.முன்வைக்கப்பட்ட யோசனைகளை பரிசீலனை செய்ய மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது.

பொதுத்தேர்தல் காலத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியை முன்னிலைப்படுத்தி பல்வேறு கட்சிகளை ஒன்றிணைத்து கூட்டணி அமைக்கப்பட்டது.கூட்டணிக்கான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் இது வரையில் முறையாக செயற்படுத்தப்படவில்லை.

ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளை புறக்கணிக்கும் செயற்பாட்டை பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் முன்னெடுக்கிறார்கள்.

வெறுக்கத்தக்க பேச்சுக்கள் கூட்டணிக்குள் தோற்றம் பெற்றுள்ள பல பிரச்சினைகளுக்கு மூல காரணியாக உள்ளது. சுதந்திரக் கட்சிக்கு எதிரான சேறுபூசல்கள் தற்போது தீவிரமடைந்துள்ளன.அரச தலைவர்களின் ஆதரவுடன் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. கூட்டணியின் எதிர்காலம் குறித்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதியுடனும் பிரதமருடனும் தனித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட தீர்மானித்துள்ளது என்றார்.

## எரிவாயு... (தொடர்ச்சி)

மதிப்பீடு செய்யப்படுவதாகவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற கைத்தொழில், வர்த்தக அமைச்சு மற்றும் நான்கு இராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் வேளையில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

எரிவாயு சிலிண்டர்களை தொடர்ந்தும் வெடிக்கவைக்க வேண்டும் என்ற நோக்கம் எனக்கு இல்லை. இந்த நெருக்கடி நிலைமைகளை தவிர்த்து, பிரச்சினைகளுக்கு தீர்வு காணவே நாம் விரும்புகின்றோம். அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். இந்த விடயத்தில் சகல தரப்பின் ஆலோசனைகளையும் ஒத்துழைப்புகளையும் பெற்றுக்கொள்ள தயாராக உள்ளோம்.

எனினும் இந்த வெடிப்புச் சம்பவங்களுக்கு காரணம் என்ன என்பதை கண்டறியும் இறுதி ஆய்வொன்று முன்னெடுக்கப்படவில்லை. எரிவாயு கலப்பில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இந்த வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன என்ற பொதுவான நிலைப்பாட்டில் நாமும் உள்ளோம். ஆனால இப்போதைய கலவையை தர நிர்ணய ஆணைக்குழுவும் ஏற்றுக்கொண்டுள்ளது.

பொதுமக்களை பாதுகாக்க, நுகர்வோரை பாதுகாக்க இதனையே மேலான பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அதேபோல் சிலிண்டர் நிறுவனங்களின் தரம் குறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. நுகர்வோர் அதிகார சபை, தர நிர்ணய குழுவின் ஆய்வுக்கு உட்படுத்தாத எந்த எரிவாயுவையும் நாட்டுக்குள் இறக்குமதி செய்ய முடியாது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எரிவாயு கசிவு ஏற்பட்டால் நாற்றம் வீசும் இரசாயனம் கலக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் புதிதாக இறக்குமதி செய்யப்படும் எரிவாயு சிலிண்டர்களுக்கு புதிய அடையாளமிடப்பட்டுள்ளது. கலவையின் அளவு குறித்தும் கணித்தே சந்தைக்கு வழங்கப்படும்.

தற்போது நாளுக்கு அதிகமான வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இது குறித்து ஆய்வுகள் முன்னெடுக்கப்படுவதுடன் நட்டஈடு வழங்கும் நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகின்றது. அரசாங்கம் இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நட்டஈடு பெற்றுக்கொடுக்கப்படும். அதேபோல் இந்த வெடிப்புச் சம்பவங்கள் இன்றும் இடம்பெற்றுக்கொண்டுள்ளன. பொதுமக்களை பாதுகாக்க முடியாத நிலையிலேயே நாம் உள்ளோம். இதற்கு முடிவு காணமுடியாத நிலையிலேயே நாம் உள்ளோம். ஆகவே நுகர்வோரை நாம் பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுக்கவே முயற்சிக்கின்றோம். அதபோல் எரிவாயு நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றார்.

## காணாமல்... (தொடர்ச்சி)

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தினால் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை தொடர்ந்து 12 ஆவது ஆண்டாகவும் வடக்கு, கிழக்கிலுள்ள 8 மாவட்டங்களில் கவனயீர்ப்புப்போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

2009 ஆம் ஆண்டில் முடிவுக்குக்கொண்டுவரப்பட்ட இறுதிக்கட்டப்போரின்போது படையினரிடம் சரணடைந்தவர்கள் மற்றும் படையினரிடம் கையளிக்கப்பட்டவர்கள் எங்கே? அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மைகளை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்றும் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்கான நீதியைப் பெற்றுத்தரவேண்டும் என்றும் வலியுறுத்தி வடக்கு கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ந்து 12 வருடகாலமாகப் போராடிவருகின்றார்கள். அதுமாத்திரமன்றி கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச மனித உரிமைகள் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் டிசம்பர் 10 ஆம் திகதியன்று ஒவ்வொரு வருடமும் அவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கவனயீர்ப்புப்போராட்டங்களை நடத்திவருகின்றார்கள்.

அந்தவகையில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இம்முறை வடக்கு கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அனைவரும் ஓரிடத்தில் இணைந்து கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தமுடியாது என்பதால், வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய 5 மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்திலுள்ள திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய 3 மாவட்டங்களிலும் தனித்தனியாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதுகுறித்து வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவினர்களின் சங்கத்தின் தலைவி கனகரஞ்சனி யோகதாஸாவிடம் வினவியபோது,

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கடந்த காலங்களைப்போன்று இம்முறையும் கவனயீர்ப்புப் போராட்டங்களை நடத்தவுள்ளோம். ஆனால் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக அவற்றை நடத்துவதற்குத் தடையுத்தரவு பிறப்பிக்கப்படக் கூடும். அதனால் தனித்தனியாக 8 மாவட்டங்களிலும் போராட்டங்கள் நடத்தப்படவுள்ள இடங்களை இரகசியமாக வைத்திருப்பதற்குத் தீர்மானித்திருக்கின்றோம். நாம் தனி நாட்டையோ தனி ஈழத்தையோ கோரவில்லை. மாறாக எமது சொந்தங்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை வெளிப்படுத்துமாறு மாத்திரமே கோருகின்றோம். ஆகவேினால் எத்தகைய இடையூறுகள் மற்றும் அச்சுறுத்தல்கள் ஏற்படுத்தப்பட்டாலும் நீதிக்கான எமது போராட்டம் தொடரும் என்று தெரிவித்தார்.

அதேவேளை இதுபற்றிக் கருத்து வெளியிட்ட வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவினர்களின் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி குறிப்பிடுகையில்,

நாளைய தினம் (வெள்ளிக்கிழமை) வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள 8 மாவட்டங்களிலும் தனித்தனியாகக் கவனயீர்ப்புப் போராட்டங்கள் மேற்கொள்ளப்படுவதுடன் பெரும்பாலும் யாழ்ப்பாணத்திலுள்ள ஐ.நா. அலுவலகத்திடம் மகஜரொன்றும் கையளிக்கப்படும். எமது கேள்விகளுக்கான பதில்களையோ எமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளையோ பெற்றுத்தருவதில் கடந்த காலத்திலிருந்து தற்போதுவரை எந்தவொரு அரசாங்கங்களும் அக்கறை காண்பிக்கவில்லை. ஐக்கிய நாடுகள் சபை அதனை நன்கறிந்திருக்கின்ற போதிலும் இலங்கைக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. ஆனால் இலங்கைமீது பொருளாதாரத்தடை விதித்தல் உள்ளடங்கலாக வலுவான அழுத்தத்தைப் பிரயோகிக்கும் வகையிலான நடவடிக்கைகளை எடுப்பதற்கான அதிகாரம் ஐக்கிய நாடுகள் சபைக்கு உள்ளது. அவ்வாறிருந்தும்கூட ஐ.நா.வின் இந்தத் தொடர்ச்சியான மௌனம் எமக்குக் கவலையளிக்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

மேலும் முல்லைத்தீவு, மாங்குளம் வீதியில் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தப்பட்டுவரும் இடத்திலேயே நாளைய தினம் கவனயீர்ப்புப்போராட்டத்தை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவித்த வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மதியசுரேஷ் ஈஸ்வரி, அண்மைக்காலங்களில் தமது நடவடிக்கைகளையும் தாம் சென்று வரும் இடங்களையும் பாதுகாப்புத்தரப்பினர் தொடர்ச்சியாகக் கண்காணித்து வருவதாகவும் சுட்டிக்காட்டினார். இருப்பினும் எத்தகைய அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தமது போராட்டம் தடைப்படாது என்றும் அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## 220 இலட்சம்.... (தொடர்ச்சி)

எமக்கு இருக்கும் ஒரே தீர்வு சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது மட்டுமே யாகும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சபையில் தெரிவித்தார்.

அவசர சிகிச்சை பிரிவுக்கு ஒப்படைக்க வேண்டிய குழந்தைபோல் இன்று எமது மக்களும் நெருக்கடியில் உள்ளனர். சர்வதேச நாணய நிதியத்தை நிராகரித்தால் 220 இலட்சம் மக்களுக்கும் பட்டினியும் பஞ்சமுமே ஏற்படும் எனவும் எச்சரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற கைத்தொழில் அமைச்சு மற்றும் பிரம்புகள்,பித்தளை மட்பாண்டங்கள் ,மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவற்றை கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

மத்திய வங்கியின் கையிருப்பில் உள்ள வெளிநாட்டு கையிருப்பு தொகையை மத்திய வங்கி நேற்று நள்ளிரவு 12 மணிக்கு வெளியிட்டுள்ளது. கடந்த நவம்பர் மாதம் கையிருப்பானது 1587 மில்லியன் டொலர்கள் எனவும் முன்னைய மாதத்தை விடவும் 30 வீதத்தினால் குறைவடைந்துள்ளது எனவும் கையிருப்பில் உள்ள திரவ நாணயம் 1009 மில்லியன் எனவும் இது நாற்பது வீத குறைவு எனவும் மத்திய வங்கி கூறியுள்ளது. அப்படியென்றால் கையிருப்பில் உள்ள திரவ நாணயமாக ஒரு பில்லியன் டொலர்கள் மட்டுமே உள்ளது.

இந்நிலையில் தேசிய வங்கிகளிடம் இருந்து மத்திய வங்கி பெற்றுக்கொண்ட குறுகியகால கடன்களாக டிசம்பர் மற்றும் ஜனவரி மாதத்துக்கு மாத்திரம் 114 மில்லியன் டொலர்களை செலுத்த வேண்டியுள்ளது. ஏனைய கடன்களாக 1137 மில்லியன் டொலர்களும் அதற்கு வட்டியாக 194.7 மில்லியன் டொலர்களையும் செலுத்த வேண்டியுள்ளது. எனவே கையிருப்பில் உள்ள நிதியில் இவற்றை செலுத்தினால் ஜனவரி மாதத்தில் வெறுமனே 140 மில்லியன் டொலர்கள் மட்டுமே மிஞ்சும். அடுத்த ஆண்டு ஆரம்பிக்கும் வேளையில் எம்மிடம் பணம் இருக்காது. இவ்வாறு ஒருபோதும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டதில்லை. அடுத்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் மொத்தமாக 4843 மில்லியன் அமெரிக்க டொலர்களை மொத்த கடனாக செலுத்த வேண்டியுள்ள நிலையில் இப்போது எமது கையிருப்பில் வெறும் 140 மில்லியன் டொலர்களே உள்ளன.

இது மிகப்பெரிய நெருக்கடியை நாட்டில் ஏற்படுத்தப்போகின்றது. ஆகவே அரசாங்கமும் நிதி அமைச்சரும் பொறுப்புடன் செயற்படாது போனால் 220 இலட்சம் மக்களுக்கும் உணவு இல்லாது, மருந்துகள் இல்லாது, எரிபொருள் இல்லாது பாதிக்கப்படும் நிலைமை ஏற்படும். எனவே அரசாங்கம் சர்வதேச முதலீடுகளையும் நிதி உதவிகளையும் நாட்டுக்குள் கொண்டுவருவதாக கூறியும் ஒரு ரூபாவேனும் நாட்டுக்குள் வரவில்லை. அரசாங்கத்தின் 'ரோட் மப்' திட்டங்கள் பல காரணிகளைக் கூறினாலும் அது எதுவுமே வெற்றியளிக்கவில்லை. இப்போது நாட்டுக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்ய முடியாதுள்ளது. ஏனென்றால் கையிருப்பில் உள்ள பணத்தில் கடன்களை மட்டுமே செலுத்த முடியுமாக உள்ளது.

அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்க வேண்டிய ஒரு குழந்தையை அங்கு வைத்தியர்களிடம் ஒப்படைக்காது வீட்டில் கஷாயம் கொடுத்து குணப்படுத்துவேன் எனக் கூறுவது முட்டாள்தனமாகும். அவசர சிகிச்சை பிரிவுக்கு ஒப்படைக்க வேண்டிய குழந்தை போன்றதே இன்று எமது மக்களும் நெருக்கடியில் உள்ளனர். அவர்களை பாதுகாக்க சர்வதேச நாணய நிதியத்துக்கு சென்றே ஆகவேண்டும்.

இல்லையேல் மக்களுக்கு ஏதேனும் ஒன்று நடந்தால் யார் பொறுப்புக்கூறுவது. நாம் பெற்றுக்கொண்ட கடன்களை செலுத்த முடியாது போனால்நாடுமுழுமையாக வீழ்ச்சி காணும். கூகுள் வரைபடம் கூட நிறுத்தப்படும். இதுவே சாதாரண உதாரணமாகும். ஆகவே இதனை விளங்கிக்கொள்ளுங்கள். எமக்கு இருக்கும் ஒரே தீர்வானது சர்வதேச நாணய நிதியமாகும். அதனை தவறவிட்டுவிட வேண்டாம் என்றார்.

## உடன்படிக்கை... (தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்கவும் ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கவும் சபையில் வலியுறுத்தினர்.

நிதி அமைச்சர் பசில் ராஜபக் ஷ நினைத்த அனைத்தையும் முன்னெடுக்கவோ மக்களுக்கு தெரியாது மறைமுகமாக தீர்மானம் எடுக்கவோ மக்களுக்கு தகவல்களை மறைக்கவோ அதிகாரம் இல்லை எனவும் தெரிவித்தனர்.

பாராளுமன்றம் நேற்று புதன்கிழமை சபாநாயகர் தலைமையில் கூடிய வேளையில் சபையில் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க கெரவலப்பிட்டி இயற்கை எரிவாயு உற்பத்தி உடன்படிக்கை குறித்து சபையில் கேள்வி எழுப்பினார்.

இது குறித்து அவர் கூறுகையில்,

நியூ போட்ரஸ் நிறுவனம் மற்றும் திறைசேரி செயலாளருக்கு இடையிலான இணக்கப்பாட்டு ஒப்பந்தம் குறித்தும் அதனை பாராளுமன்றத்துக்கு ஒப்படைக்க வேண்டும் எனவும் சபையில் வலியுறுத்தியிருந்தேன். உடன்படிக்கையை சபைப் படுத்துவதாகவும் அரசாங்கம் வாக்குறுதியளித்தது. இந்த உடன்படிக்கையில் ஒரு சரத்து உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் இரண்டு ஆண்டுகளுக்கு இந்த உடன்படிக்கை பொதுமக்கள் பார்வைக்கு விடுவதில்லை எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஊடகங்களில் அறிந்துகொள்ள முடிந்துள்ளது. இது உண்மையா என தெரிந்துகொள்ள வேண்டும். நிதி அமைச்சருக்கு விடயப்பரப்பு குறித்து அதிகாரங்கள் இருப்பது உண்மையாகும். ஆனால் அவர் மக்கள் ஆணையின் ஒரு பகுதியையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றார். ஆகவே அவர் நினைத்த அனைத்தையும் முன்னெடுக்கவோ மக்களுக்கு தெரியாது மறைமுகமாக தீர்மானம் எடுக்கவோ மக்களுக்கு தகவல்களை மறைக்கவோ அதிகாரம் இல்லை.

நாடுகளுக்கு இடையில் நாட்டின் வலு சக்தி குறித்து ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வரும் வேளையில் அதனை பாராளுமன்றம் அறிந்துகொள்ள வேண்டும். கடந்த வாரம் அமைச்சரவையிலும் இதனை முன்வைக்கவிருந்ததாக அறிந்துகொண்டோம். அமைச்சரவைப் பத்திரமும் என்னிடம் உள்ளது. ஆனால் இந்த விடயம் அமைச்சரவையிலும் சமர்ப்பிக்கப்படவில்லை. நீண்ட இழுத்தடிப்புகளும் ஏற்பட்டதாக தெரிய வருகின்றது. எனவே நாட்டின் வலு சக்தி மற்றும் எரிவாயு உற்பத்தி குறித்து தனி நபர்கள் மட்டுமே தீர்மானம் எடுக்க முடியாது. இது பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும். இதில் சபாநாயகர் தலையிட்டு உடன்படிக்கையை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய ரணில் விக்கிரமசிங்க எம்.பி. :

நானும் இந்த காரணிகளை சிறப்புரிமை பிரச்சினையாக எழுப்பியுள்ளேன். சுமந்திரன் எம்.பி. வந்த பின்னர் இது குறித்து எம்மால் சபையில் விவாதிக்க முடியும். ஆனால் பிரச்சினை என்னவென்றால் இந்த உடன்படிக்கையை ஏன் சபைப்படுத்த முடியாதுள்ளது? நிதி அமைச்சின் செயலாளர் மூலமாக வலுசக்தி அமைச்சருக்கு வழங்கினால் அவர் சபைப்படுத்த முடியும். இன்று அறிவுறுத்தல் விடுத்தால் நாளைய தினமே எமக்கு கிடைக்கும்படி நடவடிக்கை எடுக்க முடியும். நிதி அமைச்சருக்கு இது குறித்து கூறுவதில் அர்த்தம் இல்லை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் உரிய நபர்கள் நடவடிக்கை எடுத்தால் போதுமானது என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய சபை முதல்வர் தினேஷ் குணவர்த்தன:எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கோரிக்கையை நாம் அமைச்சருக்கு மீண்டும் அறிவிக்கின்றோம். அதேபோல் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்காலத்தில் இவ்வாறான எந்த வித சம்பிரதாயமும் பின்பற்றப்படவில்லை. ஆனால் இன்று எதிர்க்கட்சிக்கு சென்றவுடன் புதிய நடைமுறைகளை பின்பற்றுவது நல்ல விடயமே. இவர்களின் ஆட்சியில் அம்பாந்தோட்டை டீல் என்னவென்பதை கூறவே இல்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என்றார்.

இதற்கு பதில் தெரிவித்த ரணில் எம்.பி.: எமது ஆட்சியில் நீங்கள் எதனைக் கேட்டு நாம் எதனைக் கொடுக்கவில்லை என்பதை சபையில் முன்வையுங்கள். அதற்கு நாம் பதில் தெரிவிக்கின்றோம். ஆனால் இது வேறு ஒரு பிரச்சினை. உடன்படிக்கை என்ன என்பதை சபைப்படுத்துங்கள். அதனையே நாம் கேட்கின்றோம் என்றார்.

## சமையல்... (தொடர்ச்சி)

வணிக எரிவாயு சிலிண்டர்களையும் உடனடியாக மீளப் பெறுமாறு நுகர்வோர் அதிகார சபை லிட்ரோ நிறுவனத்துக்கு அறிவுறுத்தியுள்ளது.

அதற்கமைய கடந்த 4ஆம் திகதிக்கு முன்னர் சந்தைக்கு விநியோகித்த முத்திரை அகற்றப்படாத எரிவாயு சிலிண்டர்கள் இவ்வாறு மீளப் பெற்றுக் கொள்ளப்படும் என லிட்ரோ நிறுவனத்தின் விநியோகம் மற்றும் வர்த்தக பிரிவின் பணிப்பாளர் ஜனக பதிரன தெரிவித்தார்.

சமையல் எரிவாயு சிலிண்டரின் தரம் ,பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையில் லிட்ரோ நிறுவனம் தற்போது சிவப்பு நிற முத்திரையுடன் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்கிறது. கடந்த 4ஆம் திகதிக்கு முன்னர் விநியோகிக்கப்பட்ட சிலிண்டர்களுள் நீல நிற முத்திரை காணப்பட்டது.

சமையல் எரிவாயு கசிவுடனான வெடிப்புச் சம்பவங்களினால் ஏற்பட்ட சர்ச்சையை தொடர்ந்து நுகர்வோர் அதிகார சபை கடந்த வெள்ளிக்கிழமை இரண்டு பிரதான சமையல் எரிவாயு உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்திகளை சந்தைக்கு விநியோகிப்பதை மறு அறிவித்தல் விடுக்கும் வகையில் தடைசெய்தது.

எரிவாயு கசிவுடனான வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் ஆராயும் குழுவினரது அறிவுறுத்தல்களுக்கமைய கைத்தொழிற்சாலைகள் மற்றும் தகனசாலைகள் ஆகியவற்றின் பயன்பாட்டுக்கு மாத்திரம் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க நிறுவனத்துக்கு நுகர்வோர் அதிகார சபை கடந்த வாரம் அனுமதி வழங்கியது.

நுகர்வோர் அதிகார சபை மூன்று பிரதான நிபந்தனைகளுக்கு அமைய எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்க கடந்த 4ஆம் திகதி அனுமதி வழங்கியது.

எரிவாயு கசிவு உணர்திறனை தூண்டும் எதில் மர்கெப்டன் இரசாயன பதார்த்தம் தேசிய தரநிர்ணயப்படுத்தலின் அளவுக்கேற்ப எரிவாயு சிலிண்டர்களில் சேர்த்தல், உற்பத்தி செய்யப்படும் 100 எரிவாயு சிலிண்டர்களுள் ஒரு சிலிண்டர் முழுமையான பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு அதன் தொடர் இலக்கம் நுகர்வோர் அதிகார சபைக்கு அனுப்பி வைத்தல்,எரிவாயு கசிவுடனான வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் ஆராயும் குழுவினர் எந்நேரத்திலும் நிறுவனங்களின் உற்பத்திகளை குறித்து ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க வசதிகளை பெற்றுக் கொடுத்தல் ஆகியவை அம்மூன்று பிரதான நிபந்தனைகளாகும்.

நுகர்வோர் அதிகார சபையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய கடந்த 4ஆம் திகதிக்கு பின்னர் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றன.எரிவாயு கசிவு வெடிப்புச் சம்பவங்களினால் கடந்த ஒரு மாத காலமாக நுகர்வோர் எரிவாயு சிலிண்டர்களை கொள்வனவு செய்வதை மட்டுப்படுத்தியுள்ளனர்.அதற்கமைய கடந்த 4ஆம் திகதிக்கு முன்னர் விநியோகித்த எரிவாயு சிலிண்டர்களை மீளப் பெற்றுக் கொள்ள உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என லிட்ரோ நிறுவனத்தின் விநியோகம் மற்றும் வர்த்தக பிரிவின் பணிப்பாளர் ஜனக பதிரன குறிப்பிட்டார்.

## துறைமுகம்... (தொடர்ச்சி)

தொழிற்சங்கத்தினர் ஒன்றிணைந்து நேற்றைய தினம் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் முன்பாக எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பெற்றோலியம்,மின்சாரம்,துறைமுகம் ஆகியவற்றின் தொழிற்சங்கத்தினர் நேற்று பகல் இலங்கை மின்சார சபை முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டு கொழும்பு கோட்டை புகையிரதநிலையம்வரைபேரணியாக சென்றனர். பேரணி காரணமாக கோட்டை தனியார் பேருந்து நிலையம் தொடக்கம் கோட்டை புகையிரத நிலையம் வரை கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டது.

ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தினர் கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து ஜனாதிபதி செயலகம் வரை பேரணியாக சென்று ஜனாதிபதி செயலகத்தில் மகஜர் ஒன்றை கையளித்தார்கள்.

இதன்போது இலங்கை துறைமுக சேவைகள் சங்கத்தின் தலைவர் நிரோஷன் கொரகாஹேன்ன குறிப்பிடுகையில் ,

தேசிய வளங்களை பிற நாட்டவருக்கு வழங்கப்போவதில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி பொய்யாக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் கொவிட் தாக்கத்துக்கு மத்தியில் இரகசியமான முறையில் பல தேசிய வளங்களை தனியார்மயப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான 13 ஏக்கர் காணியை சீன நிறுவனத்துக்கு வழங்கும் தீர்மானத்துக்கு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளோம். கொழும்பு துறைமுகத்தின் தெற்கு முனையத்தை நிர்வகிக்கும் சீன நிறுவனத்துக்கு 13 ஹெக்டயர் காணியை குறைந்த வாடகைக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

இதுவரையில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் அனைத்தும் தேசிய வளங்களை ஏதாவதொரு வழியில் பிற நாட்டவர்களுக்கு தாரைவார்த்துள்ளது. தேசிய வளங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நாட்டு மக்களுக்கு உள்ளது.அதன் காரணமாகவே துறைமுகம்,பெற்றோலியம் மற்றும் மின்சார சபை ஆகிய நிறுவனங்களின் தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்து போராடுகிறோம்.

யுகதனவி மின்நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும்தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு தரப்பினர் உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்கள்.அமெரிக்க நிறுவனத்துடனான இந்த ஒப்பந்தம் முழுமையாக செயற்படுத்தப்பட்டால் நாட்டின் மின்வலுத்துறை விநியோகத்தின் சுயாதீனத்தன்மை கேள்விக்குள்ளாக்கப்படும்.

இயற்கை எரிவாயு விநியோகம் தேசிய மட்டத்திலான நிறுவனங்களின் ஊடாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்துகிறோம். கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தம் நீக்கிக் கொள்ளப்படவேண்டும்.

யுகதனவி மின்நிலைய ஒப்பந்தம் தொடர்பில் நீதிமன்றம் சிறந்த தீர்மானத்தை அறிவிக்கும் என எதிர்பார்க்கிறோம். அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கும் வகையில் தொழிற்சங்கப் போராட்டங்களில் ஈடுபட்டோம். அரசாங்கம் தொடர்ந்து முறையற்ற வகையில் செயற்பட்டால் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட நேரிடும் என்றார்.

# 28 கொவிட் மரணங்கள் பதிவு

(எம்.மனோசித்ரா)

நாட்டில் நேற்று புதன்கிழமை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட 28 மரணங்களுடன் மொத்த கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 14533 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்று மாலை வரை 572 கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அதற்கமைய இது வரையில் கொவிட் தொற்றுறுதி செய்யப்பட்டோர் எண்ணிக்கை 569743 ஆக உயர்வடைந்துள்ளது.

இவ்வாறு இனங்காணப்பட்ட தொற்றாளர்களில் 543467 பேர் குணமடைந்துள்ளனர். 11743 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

**சமையல் எரிவாயு விவகாரம்: அமைச்சர் பந்துல,லசந்த உள்ளிட்டவர்களுக்கு எதிராக**

# குற்றவியல் விசாரணை கோரி எழுத்தாணை மனு

(எம்.எப்.எம்.பஸீர்)

அமைச்சர்பந்துல குணவர்த்தன, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண,நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் மற்றும் இலங்கை தரநிலை நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு எதிராக குற்றவியல் விசாரணைகளை ஆரம்பிக்க பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடக் கோரி எழுத்தாணை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பற்ற சமையல் எரிவாயு சிலிண்டர்களை இறக்குமதி செய்து, அவற்றை விநியோகித்தமையை மையப்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று இந்த எழுத்தாணை மனு (ரிட்) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# உஷ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் தொடர்பிலான விசாரணை அறிக்கை சட்ட மா அதிபரிடம்

## நிலைப்பாட்டை தெரிவிக்க உயர் நீதிமன்றிடம் கால அவகாசம் பெற்றார் அரச சட்டவாதி

(எம்.எப்.எம்.பஸீர்)

இலங்கையில் வஹாப் வாதம், சலபி கொள்கை மற்றும் ஜிஹாத் சிந்தனையை விதைத்தமை தொடர்பில் கைது செய்யப்பட்டதாக பொலிஸாரால் அறிவிக்கப்பட்ட இலங்கை ஜமா அத்தே இஸ்லாம் அமைப்பின் முன்னாள் தலைவரான உஷ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் என பரவலாக அறியப்படும் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பரின் அடிப்படை உரிமை மீறல் மனு எதிர்வரும் 17 ஆம் திகதி மீள பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

கைது மற்றும் தடுத்து வைப்புக்கு எதிராக சட்டத்தரணி சுமையா ஜிப்ரி ஊடாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு மீதான பரிசீலனைகள், நேற்று (8) நீதியரசர் விஜித் மலல்கொட தலைமையிலான நீதியரசர் யசந்த கோதாகொட மற்றும் நீதியரசர் மஹிந்த சமயவர்தன ஆகியோர் முன்னிலையில் பரிசீலனைக்கு வந்தது.

இதன்போதே சட்ட மா அதிபர் தரப்பின் நிலைப்பாட்டை முன் வைப்பதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டு இவ்வாறு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கு முன்னர் இந்த அடிப்படை உரிமை மீறல் மனு பரிசீலனைக்கு வந்திருந்த சந்தர்ப்பங்களில், சி.ரி.ஐ.டி. எனும் பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் விசாரணை அறிக்கை சட்ட மா அதிபருக்கு கிடைக்கவில்லை எனும் காரணத்தின் அடிப்படையில் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

எனினும் நேற்றைய தினம் (8)இம்மனு பரிசீலனைக்கு வந்த போது, மனுதாரர் உஷ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் சார்பில் சட்டத்தரணி சுமையா ஜிப்ரியின் ஆலோசனைக்கு அமைய சட்டத்தரணிகளான பாரிஸ் சாலி, எம்.சி.எம். முனீர், மொஹம்மட் ரிஸ்வான், சனேஸ் திஸாநாயக்க ஆகியோருடன் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். சுஹைர் ஆஜரானார்.

பிரதிவாதிகள் சார்பில் மன்றில் ஆஜராகும் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நரின் புள்ளே, நேற்று மன்றில் ஆஜராகாத நிலையில், அரச சட்டவாதி சஜின் பண்டார மன்றில் பிரசன்னமானார்.

மன்றில் ஆஜரான அரச சட்டவாதி சஜின் பண்டார, இந்த விவகாரத்தில் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் விசாரணைக் கோவை சட்ட மா அதிபருக்கு கிடைத்துள்ளதாகவும் அதனை ஆராய்ந்து வரும் நிலையில், சட்ட மா அதிபரின் நிலைப்பாட்டை அறிவிக்க திகதியொன்றினை அளிக்குமாறும் கோரினார். அதன்படியே மனு மீதான பரிசீலனைகள் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

கடந்த 2019 ஆகஸ்ட் 25ஆம் திகதி சி.சி.சி. எனும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு அவரை கைது செய்திருந்தது. அது 21/4 அன்று கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலும் மட்டக்களப்பிலும் இடம்பெற்ற தொடர் தற்கொலை தாக்குதல்களுக்கு உதவி ஒத்தாசை புரிந்தமை, அடிப்படைவாத குழுக்களுக்கு இலங்கைக்குள் மீள பயங்கரவாதத்தை உருவாக்க அதனை கட்டியெழுப்ப உதவியமை மற்றும் இனங்களுக்கு இடையே முரண்பாடுகளை தோற்றுவிக்க நடவடிக்கை எடுத்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் உஷ்தாத் ஹஜ்ஜுல் அக்பரை முதல் தடவையாக கைது செய்திருந்தனர்.

முதல் தடவை கைது செய்யப்பட்டு சி.சி.டி.யினர் உஷ்தாத் ஹஜ்ஜுல் அக்பரை விசாரித்த போது, அவ்விசாரணைகளில் திருப்தி இல்லாமல், அவர் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார். அங்கும் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்ட பின்னரேயே, ரி.ஐ.டி.யினரின் கோரிக்கைக்கு அமையவே அவர் தடுப்புக் காவலிலிருந்து நீதிமன்றில் ஆஜர்படுத்தி விடுவிக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்தே, கடந்த 2021 மே 12 ஆம் திகதி அவர் மீளவும் பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். அது முதல் அவர் இன்று வரை தொடர்ந்து தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலைமையை மனுவூடாக சுட்டிக்காட்டி, தனது கைது மற்றும் தடுப்புக் காவலை சவாலுக்குட்படுத்தியுள்ள மனுதாரர் உஷ்தாத் ஹஜ்ஜுல் அக்பர், தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அறிவிக்குமாறு இந்த மனுவூடாக உயர் நீதிமன்றிடம் கோரியுள்ளார். இடைக்கால நிவாரணமாக தடுப்புக் காவலில் உள்ள தன்னை பிணையில் விடுவிக்கும் உத்தரவொன்றினை பிறப்பிக்குமாறு அவர் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரயில்...

(தொடர்ச்சி)

மற்றும் அவர்களின் மகன் ஆகியோர் உயிரிழந்துள்ளனர். திம்புளை – பத்தனை போகாவத்தை பகுதியில் புதிய வீடமைப்பு திட்டத்தில் வசித்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். எஸ்.பிரான்சிஸ் (70) (தந்தை), பி.கமலாவதி (65) (தாய்), பிரான்சிஸ் குமார்ராஜ் (40) (மகன்) ஆகியோரே இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

ரொசெல்ல மற்றும் வட்டவளை ரயில் நிலையங்களுக்கு இடையில் 103 மைல் கல் பகுதியில் நேற்று முற்பகல் 11.45 அளவில் மூவரும் ரயிலில் மோதுண்டுள்ளனர். குறித்த மூவரும் ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்களா? அல்லது ரயிலில் அடிபட்டு உயிரிழந்தனரா? என்பது தொடர்பில் வட்டவளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

உயிரிழந்த மூவரின் சடலங்களும் அதே ரயிலில் நாவலப்பிட்டி புகையிரத நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நாவலப்பிட்டி பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உயிரிழந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் கடந்த 10 நாட்களுக்கு முன் தமது வீட்டை மூடிவிட்டு வீட்டிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இதேவேளை அவர்கள் மூவரும் நேற்று புகையிரத விபத்தில் உயிரிழந்துள்ளதாக தமக்கு தகவல் கிடைத்ததாக அவர்கள் வாடகைக்கு வசித்த வீட்டுக்கு அருகில் வசிக்கும் ஒருவர் தெரிவித்தார். உயிரிழந்தவர்களில் மகன் மசாலா தூள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவர் எனவும், அவர் நான்கு முறை திருமணம் செய்து கொண்டவர் எனவும் பிரதேசவாசிகள் தெரிவித்தனர். மகனை தேடி அவரை திருமணம் முடித்த பெண்கள் என கூறி ஏற்கனவே பல பெண்கள் வீட்டுக்கு வந்துள்ளதாகவும் பிரதேசவாசிகள் கூறினர்.

கடனாளிகளிடமிருந்து தப்பிக்க மகன், தந்தை மற்றும் தாயுடன் ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்றும் உயிரிழந்த மகனுக்கு எதிராக பிரதேச மக்கள் பண மோசடி தொடர்பில் திம்புளை பத்தனை பொலிஸில் பல முறைப்பாடுகளையும் செய்துள்ளதாகவும் . கடன் கொடுத்தவர்களில் பலர் குறித்த நபரை தேடி பல முறை அவர் வசித்த வீட்டுக்கு வந்துள்ளதாகவும் போகாவத்தை மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க உயிரிழந்தோரின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் இவ்விபத்து எவ்வாறு இடம்பெற்றது என்பது தொடர்பான விசாரணைகளை வட்டவளை பொலிஸார் முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ குறிப்பிட்டுள்ளார்.

## சபையில்...

(தொடர்ச்சி)

தேவையான பரிந்துரைகளை சமர்ப்பிக்கவும் பிரதி சபாநாயகர் தலைமையில் 11பேர் கொண்ட குழு சபாநாயகரால் நியமிக்கப்பட்டது. பாராளுமன்றம் நேற்று கூடியபோது பிரதான நடவடிக்கையாக சபாநாயகரின் அறிவிப்பின்போதே சபாநாயகர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் கடந்த 3,4 ஆம் திகதிகளில் சபைக்கு உள்ளேயும் வெளியேயும் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக தேடிப்பார்க்கவும் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் செயற்பட தேவையான பரிந்துரைகளை செய்வதற்கும் பிரதி சபாநாயர் ரஞ்ஜித் சியம்பலாப்பிடிய தலைமையில் குழுவொன்றை பெயரிட்டிருக்கின்றேன்.

அதில் ஏனைய உறுப்பினர்களாக, அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, பந்துல குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, ராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, கயந்த கருணாரத்ன, ரவூப் ஹக்கீம், அனுர பிரியதர்ஷன யாப்பா, விஜித்த ஹேரத், ரன்ஜித் மத்துமபண்டார, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோராவர்.

மேலும் தங்களின் பாராளுமன்ற நடவடிக்கைகளின்போது தங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சிலர் என்னிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருந்தனர். சபாநாயகர் என்றவகையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது எனது கடமை. அதனால் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளும் தற்போது என்னால் எடுக்கப்பட்டிருக்கின்றது.

மேலும் கடந்த தினங்களில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதற்கு மிகவும் கௌரவமான முறையில் சபைக்குள் செயற்படவேண்டும். குறிப்பாக சபையில் உரையாற்றுகையில், ஆவேசமான முறையில் செயற்படாமல், ஏனைய உறுப்பினர்களை தனிப்பட்ட ரீதியில் விமர்சனங்களை தெரிவித்து குற்றச்சாட்டுவதிலிருந்து தவிர்த்துக்கொள்ளவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

## பாடசாலைகளில்...

(தொடர்ச்சி)

பாடசாலைகளை மூட வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை சகலரும் நினைவில் கொள்ள வேண்டும் என்று இலங்கை பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

நாட்டில் மீண்டும் கொவிட் பரவல் அதிகரித்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பாடசாலை கட்டமைப்பிற்குள் நிர்வாகப் பிரிவினர் மற்றும் மாணவர்கள் மத்தியில் பெரும்பாலானோர் கொவிட் தொற்றாளர்களாக இனங்காணப்படுகின்றனர். இதனால் சில இடங்களில் கொவிட் கொத்தணிகளும் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு அதிகரித்து வரும் கொவிட் தொற்று பவலைக் கட்டுப்படுத்த வேண்டிய முழுப் பொறுப்பும் பாடசாலை நிர்வாகப் பிரிவினருடையதாகும்.

அதேபோன்று மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் இந்த பொறுப்பு காணப்படுகிறது. சுகாதார விதிமுறைகள் அனைத்தையும் முறையாகப் பின்பற்றுமாறு பெற்றோர் தமது பிள்ளைகளை தொடர்ந்தும் அறிவுறுத்த வேண்டும். குறிப்பாக பாடசாலைகளுக்குள் சுகாதார விதிமுறைகளை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீற வேண்டாம் என்று அறிவுறுத்துவது அத்தியாவசியமானதாகும்.

மாணவர்கள் மாத்திரமின்றி அதிபர், ஆசிரியர்களும், பாடசாலைகளிலுள்ள கல்விசார், கல்வி சாரா ஊழியர்கள் என அனைவரும் சுகாதார விதிமுறைகளை இறுக்கமாக பேண வேண்டும். அவ்வாறில்லையெனில் தற்போது அதிகரிக்க ஆரம்பித்துள்ள கொவிட் பரவலால் மீண்டும் பாடசாலைகளை மூட வேண்டிய நிலைமையே ஏற்படும் என்பதை நினைவில் கொண்டு செயற்பட வேண்டும் என்றார்.

## யாசகம்...

(தொடர்ச்சி)

கையேந்தி யாசகம் பெறும் நிலையும் ஏற்பட்டுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சபையில் குற்றம் சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற கைத்தொழில் அமைச்சு மற்றும் பிரம்புகள்,பித்தளை மட்பாண்டங்கள்,மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம் சாட்டிய அவர் மேலும் கூறுகையில்,

எங்கள் பிரதேசங்களில் பனைகளில் கிடைக்கும் பல பொருட்களை மக்கள் உற்பத்தி செய்கின்றனர். அதில் கூடுதலாக பெண் தலைமைத்துவ குடும்பங்களே ஈடுபடுகின்றன. அவர்கள் பல கைப்பணிப் பொருட்களை செய்யும் வாய்ப்புக்கள் எமது பிரதேசங்களில் உள்ளன. வடக்கு–கிழக்கு மாகாணங்களில் இவ்வாறான உற்பத்திகளை எமது மக்கள் செய்தாலும் அவற்றை என்ன செய்வதென தெரியாதுள்ளனர்.

ஏனெனில் எமது மக்களின் உற்பத்திப் பொருட்கள் வீடுகளில் முடங்கிக் கிடக்கின்றன. ஊரில் ஏதாவது திருவிழாக்கள் வந்தால் மட்டுமே அவற்றை விற்பனை செய்யக்கூடிய வாய்ப்புள்ளது. இவ்வாறான பொருட்களை சந்தைப்படுத்த கைத்தொழில் அமைச்சு என்ன செய்துள்ளதென்பதனை அமைச்சர் இங்கு அறிவிக்க வேண்டும். எனவே எமது மக்களின் உற்பத்திப்பொருட்களை சந்தைப்படுத்தும் வாய்ப்புக்களை கைத்தொழில் அமைச்சு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

இதேவேளை தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு அரசாங்கம் வாக்குறுதியளித்திருந்தது. சிறு கைத்தொழில் முயற்சிகளுக்கு வங்கிக்கடன்கள் மூலம் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுப்பதாக அரசு கூறியிருந்தது. ஆனால் எதுவும் நடைபெறவில்லை. இதனால் முன்னாள் போராளிகள் வறுமை காரணமாக தற்கொலை முயற்சிகளில் ஈடுபடும் அளவுக்கு நிலைமை உள்ளது. பலர் தற்கொலையும் செய்துள்ளனர். மேலும் பல முன்னாள் போராளிகள் வீதிகளில் கையேந்தி யாசகம் பெறும் நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு அரசு எந்த வசதி வாய்ப்புக்களையும் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைக்கின்றேன் என்றார்.

## தேசிய பாதுகாப்பு.......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்று அவர், ஆட்சிக்காக மூட்டிய தீப்பொறி 6 தசாப்த காலமாக இந் நாட்டில் கொழுந்து விட்டெரிந்தது. அது முறையாக அணையமுன்பு ஒரு நாடு ஒரு சட்டமென்று இன்னொரு தீப்பொறியினை ஏற்றுவதற்கு முயல்கின்றீர்கள்.

ஆட்சியதிகாரத்தினைத் தக்க வைக்க வேண்டும் என்ற உங்களது இந்த ஆர்வத்தால் நீங்கள் மூட்டும் இரண்டாவது தீப்பொறி இன்னும் எத்தனை தசாப்தங்களுக்கு நாட்டை எரிய வைக்கப் போகின்றதோ, வரலாற்றிலிருந்து நீங்கள் பாடம் எதனையும் கற்கவில்லை. மீண்டும் மீண்டும் வரலாற்றுத் தவறுகளை இழைத்துக் கொண்டு செல்கின்றீர்கள்.

இதே போன்றுதான் கிழக்குத் தொல்பொருள் ஜனாதிபதி செயலணி என்று ஒன்றை அமைத்து கிழக்கு வாழ் தமிழ், முஸ்லிம்களது பாரம்பரிய வழிபாட்டிடங்களையும், பாரம்பரிய நிலங்களையும் கபளீகரம் செய்ய முயற்சிக்கின்றீர்கள்.

யுத்தம் முடிவடைந்து 12 வருடங்களுக்கு மேலாகியும் வடக்குக்கிழக்கில் இராணுவ முகாம் அமைப்பதும், புதிய படையணிகளை உருவாக்கி அவற்றை வடக்குக் கிழக்கில் இருத்தி வைப்பதும் இன்னமும் முன்னர் கையகப்படுத்திய தனியார் நிலங்களினை மீளக் கொடுக்காது புதிதாக படைத்துறை முகாம் அமைப்பதற்காக பொதுமக்களின் காணிகளை கபளீகரம் செய்வதும் நாளாந்தம் நடக்கும் நிகழ்வுகளேயாகும்.

உங்களை ஆட்சி பீடம் ஏற்றி அலங்கரித்து அழகுபார்த்த பெரும்பான்மை இனத்தின் பெரும்பான்மை மக்கள் இன்று உங்களைச் சரியாக இனங்கண்டுள்ளார்கள். முறையானதும் சரியானதும், பொருத்தமானதுமான தீர்மானம் எடுக்க முடியாதவர்கள் என்பதனை அவர்கள் இனங்கண்டுவிட்டார்கள். இன்று நாட்டில் எழுந்துள்ள வெகுசனக் கிளர்ச்சி இதனை நன்கு வெளிக்காட்டி நிற்கின்றது.

வெளிநாட்டில் விலையுயர்வு ஏற்படின் உள்நாட்டில் விலையும் உயரவேண்டுமென்றால், ஜனாதிபதி எதற்கு, நிதியமைச்சர் எதற்கு, அமைச்சரவை எதற்கு என்று ஓங்கி ஒலித்து லிப்ரன் சுற்றுவட்டத்தை அன்று கலவர பூமியாக்கிய விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் இன்று எங்கே.?

எரிபொருள் விலை ஐந்து ரூபாவால் உயர்த்தப்பட்ட போது பாராளுமன்றத்துக்கு மிதி வண்டியில் படைகுடி சகிதம், இன்றைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சகிதம் வந்த போராட்ட வீரர்கள் எங்கே. 2500 ரூபாவுக்கு ஒருமாதம் ஒரு குடும்பம் வாழ முடியும் என்ற பொருளாதார நிபுணர் பந்துல குணவர்த்தன எங்கே?

இறுதியாக,

மக்கள் கிளர்ச்சி ஆரம்பித்து விட்டது. அது ஆட்சி மாற்றத்தில் மட்டுமே முடியும். அது வரை வேண்டுமானால் உங்கள் அராஜகத்தைத் தொடரலாம். ஆனால், இறுதி வெற்றி நாட்டுக்கும் எமது மக்களுக்குமேயாகும். நீங்கள் அனுபவிக்கும் வெற்றி ஒரு சிறிய காலமாகவே அமையும்.

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 30 10 1937

ஆண்டவன் அடியில் 06 12 2021



## திருமதி தவமணிதேவி ஆனந்தராஜா

அல்வாயை பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி தவமணி தேவி ஆனந்தராஜா அவர்கள் கடந்த 06.12.2021 திங்கட்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற ஆனந்தராஜா அவர்களின் அன்பு மனைவியும் (காலஞ்சென்ற வத்சலா) ஜோர்ஜ். றெஜி ஆகியோரின் அன்புத்தாயாரும் மறின். நிலானி ஆகியோரின் மாமியும் குணாளினி. குணாளன் காருண்யா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் (காலஞ்சென்றவர்களான பத்மாதேவி. விமலாதேவி. அமலாதேவி). கருணாதேவி. தவபாலன். சத்தியபாலன். ஜெயபாலன். பிரேமா தேவி ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் இரவு 8 மணிவரையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3.30 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதன் பின்னர் கல்கிசை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதனை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மகன் - றெஜி யோகேந்திரன் | தொ.பேசி : 0777315447

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 24 11 1943

இறைவன் அடியில் 20 11 2020



கொக்கட்டிச்சோலையை பிறப்பிடமாகவும்
மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். திருமதி. கண்ணம்மை சின்னராசா (பாக்கியம்)

திதி: 09.12.2021

அன்பின் பிறப்பிடமாகவும், பாசத்தின் இருப்பிடமாகவும் எம்மை
எல்லாம் பேணிப் பாதுகாத்த எமது அன்புத்தெய்வம் மறைந்து
ஆண்டொன்று ஆகிவிட்ட போதிலும் எம் துயர் நீங்கவில்லையே!
உங்கள் ஆத்மா சாந்திபெற கொக்கட்டிச்சோலை
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரப் பெருமானையும் மற்றும் மட்டக்களப்பு
ஸ்ரீ கோட்டடி பிள்ளையாரின் பாதத்தினையும் பணிந்து நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தகவல்:
அன்புக் கணவர் - சின்னராசா
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

"சின்னராசா மண்டபம்"
இல. 480, பார் வீதி,
சீலாமுனை, மட்டக்களப்பு.
065 2229660, 077 6669190

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## திருமதி அமிர்தநாயகி மனோராஜ் (அமுதா)

(ஓய்வுபெற்ற உதவிக்கணக்காளர்)

பிறப்பு 17.02.1956 இறப்பு 09.11.2021

நிழல் போல் இருந்தவள் நீ
நினைவாய் மாறினாய்...
கண் இமைக்கும் நேரத்தில்
கண்ணீர் துளியாகினாய்
உன் பிரிவால் துயருறும் உன்

அன்பு மகள் - ம.தாரணி (077 5743515)

# இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவருக்கு கொழும்பில் கௌரவம்

புரவலர் புத்தகப் பூங்கா ஏற்பாடு செய்த இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் முனீருல் மில்லத் பேராசிரியர் கே.எம். காதர் மொஹிதீன் மற்றும் அவரது குழுவினரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (06) கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்றது.

இதன்போது தினகரன் பிரதம ஆசிரியர் தெ.செந்தில்வேலவர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் "முனீருல் மில்லத்" பேராசிரியர் கே.எம்.காதர் மொஹிதீனையும் மரியம் ஹாஷிம் உமர் எழுத்தாளர் வெலிகம றிம்சா முஹம்மதையும் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். அத்துடன் புரவலர் புத்தகப் பூங்காவின் 27ஆவது வெளியீடான சிரேஷ்ட ஊடகவியலாளர் வீ.தனபாலசிங்கம் எழுதிய "ஊருக்கு நல்லது சொல்வேன்'' என்ற நூலின் பிரதியை புரவலர் ஹாஷிம் உமர், செந்தில் வேலவர் ஆகியோர் பேராசிரியர் கே.எம்.காதர் மொஹிதீனிடம் கையளித்தனர். இதன்போது கலை இலக்கியத்துறைக்கு பாரிய பங்காற்றிவரும் புரவலர் ஹாஷிம் உமர் பேராசிரியர் கே.எம். காதர் மொஹிதீன், டாக்டர் மௌலவி ஜலீல் சுல்தான் (மன்பஈ)ஆகியோரினால் கௌரவிக்கப்பட்டார்.



## அட்மிரல் ஒப் த ப்லீட் வசந்த கரன்னாகொடவின் ரிட் மனு :

# காணாமலாக்கப்பட்டவர்கள் சார்பில் தலையீடு செய்ய நீதிமன்றம் அனுமதி

(எம்.எப்.எம்.பஸீர்)

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை வெள்ளை வேனில் கடத்திச் சென்று கப்பம் பெற்றுக்கொண்டு காணாமலாக்கிய சம்பவம் தொடர்பில், கொழும்பு, ட்ரயல் அட்பார் விஷேட நீதிமன்றில் முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் ஒப் த ப்லீட் வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றப் பத்திரம் மீதான வழக்கின் விசாரணைகளை நிறுத்துமாறு கோரி ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதற்கு எதிராக இடையீட்டு மனுதாரர்களாக விடயங்களை முன் வைக்க காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு நீதிமன்றம் நேற்று (8)அனுமதியளித்தது. மனுதாரர் வசந்த கரன்னாகொடவின் சட்டத்தரணி ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, மனுவில் இடையீடு செய்ய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர் உள்ளிட்ட தரப்புக்கு அனுமதியளிக்கக்கூடாது என வாதங்களை முன்வைத்த நிலையிலேயே அதனை நிராகரித்து இந்த அனுமதியளிக்கப்பட்டது. மேன் முறையீட்டு நீதிமன்றின் நீதிபதிகளான சோபித்த ராஜகருணா மற்றும் தம்மிக கனேபொல ஆகிய நீதிபதிகள் இதற்கான அனுமதியை அளித்தனர்.

முன்னதாக கடந்த 2020 ஜூன் 26 ஆம் திகதி மேன் முறையீட்டு நீதிமன்றின் அப்போதைய தலைமை நீதிபதி ஏ.எச்.எம்.டி. நவாஸ், சோபித்த ராஜகருணா ஆகிய இருவர் கொண்ட நீதிபதிகள் குழாம் ரிட் மனு மீதான விசாரணைகள் நிறைவடையும் வரை செல்லுபடியாகும் வண்ணம் ட்ரயல் அட்பார் விஷேட நீதிமன்ற விசாரணைகளுக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தது. அந்த உத்தரவு இன்றும் தொடர்கிறது.

இவ்வாறான நிலையில் நேற்று வழக்கு விசாரணைக்கு வந்த போது, காணாமல் ஆக்கப்பட்ட 5 மாணவர்களின் பெற்றோர்கள் சார்பில், தலையீடு செய்து விடயங்களை முன் வைக்க தமக்கு அனுமதியளிக்குமாறு, குறித்த பெற்றோர் சார்பில் சட்டத்தரணி அச்சலா செனவிரத்னவுடன் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி நுவன் போப்பகே கோரினார்.

எனினும் இதற்கு மனுதாரர் தரப்பின் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா எதிர்ப்பு வெளியிட்டார். அந்த எதிர்ப்பை நிராகரித்த நீதிமன்றம் வழக்கு தொடர்பில் உள்ள ஆட்சேபனைகளை எதிர்வரும் 2022 ஜனவரி 10 அல்லது அதற்கு முன்னர் மன்றுக்கு சமர்ப்பிக்க உத்தரவிட்டு, மனு மீதான விசாரணைகளை 2022 ஜனவரி 31 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது.

வசந்த கரன்னாகொடவின் ரீட் மனுவில் சட்ட மா அதிபர் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ளார். சட்ட மா அதிபருக்காக நேற்று மன்றில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நரின் புள்ளே ஆஜரானார்.

முன்னதாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக காட்டிக்கொண்டு, எந்த பயங்கரவாத செயல்களுடனும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புபடாத அப்பாவி சிவிலியன்களை கடத்திச் சென்று இரகசியமாக தடுத்து வைத்து, கப்பம் பெற முயற்சித்து இறுதியில் அந்த 11 பேரையும் கொலை செய்தமை தொடர்பில் மூவர் கொண்ட ட்ரயல் அட்பார் விஷேட மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

கொலை செய்ய சதி செய்தமை, அதற்காக கடத்தியமை, உடைமைகளை கொள்ளையிட்டமை, பலாத்காரமாக சிறைப்படுத்தி வைத்திருந்தமை, காணாமல் ஆக்கியமை, அது தொடர்பிலான சாட்சியங்களை மறைத்தமை உள்ளிட்ட 667 குற்றச்சாட்டுக்கள் இந்த 14 பிரதிவாதிகளுக்கும் எதிராக சட்ட மா அதிபரால் முன்வைக்கப்பட்டுள்ளன. இதனை விசாரிக்க மேல் நீதிமன்ற நீதிபதி சம்பா ஜானகி ராஜரத்னத்தின் தலைமையின் கீழ் மேல் நீதிமன்ற நீதிபதிகளான அமல் ராஜகருணா, நவரத்ன மாரசிங்க ஆகியோரை உள்ளடக்கியதாக இந்த சிறப்பு ட்ரயல் அட்பார் நீதிமன்றம் பிரதம நீதியரசரால் அமைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கொட்டாஞ்சேனை, தெஹிவளை, வத்தளை மற்றும் கட்டுநாயக்க உள்ளிட்ட பல பிரதேசங்களில் பல்வேறு உத்திகளை கையாண்டு இந்த கடத்தல்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. குறிப்பாக தெஹிவளையில் 2008.09.17 அன்று பெர்னாண்டோ மாவத்தையில் உள்ள அலி ஹாஜியார் அன்வர் என்பவரது வீட்டில் வைத்து அவரும் ரஜீவ நாகநாதன், பிரதீப் விஸ்வநாதன், திலகேஸ்வரன் ராமலிங்கம், மொஹம்மட் திலான், மொஹம்மட் சாஜித் ஆகிய ஐந்து மாணவர்களும் கடத்தப்பட்டிருந்தனர்.

இதனைவிட கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த கஸ்தூரி ஆரச்சிலாகே ஜோன் ரீட், அரிப்பு பிரதேசத்தைச் சேர்ந்த அமலன் லியோன் மற்றும் ன் மற்றும் ரொஷான் லியோன், கொட்டாஞ்சேனையை சேர்ந்த அன்டனி கஸ்தூரி ஆராச்சி, திருகோணமலையை சேர்ந்த தியாகராஜா ஜெகன் உள்ளிட்டோரும் கடத்தப்பட்டிருந்தனர். இவை அனைத்தும் கடந்த 2008 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8 ஆம் திகதிக்கும் 2009 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 ஆம் திகதிக்கும் இடையில் இடம்பெற்றுள்ளதாக சட்ட மா அதிபரின் குற்றப் பத்திரிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## "LG கிராமத்தைக் கட்டியெழுப்பும் பிரமுகர்" நிகழ்ச்சி வாயிலான மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்ட 'உயிரைக் காப்போம் பாதுகாப்பாக இருப்போம்' திட்டம் மக்கள் மயப்படுத்தப்பட்டது

கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர் மட்டத்திற்கு கொண்டு செல்லும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட "LG கிராமத்தைக் கட்டியெழுப்பும் பிரமுகர்" நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மட்டக்களப்பு, சந்திவேலி





கிராம மக்களுக்கான 'உயிரைக் காப்போம் பாதுகாப்பாக இருப்போம்' என்ற கருத்தாக்க திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட உயிர் காக்கும் மேலங்கிகள் வழங்கும் திட்டம் அண்மையில் மக்கள் மயப்படுத்தப்பட்டது.

சந்திவேலி கிராமத்தில் வசிக்கும் 8000 இற்கும் அதிகமான மக்கள் அன்றாட





தேவைகளுக்காக எந்தவித பாதுகாப்பு அங்கியும் இல்லாமல் மிதப்பு படகின் மூலம் சுமார் 300 மீட்டருக்கும் அதிகமான



தூரத்தை ஆற்றைக் கடந்து செல்லவேண்டும். அதேபோல் மழைக்காலங்களில் இவ்வாறு ஆற்றைக் கடப்பது மிகவும் கடினமாகும். இந்த மின் படகில் ஒரு தடவையில் 80 பேர் பயணிக்க முடியும். பாடசாலை மாணவ மாணவிகள், ஆசிரியர்கள், விவசாயிகள், நோயாளிகள் உள்ளிட்ட சகலரும் இந்த இக்கட்டான சூழ்நிலைக்கு முகங்கொடுத்து வருகின்றனர். LG கிராமத்தைக் கட்டியெழுப்பும் பிரமுகர் திட்டத்தின் உதவியோடு கிராம மக்கள் பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் தமது பயணங்களை மேற்கொள்கின்றனர்.

உலகப் புகழ்பெற்ற இலத்திரனியல் உற்பத்தி நிறுவனமான LG நிறுவனம், இலங்கையின் முன்னணி வணிகக் குழுமமான அபான்ஸ் மற்றும் Community Chest of Korea அமைப்பு Korea Friends of Hope International Sri Lanka அமைப்பு (KFHI) ஆகிய நிறுவனங்களின் கூட்டிணைவில் உருவாக்கப்பட்ட "LG கிராமத்தை கட்டியெழுப்பும் பிரமுகர்" திட்டத்தின் மூலம் இலங்கை இளைஞர் யுவதிகளுக்கு அவர்களின் கிராமங்களில் உள்ள தேவைகளை இனங்கண்டு அத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

# வீரகேசரி சிறுவிளம்பரங்கள்

### மைவெளிச்சம்

ஓம் சாயப்பா உங்கள் பிறந்த திகதி வருடம் மாதம் என்பனவற்றுடன் முன்கூடியே தொடர்பு கொண்டு வரவும். காதல் பிரச்சினை, தொழில் பிரச்சினை, குடும்பப் பிரச்சினை, வெளிநாட்டு பயணம் போன்ற பிரச்சினைகளுக்கு முன்கூடியே 077 7368640 தொடர்பு கொண்டு வரவும். www.eswari.com (காலை 10 மணி தொடக்கம் 6.00 மணிவரை) Dr.ஈஸ்வரி Hons JP , இல.21/1/1 ஜெம்பட்டாவீதி கொழும்பு 13.

### சேவை

நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகைத்தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சினேகபூர்வமான சேவை. AAA Gold Center. 076 5684346

### வாடகைக்கு

வெள்ளவத்தையில் நாள் கிழமை வாடகைக்கு மாடி வீடுகள் உண்டு. சகல வசதிகளும் கொண்டது. பாதுகாப்பானது. 077 2105957, 0777 388860, 011 2055308

### விற்பனைக்கு

Nipun Furniture மாபெரும் Sale இப்பொழுது No.43, St.Lucia's Squars (Facing St.Lucia's Street), Kotahena, Colombo - 13 இல் உள்ள மண்டபத்தில் நடைபெறுகிறது. Teak Almaraha, Beds, Sofa TV / Tables, Display Cupboard, Dining Tables, Computer Tables, Display Cupboards, T.V Stands, Writing Tables Office Cupboards, Sammy Cupboards, Pantry Cupboards, Glass LCD TV Stands இன்னும் பல வீட்டுக்கு தேவையான தளபாடங்கள் குறைந்த விலையில் கிடைக்கும். தொடர்பு - 076 8779512 / 077 0622604

### தேவை

பெண் விற்பனையாளர்கள் தேவை. Colombo 13, Wolfendhal Street இல் இயங்கிவரும் இலக்ட்ரோனிக்ஸ் பொருட்கள் விற்பனை, சர்விஸ் கடைக்கு இலக்ட்ரோனிக்ஸ் விற்பனையில் அனுபவம் உள்ள / அனுபவம் அற்ற பெண் பிள்ளைகள் இருவர் தேவை. கம்பியூட்டர் திறமை இருப்பின் விரும்பத்தக்கது. திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். குமார் - 076 082 1979

### வீடு / காணி விற்பனைக்கு

வெள்ளவத்தை பொன்சேகா டெரஸில் 15.4 பேர்ச்சஸ் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. விலை 1 பேர்ச் 12 மில்லியன் பேசித்தீர்மானிக்கலாம். தொடர்பு: Bandara - 077 8046362

### தேவை

கொழும்பு 14 இல் அமைந்துள்ள எமது நிறுவனத்திற்கு களஞ்சியசாலை மேற்பார்வையாளர் (Store Keeper) பெண் (Female) தேவை. தொடர்புகளுக்கு - 071 4888754

### வீடு வாடகைக்கு

கொட்டாஞ்சேனையில் மேல் மாடி 2 அறை கொண்ட வீடு குத்தகைக்கு உள்ளது. மேலும் அளுத்மாவத்தை, மோதர, மட்டக்குளியில் 12 முதல் 25 வரை (பத்த) வீடுகள் உள்ளது. மேலும் கடையுடன் கூடிய 2 அறைகள் கொண்ட வீடொன்றும் சென். மேரிஸ் சேர்ச் மெயின் ரோட்டில் உள்ளது. Crow Island இல் தனி வீடு 35 ஆயிரம் வாடகைக்கு உள்ளது. தொடர்பு - Agent - 075 2372733, 077 5350619

### தேவை

மேசன், வெல்டிங், பொட்டி பெயின்ட் பாஸ் மற்றும் கையுதவியாட்கள் தேவை. தங்குமிட வசதியுண்டு. 071 4017792, 075 0473241

### தேவை

கொழும்பில் உள்ள உணவு வண்டி (Food Truck) ஒன்றுக்கு தோசை போட ஆள் தேவை. வயது (25 - 50) ஆண்/பெண் தேவை. வேலை நேரம் மதியம் 3 தொடக்கம் இரவு 10 மணி வரை. சம்பளம் ரூபா.40,000/=. தொடர்புகளுக்கு - 076 5525408

### ஜோதிடம்

பிரிவால் வேதனையா நல்ல நட்பை இழந்து விட்டீர்களா? வீண் கவலை வேண்டாம் நீங்கள் நினைப்பது நடக்கும் கைரேகை, எண் ஜோதிடம், ஜாதகப்பிரசன்னம் மூலம் தொழில் நஷ்டம், திருமணம், வெளிநாட்டு பயணம், அதிர்ஷ்டம், கடன் தொல்லை நீங்க மற்றும் எதிர்காலத்தை தெளிவாக அறிந்து நிம்மதியுடன் வாழ ஜோதிட மனவள ஆலோசகர் சாமி கங்காதரன் ஐயாவை தொடர்பு கொள்ளுங்கள். 077 2105957 இரகசியம் நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாக்கப்படும். No. 145/1, Galle Road, Colombo - 06. 0777 310088, 011 2055655

### தேவை

076 8958819 மேல் மாகாணத்தில் நடாத்திச் செல்லும் Sun Shine wine இற்கு அனுபவமுள்ள பணியாளர்கள் தேவை. மதுவரி (கலால் வரி) புத்தகம் எழுதுவதற்கும், சமரி (விபரங்கள்) எழுதுவதற்கும் அனுபவமுள்ளவர்கள் மாத்திரம் அழைக்கவும்.

### தேவை

புறக்கோட்டையில் புதிதாக திறக்கப்படும் புடைவை மொத்த வியாபார நிலையத்துக்கு 18 - 40 வயதிற்குட்பட்ட அனுபவமுள்ள / அனுபவமற்ற சேல்ஸ்மேன் தேவை. திறமைக்கேற்ப நல்ல சம்பளம் வழங்கப்படும். மலையக தமிழ் இளைஞர்கள் மாத்திரம் தொடர்புகொள்ளவும். தங்குமிட வசதி உண்டு. 078 4537760

### தேவை

புறக்கோட்டையில் உள்ள மொத்த வியாபார புடைவை நிலையத்திற்கு A/L படித்த கணனி அறிவுடைய Cashier தேவை. வயதெல்லை 18 - 30 தங்குமிட வசதி உண்டு. தமிழ் இளைஞர்கள் விரும்பப்படுவர். 078 4537760

### தேவை

எமது மிளகாய் அரைக்கும் ஆலைக்கு திறமையான அனுபவமுள்ளவர்கள் தேவை. சம்பளம் ரூ.50,000/= முதல். தங்குமிடம் உண்டு. இல.11, வேலுவன வீதி, தெமட்டகொடை. தொடர்புகளுக்கு: 077 1480428

### தேவை

கந்தானையில் மரவள்ளிக்கிழங்கு பொரிக்கும் வேலைத்தளமொன்றுக்கு இரண்டு பணியாளர்கள் அல்லது தம்பதியினர் தேவை. சம்பளம் ரூ.40,000/= - ரூ.50,000/= வரை (ஒருவருக்கு) ஈட்டலாம். 077 5372213

### மணமகன் தேவை

1984, யாழ்.கிறிஸ்தவ நளவர், சதயம், Bank, யாழ்ப்பாணம், பதிவு #6544. புதன்கிழமை. 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு மற்றும் திருமணம் சரி வரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd., 91 - 4/2, Galle Road, Bambalapitya, Colombo - 04.

### உங்களுக்கு அதிர்ஷ்டம்

கவலைப்படாதீர்கள்! உங்களின் வாழ்க்கையில் நீங்கள் என்றும் அதிர்ஷ்டமுடன் வாழலாம். உங்களுக்கு ஏற்படும் எல்லா விதமான பிரச்சினைகளுக்கும் நேரில் அல்லது தொலைபேசி மூலமும் தொடர்பு கொள்ளலாம். தபால் சேவையும் உண்டு. இரகசியம் பேணப்படும். 62 வருட ஆராய்ச்சியும் அனுபவமும் உள்ள உலகப்புகழ் பெற்ற உயர்வான அதி உத்தம மாமனிதர், அதிநவீன நிபுணர். தேசபந்து, தேசகீர்த்தி மௌலானா, மன்பஹா, அல்ஹாஜ், கலாநிதி ரசூல் மன்சூர் ஜேபி, Dr.Razul Manzurr, J.P. Dehiwala. Mobile: 077 2037871, 077 0809623, 076 2289457, 070 1364101

### வீடு விற்பனைக்கு

தெஹிவளை Marine Drive இல் Barracuda Restaurant முன்பாக அழகிய கடல் முகப்புடன் 6 ஆம் மாடியில் 2 படுக்கையறைகள், 1 குளியலறை, 2 Lifts, Gym சகல வீட்டு உபகரணங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு - Shegar 077 1434343 விலை - 19.5 மில்லியன்.

### வீடு/காணி விற்பனைக்கு

மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட மட்டக்களப்பு Medical Faculty இற்கு அண்மையிலுள்ள பிள்ளையாரடி பிரதேசத்தில் திருமலை பிரதான வீதியில் இருந்து 60 மீற்றர் தூரத்தில் 35 பேர்ச்சஸ் உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு. பகுதிபகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். தரகர்கள் தேவையில்லை. 077 2703062

### தேவை

கொள்ளுப்பிட்டி காலி வீதியிலுள்ள ஹோட்டல் ஒன்றிற்கு குக், கிச்சன் ஹெல்ப்பர்ஸ், பரோட்டா, ரொட்டி மேக்கர், Pantry & பார்சல் கவுன்டர் இற்கு வேலையாட்கள் தேவை. 077 9872602

### வாடகைக்கு

சிறிய குடும்பத்திற்கு அல்லது தொழில் புரியும் 5 பெண்கள் தங்கக்கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நேரில் வரவும். இல.124 1/1, ஜெம்பட்டா வீதி, கொழும்பு - 13. 077 8170715

### கடை வாடகைக்கு

களுத்துறை காலி வீதிக்கருகில் 2 மாடிக்கட்டிடம் சகல வசதிகளுடன் வாடகைக்குண்டு. மக்கள் வங்கிக்கு அருகாமையில் உண்டு. தொடர்புகளுக்கு - 074 1272943

### வீடு வாடகைக்கு

Full Seaview 1, 2, 3 படுக்கையறைகள் நாள், கிழமை, மாத வருட வாடகைக்குண்டு. Full Furnished, சமையலறை, உபகரணங்கள், Washing Machine, Fridge, Hot Water, Private Car Park, Security. Euro Homes Shiva - 077 1434343

### வீடு விற்பனைக்கு

பம்பலப்பிட்டியில் 10P காணி பழைய வீட்டுடன் விற்பனைக்குண்டு. 115 மில்லியன். தொடர்பு - 077 8046362




# அதிரடி காட்டிய பிளிப் சால்ட் கொழும்பை வீழ்த்திய தம்புள்ளை



கொழும்பு ஸ்டார்ஸ் அணிக்கு எதிரான நேற்றைய எல்.பி.எல். போட்டியில் 18 ஓட்டங்களால் தம்புள்ளை அணி வெற்றியீட்டியது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தம்புள்ளை ஜெயன்ட்ஸ் அணி நிர்ணயிக்கப் பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட் டுக்களை இழந்து 195 ஓட்டங் களைப் பெற்றுக்கொண்டது. இந்தப் போட்டியிலும் அதிரடி காட்டிய பில் சால்ட் 2 சிக்ஸர்கள் மற்றும் 8 பவுண்டரிகளுடன் 62 ஓட்டங்களை விளாசினார்.

அத்தோடு நஜிபுல்லா ஷட்ரான் 54, தசுன் சானக்க 38 ஓட்டங்கள் வீதம் பெற்று அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த் தினர்.

இதனையடுத்து வெற்றி இலக்கைத் துரத்தக் கள மிறங்கிய கொழும்பு ஸ்டார்ஸ் அணி 18.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 177 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 18 ஓட்டங்களால் தோல்வியைத் தழு விக்கொண்டது.

பந்துவீச்சில் அசத்திய தம்புள் ளையின் நுவன் பிரதீப் 3 விக்கெட் டுக்களை வீழ்த்தினார்.

இன்று தொடரின் ஓய்வு நாளாகும்.




## யானை தாக்கி மைதான ஊழியர்கள் பலி

ஹம்பாந்தோட்டை சூரி யவெவ கிரிக்கெட் மைதான ஊழியர்கள் இருவர் கடந்த செவ் வாய்க்கிழமை யானை தாக்கி உயிரிழந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

குறித்த ஊழியர்கள் இரு வரும் தனது கடமை முடிந்து வீட்டுக்குச் சென்று கொண் டிருந்த போது அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# முதல் பந்தில் விக்கெட்டை இழந்த இங்கிலாந்து 147 ஓட்டங்களுக்கு சுருண்டது



அவுஸ்திரேலியா – இங்கிலாந்து அணிகளுக் கிடையே நடைபெறும் ஆஷஸ் டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலியா அணி தலைவர் கம்மின்ஸ் 5 விக்கெட்டுகளை வீழ்த்த, இங்கிலாந்து அணி 147 ஓட்டங்களுக்கு சுருண்டது.

நேற்று ஆரம்பமான இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட இங்கிலாந்து களமிறங்கி யது, ஆட்டத்தின் முதல் பந்திலேயே ஸ்டார்க் விக்கெட்டை கைப்பற்றி சாதித்தார்.

ரோரி பர்ன்ஸ் முதல் பந்தில் ஓட்டமேதும் பெறாமல் வெளியே றினார்.

அத்தோடு இங்கி லாந்தின் சரிவு ஆரம்பிக்க 50.1 ஓவர்களில் 147 ஓட் டங்களுக்கு சுருண்டது.

கம்மின்ஸ் 5, ஸ்டார்க், ஹசில் வுட் தலா 2 விக்கெட்டுக்கள் வீதம் கைப்பற்றினர்.

## அரையிறுதியில் தோல்வி

பாடசாலை அணிகள் மோதும் 19 வயதுக்குட்பட்ட டிவிஷன் 3 'பி' அணிகளுக்கிடை யிலான அரையி றுதிப் போட்டியில் மாரிஸ் ஸ்டெல்லா அணியை எதிர்த்து நேற்று ஆடிய மாத் தளை இந்து தேசிய கல்லூரி அணி தோல் வியைத் தழுவிக் கொண்டது.

50 ஓவர்கள் கொண்ட இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மாரிஸ் ஸ்டெல்லா அணி முதலில் பந்துவீசத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெ டுத்தாடிய மாத் தளை இந்து தேசிய கல்லூரி அணி 23.2 ஓவர்களில் அனைத்து விக்கெட் டுக்களையும் இழந்து 54 ஓட்டங்களை மாத்திரமே பெற் றுக்கொண்டது.

இதனையடுத்து வெற்றி இலக்கைத் துரத்திய மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரி அணி வெறும் 5.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 55 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.



மாத்தளை தேசிய இந்துக்கல்லூரி அணியினர்...

## இளையோர் சாப் தொடரில் பங்கேற்க புறப்பட்ட

# மகளிர் கால்பந்தாட்ட அணி

எஸ்.ஜே.பிரசாத்



பங்களாதேஷில் எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 19 வயதுக்குட்பட்ட மகளிருக் கான தெற்காசியக் கால் பந்தாட்ட சம்பியன்ஷிப் கால்பந்து தொடரில் பங்கெடுக்கும், இலங்கை இளையோர் மகளிர் அணி நேற்று பங்களாதேஷ் புறப் பட்டது.

மொத்தம் ஐந்து நாடுகள் பங்குபெறும் இந்தத் தொடரில் இலங்கை அணி முதல் நாளின் தனது முதல் போட்டியில் பூட்டான் அணியை எதிர்த்தாடவுள் ளது.

இந்த 19 வயதுக்குட் பட்ட மகளிர் கால்பந்து அணிக்கு நாடு பூராகவும் உள்ள பாடசாலைகளில் இருந்து வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் 23 பேர் அடங் கிய இலங்கை குழாத்தில் நான்கு வடக்கு வீராங்க னைகள் வாய்ப்பைப் பெற் றுள்ளனர்.

யாழ்ப்பாணம் தெல் லிப்பழை மகாஜனா கல்லூரியின் வீராங்க னைகளான ஜோகிதா, கிருஷாசாந்தினி, வெலண் டினா மற்றும் தார்மிகா ஆகியோர் இலங்கையின் இளையோர் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

---

கொவிட் -19 தொற்றுக்குள்ளானவருடன் தொடர்பு

# ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் தனிமைப்படுத்தலில்



ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அந்தோனியோ குட் டரெஸ் ஏற்கனவே கொவிட்- 19 கொரோனா வைரஸ் தொற்றுக் குள்ளான ஒரு உத்தியோகத்த ருடன் தொடர்பு கொண்டமை கண்டறியப்பட்டதையடுத்து அவர் தனிமைப்படுத்தப்பட்டுள் ளதாக இராஜதந்திர வட்டா ரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் அவர் எதிர்வரும் நாட் களில் கலந்து கொள்ளவிருந்த நிகழ்ச்சி களை இரத்துச் செய்துள்ளார்.

அவர் நேற்று புதன்கிழமை மான் ஹட்டன் பிராந்தியத்தில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் ஊடக சங்கத்தின் வருடாந்த கூட்டத்தில் கௌரவ அதிதி யாக கலந்துகொள்ளவிருந்தமை குறிப்பிடத் தக்கது.

அத்துடன் அவர் இன்று வியாழக்கிழமை நைகர் ஜனா திபதி மொஹமட் பஸோம் தலைமையில் இடம்பெறும் தீவிரவாத சவால்கள் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் கூட்டத்திலும் கலந்து கொள்ள விருந்தார்.

# ஜோ பைடன் - புட்டின் உக்ரேன் தொடர்பான 2 மணித்தியால உச்சிமாநாட்டில் பங்கேற்பு



உக்ரேனில் மேற்கொள்ளப்படும் ஆக் கிரமிப்பு நடவடிக்கைகள் ரஷ்ய ஜனா திபதிக்கு எதிராக கடும் பொருளாதார தடைகள் விதிக்கப்படவும் ஐரோப்பாவி லுள்ள ரஷ்யப் படையினரின் இடங்களில் நேட்டோ படையினர் நிலை கொள்ளவும் வழியேற்படுத்தித் தருவதாக உள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு அமெ ரிக்க நேரப்படி நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை இடம்பெற்ற காணொளித் தொடர்பா டல் மூலமான உச்சிமாநாட்டில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

7 வருடங்களுக்கு முன்னர் உக்ரேனிய கிறிமியா பிராந்தியத்தை ரஷ்யா தன் னுடன் இணைத்துக் கொண்ட போது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு அப்பால் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறினார்.

மேற்படி சந்திப்பின் போது புட்டின் தனது இறுதியான நோக்கம் குறித்து எதனையும் குறிப்பிட்டுக் கூறவில்லை எனவும் அவர் எதிர்வரும் வருட ஆரம் பத்தில் நெருக்கடியொன்றைத் தோற்று வித்து மேற்குலகின் கவனத்தை ஈர்க்கத் திட்டமிட்டுள்ளாரா என்பது குறித்து ஊகிக்க உலகை விட்டுவிட்டதாகவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

உக்ரேனிய பிராந்தியத்தில் சுமார் 70,000 ரஷ்யப் படையினர் நிலைகொண்டுள்ள துடன் அந்தப் பிராந்தியத்திற்கு தினசரி மேலதிக படையினரும் ஆயுதங்களும் வந் தடைகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்தக் கூட்டம் ஆரம்பமான போது ஜோ பைட னுக்கு புட்டின் வாழ்த்துகளைத் தெரிவித்த அதேசமயம், ஜோ பைடன் புட்டினிடம் அவரை மீளவும் சந்திப்பதில் மகிழ்ச்சிய டைவதாக கூறினார்.

இதன் போது ஜோ பைடன் புட் டினை நேருக்கு நேராக நோக்கி ரஷ்யா கிறிமியாவை இணைத்துக் கொண்ட வருடமான 2014 ஆம் ஆண்டில் தாம் செய்யத் தவறியதை மேற்கொள்ளத் தாம் தயாராகி வருவதாக தெரிவித்ததாக அமெ ரிக்கத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சுல்லிவன் தெரிவித்தார்.




## உலகச் செய்திகள்

## ஜேர்மனியின் புதிய அதிபராக ஷோல்ஸ் பதவியேற்பு



ஜேர்மனியின் உலகப் போருக்குப் பின்னரான ஒன்பதா வது அதிபராக ஒலாவ் ஷோல்ஸ் நேற்று புதன்கிழமை பதவியேற்றுள்ளார். அவர் அந்நாட்டின் அதிபராக 16 வருட கால மாக பதவி வகித்த அஞ்ஜெலா மெர்கலிடமிருந்து பதவியைப் பொறுப்பேற்றுள்ளார்.

ஜேர்மனிய பாராளுமன்றத்தால் 303 வாக்குகளுக்கு 395 வாக்குகள் வித்தியாசத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ள அவர், 3 கட்சிகளைக் கொண்ட அரசாங்கத்திற்கு தலைமை தாங்க வுள்ளார். சமூக கிறீன் கட்சி மற்றும் சுதந்திர ஜனநாயகக் கட்சி என்பன சகிதம் ஷோல்ஸின் சமூக ஜனநாயகக் கட்சி அரசாங் கத்தை ஸ்தாபித்துள்ளது. மேற்படி அதிகாரக் கையளிப்பானது மெர்கலின் 31 வருட கால அரசியல் வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வருவதாக உள்ளது.

## ஓமிக்ரோன் வைரஸுக்கு ஏற்கனவேயுள்ள தடுப்பூசி மருந்துகள் மூலம் பாதுகாப்பு

உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிப்பு

கொவிட்-19 கொரோனா வைரஸின் திரிபுநிலைக்குள்ளான ஓமிக்ரோன் வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு ஏற்கனவே பாவனையிலுள்ள தடுப்பூசி மருந்துகள் தொடர்ந்து பாதுகாப்பை வழங்குவதாக உலக சுகாதார ஸ்தாபன அதிகாரியான கலாநிதி மைக் ரேயன் தெரிவித்தார்.

முதல் கட்ட ஆய்வுகூடப் பரிசோதனைகள் பைஸர் தடுப்பூசி மருந்தால் தொற்று பகுதியாக தவிர்க்கப்படுவதை காண்பிப்பதாக உள்ளன. தடுப்பூசி மருந்திலுள்ள பிறபொருளெதிரிகள் புதிய தொற்றை நடுநிலையாக்குவதாக கூறப்படுகிறது.

ஓமிக்ரோனானது ஏனைய திரிபுநிலைக்குள்ளான கொரோனா வைரஸுகளை விடவும் தடுப்பூசி மருந்துகளுக்கு தாக்குப் பிடிக்கக் கூடியது என்பதற்கு சான்று எதுவும் கிடையாது என மைக் ரேயன் கூறினார்.

"அனைத்துத் திரிபுநிலைக்குள்ளான கொவிட்-19 வைரஸு களுக்கும் எதிராக பயனுறுதிப்பாடு நிரூபிக்கப்பட்ட தடுப்பூசி மருந்துகள் எம்மிடம் உள்ளன" என அவர் தெரிவித்தார்.

## கொவிட்-19 தடுப்பூசி மருந்துகளை கலந்து வழங்குவது நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்

புதிய பிரித்தானிய ஆய்வு தெரிவிப்பு

கொவிட்-19 கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக முதலாவதாக அஸ்ட்ராஸெனேகா அல்லது பைஸர்/ பயோன்டெக் தடுப்பூசி மருந்தை ஏற்றிக் கொண்ட பின்னர் 9 வாரங்கள் கழித்து மொடர்னா தடுப்பூசி மருந்தை ஏற்றிக் கொள்வது மிகச் சிறந்த நோயெதிர்ப்பு சக்தியை வழங்குவதாக பிந்திய பிரதான பிரித்தானிய ஆய்வொன்று தெரிவிக் கிறது. இரு தடவைகள் ஒக்ஸ்போர்ட் /அஸ்ட்ராஸெனேகா தடுப்பூசி மருந்தை ஏற்றிக்கொள்வதை விடவும் இரண்டாவதாக வேறுபட்ட தடுப்பூசி மருந்தை ஏற்றிக்கொள்வது மிகச் சிறந்த நோயெதிர்ப்பு பெறுபேற்றைத் தந்துள்ளதாக இந்த கொம்.கொவ் 2 என அழைக்கப்படும் ஆய்வின் பின்னணியிலுள்ள ஒக்ஸ்போர்ட் பல் கலைக்கழகப் பேராசிரியர் மத்தியூ ஸ்னப் கூறினார். இரு தடவைகள் அஸ்டா ஸெனேகா/ ஒக்ஸ்போர்ட் தடுப்பூசி மருந் துகளை ஏற்றிக் கொள்வதை விடவும் முதலாவது தடவையாக அந்தத் தடுப்பூசி மருந்தையும் இரண்டாவது தடவையாக மொடர்னா அல்லது நொவாவக்ஸ் தடுப்பூசி மருந்தை ஏற்றிக்கொள்வது உயர் மட்டத்தில் பிறபொருள் எதிரிகளைத் தோற்றுவித்து நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதாக மத்தியூ ஸ்னப் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் பெறுபேறுகள் முதல் இரு தடுப்பூசி மருந்துகளையும் ஏற்றுவதில் தற்போதும் ஈடுபட்டுள்ள நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் பெறும் நாடுகளுக்கு பயன்தருவனவாக அமையும் என அவர் கூறினார்.

Printed and published by Express Newspapers (Cey) (Pvt) Ltd. at No. 267, Raja Mawatha, Ekala, Ja-Ela. On Thursday, December 09, 2021